மாதப் பத்திரிகை

ஆசிரியர்

கா. வே. ராமசந்திரன்

நான்காவது வால்யூம் விக்கிரம வருஷம் மார்கழிப் பகுதி

15—12—1940.

விஷய ஸூசிகை.

விஷயம்:		பக்கம்.
கவிதா விமர்சம்		
1. வெண் தயிர் கடையும் விநோதம்	... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர்	... 705
2. மூன்று ரீதிகள்	... மாயக் கூத்தன்	... 710
3. ஐயமும் ஆச்சரியமும்	... துகளன்	... 712
4. சொல்லும் பொருளும் ஒப்புவமை	... வே. திருப்பதி நாயுடு இடிகரை	... 714
மொழிபெயர்ப்புப் பகுதி		
1. நீலகண்டதீக்ஷிதர் சிவ லீலார்ணவம் முதல் சர்க்கம்	... வாழ்த்து	... 715
2. பசித்த நெஞ்சம்	... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர்	... 719
புதுக் கற்பனைகள்		
1. "சிவபெருமான் தூது"	... ஸ்ரீ வாதூலன்	... 721
2. பிரதாபஸிம்மர் (நாடகம்)	... K. வரதாச்சாரி B.A., B.L.,	... 733
3. திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவல்லி மாலை	... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிஷ்ணமாசாரியர்	... 743
4. ராமனும் ஸீதையும்	.... ஸ்ரீ ராஜநாயகி	... 747
அநுஷ்டானப்பகுதி		
1. பொன்னுச்சியார்	... கார்க்கியன்	... 758
சித்திரப் பகுதி		
1. ராமாயணம்	... ஸி. சிவராமமூர்த்தி M. A.,	... 762

மூன்றுவது வால்யூம் அட்டவணை.

			1
			3
			8
4	ஆறுமுக நாவலர் ...	ஜனககுமாரி	11
5	ரேடியோவும் ரேடியோ நாடகமும் ஒரு விமர்சகரும் ...	கா. வே. ராமச்சந்திரன்	65
6	சிவஞானசுவாமிகள் ...	'ஜனககுமாரி'	71
7	மூன்று குட்டிக் கதைகள் ...	பி. கோதண்டராமன் ...	72
8	மர்மமலர் ...	இளையவாதூலன்	74
9	தகுதி ...	வெ. திருப்பதி நாயுடு ...	75
10	சூர்ப்பணகை ...	'மாயக்கூத்தன்' ...	129
11	சூர்ப்பணகை ...	'கௌண்டின்யன்' ...	133
12	'ராமசந்திரனும் சூர்ப்பணகையும்' ...	கா. வே. ராமசந்திரன் ...	136
13	தமிழ்—சில குறிப்புகள் ...	'ஶ்ரீ' ...	139
14	வாழ்த்து ...	" " ...	194
15	கவிதையின் பெருமை ...	மாயக் கூத்தன் ...	195
16	குறிப்பாலுணர்த்தல் ...	ஶ்ரீ. வே. திருப்பதி நாயுடு ...	196
17	சீதாப்பிராட்டியும்—ருக்மணிப் பிராட்டியும் ...	வே. திருப்பதி நாயுடு ...	307
18	ஶ்ரீராமசந்திரன் ...	"மாயக்கூத்தன்" ...	308
19	சங்கர நாராயணன்	"துகளன்" ...	310
20	அவனிபவனமும் கிரிபவனமும் ...	"கௌசிகன்" ...	311
21	நியாய விளக்கம் (படங்கள்) ...	C. சிவராமமூர்த்தி ...	312
22	சௌசீல்யம் ...	வே. திருப்பதி நாயுடு	321
23	இராம பரிஷ்வாங்கம் ...	"மாயக்கூத்தன் ...	323
24	சொல்லாக்கச் சரிதம் ...	வே. நாராயணன் M.A., M.L., ...	325

புதுக்கற்பனைகள்

1	கடிகாரம் ...	'கை. சு. வே' ...	13
2	செந்நெறி அல்லது சிந்தையின் நிறைவு	ஊ. சா. வேங்கடராமையர் ...	16
3	சந்திரகுப்தன் ...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	17
4	உத்தரபூமி—பதுமைகளின் ஓய்வு நேரம் ...	'வேர்க்கல்லி' ...	33
5	பீமனின் சந்திப்பு ...	'குழற்கோவலன்' ...	39
6	மகாராசாவின் வெள்ள நாக்குட்டி ...	மா. கிருஷ்ணன் ...	77
7	சங்கங்கள் ...	'கட்டி பூசியடிகள்' ...	80
8	சந்திரகுப்தன் ...	K. வரதாச்சாரி B.A., B.L., ...	81
9	கோயிற் கபாடம் ...	ரா. ஶ்ரீ. தேசிகன் ...	94
10	ராமனும் ஸீதையும்	'ஶ்ரீ ராஜநாயகி' ...	95

விஷய ஸூசிகை.

1 சில்பஸ்ரீ மங்கள இதழ்—முடிவுரை ... கா. வே. ராமச்சந்திரன்
2 மங்கள வாழ்த்து ... வே. நாராயணன் ... 1
3 "குயிலின் பாடு" ... 'புனர்வஸு' ... 3
4 சில்பஸ்ரீ வாழ்த்து ... தமிழ் வித்வான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ...

1. வெண் தயிர் கடையும் விநோதம் ... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 705
2. மூன்று ரீதிகள் ... மாயக் கூத்தன் ... 710
3. ஐயமும் ஆச்சரியமும் ... துகளன் ... 712
4. சொல்லும் பொருளும் ஒப்புவமை ... வே. திருப்பதி நாயுடு இடிகரை ... 714

மொழிபெயர்ப்புப் பகுதி

1. நீலகண்டதீக்ஷிதர் சிவ லீலார்ணவம் முதல் சர்க்கம் ... வாழ்த்து ... 715
2. பசித்த நெஞ்சம் ... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 719

புதுக் கற்பனைகள்

1. "சிவபெருமான் தூது" ... ஸ்ரீ வாதூலன் ... 721
2. பிரதாபஸிம்மர் (நாடகம்) ... K. வரதாச்சாரி B.A., B.L., ... 733
3. திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவல்லி மாலை ... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 743
4. ராமனும் ஸீதையும் .... ஸ்ரீ ராஜநாயகி ... 747

அனுஷ்டானப்பகுதி

1. பொன்னாச்சியார் ... கார்க்கியன் ... 758

சித்திரப் பகுதி

1. ராமாயணம் ... ஸி. சிவராமமூர்த்தி M. A., ... 762

மூன்றுவது வால்யூம் அட்டவணை.

கவிதாவிமர்சம்

1	நீராட்டம்	...	வே. திருப்பதி நாயுடு ...	1
2	கண்ணனும் கோபிகைகளும்	...	S. சுந்தரராஜன் (சரித்திர ஆராய்ச்சி மாணவன்) ...	3
3	துறைமங்கலம் சிவபிரகாச சுவாமிகள்	...	ஸ்ரீமதி ஜானகி அம்மாள் ...	8
4	ஆறுமுக நாவலர்	...	ஜனககுமாரி ...	11
5	ரேடியோவும் ரேடியோ நாடகமும் ஒரு விமர்சகரும்	...	கா. வே. ராமச்சந்திரன் ...	65
6	சிவஞானசுவாமிகள்	...	'ஜனககுமாரி' ...	71
7	மூன்று குட்டிக் கதைகள்	...	பி. கோதண்டராமன் ...	72
8	மர்மமலர்	...	இளையவாதூலன்	74
9	தகுதி	...	வெ. திருப்பதி நாயுடு ...	75
10	சூர்ப்பணகை	...	'மாயக்கூத்தன்' ...	129
11	சூர்ப்பணகை	...	'கௌண்டின்யன்' ...	133
12	'ராமசந்திரனும் சூர்ப்பணகையும்'	...	கா. வே. ராமசந்திரன் ...	136
13	தமிழ்—சில குறிப்புகள்	...	'ஸ்ரீ' ...	139
14	வாழ்த்து	...	" " ...	194
15	கவிதையின் பெருமை	...	மாயக் கூத்தன் ...	195
16	குறிப்பாலுணர்த்தல்	...	ஸ்ரீ. வே. திருப்பதி நாயுடு ...	196
17	சீதாப்பிராட்டியும்—ருக்மணிப் பிராட்டியும்	...	வே. திருப்பதி நாயுடு ...	307
18	ஸ்ரீராமசந்திரன்	...	"மாயக்கூத்தன்" ...	308
19	சங்கர நாராயணன்	....	"துகளன்" ...	310
20	அவனிபவனமும் கிரிபவனமும்	...	"கௌசிகன்" ...	311
21	நியாய விளக்கம் (படங்கள்)	...	C. சிவராமமூர்த்தி ...	312
22	சௌசீல்யம்	...	வே. திருப்பதி நாயுடு	321
23	இராம பரிஷ்வாங்கம்	...	"மாயக்கூத்தன் ...	323
24	சொல்லாக்கச் சரிதம்	...	வே. நாராயணன் M.A., M.L., ...	325

புதுக்கற்பனைகள்

1	கடிகாரம்	...	'கை. சு. வே' ...	13
2	செந்நெறி அல்லது சிந்தையின் நிறைவு	....	ஊ. சா. வேங்கடராமையர் ...	16
3	சந்திரகுப்தன்	...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	17
4	உத்தரபூமி—பதுமைகளின் ஒய்வு நேரம்	...	'வேர்க்கல்லி' ...	33
5	பீமனின் சந்திப்பு	...	'குழற்கோவலன்' ...	39
6	மகாராசாவின் வெள்ள நாக்குட்டி	...	மா. கிருஷ்ணன் ...	77
7	சங்கங்கள்	...	'கட்டி பூசியடிகள்' ...	80
8	சந்திரகுப்தன்	...	K. வரதாச்சாரி B.A., B.L., ...	81
9	கோயிற் கபாடம்	...	ரா. ஸ்ரீ. தேசிகன் ...	94
10	ராமனும் ஸீதையும்	....	'ஸ்ரீ ராஜநாயகி' ...	95

11	வாழ்த்துப்பா ...	ஸ்ரீமதி டி. எஸ். ஜானகி அம்மாள் ...	105
12	டெலிபோன் அழைப்பு ...	ரா. ஸ்ரீ. தேசிகன் ...	141
13	கண்டனம், ஆய்வு, சோதனை, பரீட்சை அதன் நன்மை தீமைகள் ...	'கட்டி பூசியடிகள்' ...	143
14	கிளிஞ்சல் ...	மஞ்சேரி ஸ.. ஈச்வரன்—டாக்டர் வே. ராகவன் ...	145
15	சந்திரகுப்தன் ...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	148
16	பக்கிரமீதின் புறுக்கள் ...	மா. கிருஷ்ணன் ...	154
17	பூர்த்தியடையாத சித்திரம் ...	"அஜந்தா" ...	160
18	ஆரண்ய விவாதம் ...	"மா. பா." ...	165
19	கதைக்குக் காலுண்டா? ...	'ஸ்ரீ' ...	170
20	வாடாமல்லிகை ...	"சாலிவாஹனன்" ...	172
21	ஐயோ பாவம்! விசாலாட்சி! ...	'வில்லன்' ...	205
22	அடிசிற்கினியர் ...	ஸ்ரீ. மா. கிருஷ்ணன் ...	213
23	சம்பு நாராயணபுரம் ...	'ஸ்ரீ' ...	216
24	மானஸீ (நாடகம்)	ஸ்ரீ. K. வரதாச்சாரி B.A., B.L., ...	220
25	வாழ்க்கை தாங்கி ...	ஸ்ரீ. மஞ்சேரி ஸ.. ஈஸ்வரன் ஸ்ரீ. வே. ராகவன் ...	229
26	சக்திக் குழவி ...	கானாடு காத்தான் ஸ்ரீ. ராமநாதப்பன்...	232
27	கலப்பில் அழகு ...	"கட்டி பூசியடிகள்" ...	265
28	ப்ரமத்வரை ...	"அஜந்தா" ...	266
29	ராமனும் ஸீதையும் ...	"ஸ்ரீ ராஜநாயகி" ...	272
30	என் செம்பருத்திச் செடி ...	மா. கிருஷ்ணன் ...	278
31	மானஸீ (நாடகம்) ...	K. வரதாச்சாரி B.A., B.L., ...	281
32	கும்பாரா ...	"அஜந்தா" ...	329
33	கடவுளை வென்ற கருமி ...	"பழசு வெட்டி" ...	338
34	உமர் கைய்யூமின் ருபையத்து	"பரத்வாஜன்" ...	342
35	மானஸீ (நாடகம்) ...	K. வரதாச்சாரி B.A., B.L., ...	345
36	ஊருபங்கம் ...	வ. வேணுகோபாலன்	354

கீதப்பகுதி

1	மாரிமுத்துப் பிள்ளை ...	பண்டித ச. சோமசுந்தர தேசிகர் ...	47
2	சங்கீத கட்டுக் கதைகள்	வில்லன் ...	50
3	தியாகராஜ ஸ்வாமிகள் ...	கா. வே. ராமசந்திரன் ...	106
4	கேசவ கீர்த்தனம் ...	டி.. கே. கோவிந்தையர் ...	112
5	சாரங்கபாணி கீதம் ...	,, ,, ...	112
6	ஸ்ரீ ராமகீதம் ...	,, ,, ...	113
7	ஸ்ரீ சரபம் முத்துசாமிக் கவிராயர் ...	,, ,, ...	115
8	தியாகராஜய்யரவர்களின் பெருமை ...	வஸிஷ்ட பாரதி ...	189
9	தமிழ்க் கீர்த்தனம் ...	ஸ்ரீ. ச்யாமா சாஸ்திரிகள்	233
10	,, ,, ...	ஸ்ரீ. சுப்பராய சாஸ்திரிகள் ...	234
11	சுவாதித் திருநாள் மஹாராஜாவின் கிருதி விளக்கம்—சிவபெருமான் தாண்டவம் ...	தமிழ் வித்துவான் R. முத்து அய்யர் ...	304
12	சங்கீதம் எனக்கு பிடிப்பதேன்? ...	R. ஸ்ரீநிவாஸன், M. A., ...	361
13	வாத்யேச்வரீ வீணை	டாக்டர் வே. ராகவன் ...	365

சிற்பப் பகுதி

1	சோளஸிம்ஹபுரம் ...	ஸ்ரீமதி கே. எம். ஸௌந்தரவல்லி அம்மாள் ...	52
2	தென்னாட்டுச் சிற்பங்கள் ...	"பார்க்கவன்" ...	258
3	தேவியின் புகழ் ...	கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் ...	260

அனுஷ்டானப் பகுதி

1 திருவாதிரை ... டாக்டர் வே. ராகவன் ... 55
2 சதாசிவப் பிரமேந்திரர் ... வஸிஷ்டபாரதி ... 120
3 வரகூர் ஸ்ரீ கோபால பாகவதர் ... வ. வேணு கோபாலன் ... 122
4 விக்கிரம வருஷம் ... 'கௌசிகன்' ... 247
5 ஒரு ஊரில் மூன்று மஹான்கள் ... "வஸிஷ்டபாரதி" ... 313
6 சங்கரர் திருமொழி ... "சங்கராடிப் பொடி" ... 383

மொழிபெயர்ப்புப் பகுதி

1 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 60
2 பாரத நாட்டின் புனருஜ்ஜீவனம் ... ஸ்ரீ அரவிந்தர்—கோதண்டராமன் ... 173
3 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 185
4 மறுமலர்ச்சியின் மூன்று படிகள் ... ஸ்ரீ அரவிந்தர்— ஸ்ரீ P. கோதண்டராமன் ... 235
5 கதைக் கடல் ... ஸ்ரீ. வே. ராகவன் ... 240
6 புராணச் சிறு கதைகள் ... 'மா. பா' ... 243
8 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 294
9 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 369

நாடகப் பகுதி

1 தியாகராஜ ஸ்வாமிகள் அனுபந்தம் ... கா. வே. ராமசந்திரன் ... 116

ரேடியோப் பகுதி

1 ரேடியோக்கலை ... 'விசாரதன்' ... 197

பெண்டிர் பகுதி

1 ஜனக நந்தினி (நாடகம்) ... 'ஸுப்ரபை' ... 199
2 ஸ்ரீ ... 'வீதஹவ்யன்' ... 299
3 புராதன அங்கரசனைகள் ... கா. வே. ராமசந்திரன் ... 300
4 வாள்விழியார் வெற்றி ... 'கை. சு. வே.' ... 382

சிறுவர் பகுதி

1 குழந்தைகள் ... 'பாப்பா' ... 203
2 சில பழைய விளையாடல்கள் ... காலஞ்சென்ற ஸு. வை. குருஸ்வாமி சர்மா ... 261

புஸ்தக விமர்சனம்

1 தமிழ்ப் புலவர்கள் வரலாறு ... அகஸ்திய தாஸன் ... 127
1 இராமாயண வெண்பா ... அகஸ்தியதாஸன் ... 251
2 இராமாயணப் புகழ் (2) தோத்திரத் திரட்டு (3) அச்சுதானந்த சுவாமிகள் பதிகம் ... துகளன் ... 253
3 பொருளாதார நூல்—முதற் புஸ்தகம் (2) இந்திய கிராமப் பொருளாதாரம் பற்றிய கட்டுரைகள் (3) நாணயமாற்று ... வே. நா. ... 254

காலஞ்சென்ற நண்பர் ஸ்ரீ சோமசுந்தர தேசிகர்—பத்திராதிபர்

தியாகராஜ ஸ்வாமிகள் வமிசாவளி 188

பத்திரிகாசிரியர் குறிப்புக்கள் ... 191

மாதக் குறிப்புக்கள் 255

சில்பஸ்ரீ யாத்திரை ... கா. வே. ராமசந்திரன் ... 257

மாதக் குறிப்புக்கள் 317

கவிதா விமர்சம்

1	கவியமுதம் ...	வே. திருப்பதி நாயுடு ...	401
2	ஸ்ரீ ராமதரிசனம் ...	'மாயக்கூத்தன்' ...	403
3	கவி பாடுகை ...	'விசாரதன்' ...	406
4	சில விவசாய உவமைகள் ...	'துகளன்' ...	408
5	தமிழ்: சில குறிப்புகள் ...	'ஸ்ரீ' ...	449
6	ஸ்ரீராமரை இராவணன் தரிசித்தல்...	வே. திருப்பதி நாயுடு ...	451
7	கவிதையும் வனிதையும் ...	"துகளன்" ...	453
8	மூப்பு ...	"விசாரதன்" ...	454
9	ஸ்ரீ ராம நாமம் ...	"மாயக்கூத்தன்" ...	455
10	அழகு அழகினை நாடும் ...	"குட்சிபூர்ணன்" ...	513
11	அமுதப் பங்கீடு ...	தமிழ் வித்துவான் R. முத்துவையர்...	515
12	தேசிகமாலைக் கண்ணன் ...	ரே. திருமலை அய்யங்கார் ...	518
13	ஸ்ரீராம சுகந்தம் ...	"விசாரதன்" ...	557
14	ஊடற்சுவை ...	வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ண மாசாரியர் ...	577
15	கைகேயியும் காகுத்தனும்	வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ண மாசாரியர் ...	580
16	"ஈவது விலக்கேல்" அல்லது "வாமனன் வரலாறு" ...	S. ரங்கஸ்வாமி M.A., ...	585
17	சிரிப்பின் பயன்	"மாயக்கூத்தன்" ...	589
18	ஒரு கருத்தொப்புமை ...	"துகளன்" ...	590
19	மனத்துக்கினியான் ...	"விசாரதன்" ...	591
20	தலைவன் பின் சென்ற தனி நெஞ்சம்..	தமிழ் வித்துவான், கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ...	641
21	குறளன் கூனி நாடகம் ...	வரகூர் வேணுகோபாலன்	644
22	ஸ்ரீராம சரிதம் ...	விசாரதன் ...	655
23	வெண்தயிர் கடையும் விநோதம் ...	தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ...	705
24	மூன்று ரீதிகள்	மாயக் கூத்தன் ...	710
25	ஐயமும் ஆச்சரியமும் ...	துகளன் ...	712
26	சொல்லும் பொருளும் ஒப்புவமை ...	வே. திருப்பதி நாயுடு இடிகரை ...	714

புதுக் கற்பனைகள்

1	மானஸீ (நாடகம்) ...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	409
2	அப்பர்	"அஜந்தா" ...	419
3	ஸ்வப்ன வாஸவதத்தம் ...	வே. நாராயணன், M.A., M.L., ...	424
4	ஐயரவாளின் மாப்பிள்ளை ...	"வம்பன்" ...	436
5	சைவவுலகில் ஒருவர் ...	"ஸ்ரீ வாதூலன்"	461
6	ஒரு நாள் கலியாணமும் கங்கை கொண்ட சோழபுரமும் ...	"கலைவாணன்" ...	466
7	ஸாகரிகா ...	கே. என். கணேசன் ...	472
8	மானஸீ (நாடகம்) ...	K. வரதாச்சாரி, B.A., B.L., ...	473
9	டால்மியாபுரம் ...	"காமு" ...	487
10	பிடி காக்கையை! ...	ஸ்ரீ ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., ...	521
11	பிரதாபஸிம்மர் (நாடகம்) ...	K. வரதாச்சாரி B.A., B.L., ...	523
12	காபி கீ ஜே! ...	"விசாலி ராஜம்" ...	534
13	இராயர் சீமை கனவு—ஓர் கற்பனை...	"ராஜம்" ...	537
14	குற்றத்திற்குத் தகுந்த தண்டனை ...	வ. வேணுகோபாலன் ...	541
15	நீதியற்ற கதைகள் ...	"ஸ்ரீ" ...	543

16	வண்ணான் மூட்டை	மா. கிருஷ்ணன்	545
17	மைலாப்பூர் வக்கீல்	மா. பா.	548
18	யாவரும் என்னினும் மேலோர்	பண்டிதர், K. S. சிதம்பரம்	593
19	பிரதாபஸிம்மர்	K. வாதாச்சாரி, B.A., B.L.,	597
20	சகுனம்	"வேய்ங்குழலாயன்"	608
21	அல்லி மலர்	வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்,	610
22	உலகம் சிரிக்கும்	மீனும்பாள்	611
23	ஸ்ரீராம பாவம்	"ஹேரம்பன்"	613
24	போதனு முறைகள்	"ஸ்ரீ"	614
25	கடற்காட்சி	தமிழ் வித்துவான், கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர்	657
26	பிரதாபஸிம்மர் (நாடகம்)	K. வரதாச்சாரி B.A., B.L.,	661
27	குருதக்ஷிணை	குருகுலக் கிலிட்டன்	674
28	ராமனும் ஸீதையும்	ஸ்ரீராஜநாயகி	676
29	கோபம்—பாபம்—சாபம்: அஹல்யை யார்?	குருதத்தன்	684
30	மழை காலம்	மா. கிருஷ்ணன்	689
31	"சிவபெருமான் தூது"	ஸ்ரீ வாதூலன்	721
32	பிரதாபஸிம்மர் (நாடகம்)	K. வரதாச்சாரி B.A., B.L.,	733
33	திருவல்லிக்கேணி ஸ்ரீ வேதவல்லி மாலை	தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர்	743
34	ராமனும் ஸீதையும்	ஸ்ரீ. ராஜநாயகி	747

பெண்டிர் பகுதி

1	சர்க்கார் உத்தியோகமும், ஸ்திரீகளின் உரிமைகளும்	ருக்மிணி சங்கர நாராயணய்யர்	394
2	அவள் எங்கே?	வரகூர் வேணுகோபாலன்	397
3	மங்கையர் தொண்டு	டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை	499
4	மாதர் சங்கங்கள்	பார்வதி	625
5	வாயாடி	R. S. V. மயில் நாச்சியார்	649

சிறுவர் பகுதி

1	கலைக்கோட்டு முனிவர் கதை	S. ரங்கஸ்வாமி, M.A.,	392
2	கிளிக்குப் படிப்பு	டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை	457
3	பூனை	பார்வதி	569
4	துளவமாலை	S. ரங்கஸ்வாமி B.A., அவர்கள் தொகுத்தது	646

சிற்பப் பகுதி

1	வேலூர்க் கோட்டை	S. ஸௌந்தரராஜன், M.A.,	509

ரேடியோப் பகுதி

1	ஒரு விமர்சனம்	கா. வே. ராமசந்திரன்	566

அனுஷ்டானப் பகுதி

1	விஜய தசமி	டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை.	495
2	புதிய யோகம்	"சாதகன்"	497
3	விநாயக வைபவம்	டாக்டர் வே. ராகவன்	558
4	கண்ணபிரானது முகமதிய பக்தர்கள்	"பார்க்கவன்"	563
5	கண்ணா கண்ணே!	"வே. ரா."	565

6 மருதமலை ... "விசாலி ராஜம்" ... 627
7 அஷ்டவிதப் புஷ்பம் ... வே. திருப்பதி நாயுடு இடிகரை ... 629
8 பொன்னுச்சியார் ... கார்க்கியன் ... 758

கீதப் பகுதி

1 ஆனை ஐயா அவர்களின் கீர்த்தனை ... டாக்டர் உ. வே. சாமிநாதையர் ... 385
2 வாத்யேச்வரீ வீணை ... வே. ராகவன் ... 386
3 ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களின் கிருதி விளக்கம்—கண்ணன் குழலூதல் ... தமிழ் வித்வான் R. முத்து ஐயர் ... 489
4 ஸ்ரீதியாகையர் அவர்களது ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள் ... ஸ்ரீ. ய. மஹாலிங்க சாஸ்திரிகள் M.A., B.L., ... 553
5 ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களது உத்ஸவ பிரபந்தம் ... வித்துவான் R. முத்துவையர் ... 617
6 ஸ்ரீஸ்வாதி திருநாள் மஹாராஜா அவர்களது கிருதி விளக்கம்: ராஸக்கிரீடை ... தமிழ் வித்துவான், R. முத்துவையர்.... 698

மொழிபெயர்ப்புப் பகுதி

1 கடற் கன்னிகையும் யவனவீரனும் ... வித்வான் கா. ப. வேங்கடகிருஷ்ணமாச் சாரியார் பாடியது ... 437
2 புது சிருஷ்டியின் ஆரம்ப நிலைமைகள். அரவிந்தர்—P. கோதண்டராமன் ... 440
3 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 501
4 உமர்கையூமின் ருபையத்து ... "பரத்வாஜன்" ... 508
5 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 571
6 உமர்கையூமின் ருபையத்து ... "பரத்வாஜன்" ... 576
7 நீலகண்ட தீக்ஷிதரது கலி விடம்பனம் ... R. S. ஸுந்தரேச சாஸ்திரிகள் ... 630
8 கலி விடம்பனம் ... ,, ,,
9 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 635
10 கதைக் கடல் ... டாக்டர் வே. ராகவன் ... 651
11 நீர்ப்பூ விரியும் நிலையம் ... தமிழ் வித்துவான், கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 691
12 உமர்கையூமின் ருபையத்து ... "பரத்வாஜன்" ... 693
13 நீலகண்ட தீக்ஷிதரது கலி விடம்பனம் ... R. S. ஸுந்தரேச சாஸ்திரிகள் ... 694
14 நீலகண்டதீக்ஷிதரது சிவலீலார்ணவம்—முதல் சர்க்கம் ... வாழ்த்து ,, ,, ... 715
15 பசித்த நெஞ்சம் ... தமிழ் வித்துவான் கா. ப. வேங்கட கிருஷ்ணமாசாரியர் ... 719

சித்திரப் பகுதி

1 நிழல் சித்திர ராமாயணம் .... ஸி. சிவராமமூர்த்தி M.A., ... 762

புஸ்தக விமர்சனம்

1 ஸ்ரீ குருவசன ரமணமாலா குருரமண வசனமாலை ... "அகஸ்திய தாஸன்" ... 448
2 ஸுந்தர ராமாயணமும் ஸதீ விலஸிதமும் ... "வே. ரா." ... 512

1 சில்பஸ்ரீ மங்கள இதழ்—முடிவுரை ... கா. வே. ராமச்சந்திரன் ... I
2 மங்கள வாழ்த்து ... வே. நாராயணன் ... 3
3 "குயிலின் பாடு" ... 'புனர்வஸு' ... 4
4 சில்பஸ்ரீ வாழ்த்து ... தமிழ் வித்வான் கா. ப. வேங்கடகிருஷ்ணமா சாரியர் ... 4

சில்பஸ்ரீ

மங்கள இதழ்

(கா. வே. ராமசந்திரன்)

சுபகரமான பாட்டுக் கச்சேரியை முடிக்கும் கீதத்தை மங்களம் என்பர். இதுபோலவே தமிழ்ப்பணி என்ற சுப கைங்கரியத்தை ஆரம்பித்து நடத்திவந்த சில்பஸ்ரீயின் இப்பகுதி மங்களப் பகுதியாகும். ஆனால் இம்மங்களம் சற்று விபரீதமானது. பாட்டுக்கச்சேரி மங்களத்தைப் போலல்லாமல், இச்சம்பவம் வருந்தத்தக்க தொன்றாகும். எப்படி கோபுரங்களும், மண்டபங்களும், மகா சிற்பங்களும் காலவிரோதத்தால், பூர்த்தியடையாமல் காலளவிலும் அரையளவிலும் நின்றனவோ, அப்படியே சில்பஸ்ரீயும் அபூர்த்தியாகவே தற்சமயம் நின்றுவிடுவதும், காலவிரோதத்தினாலேயே. காலவிரோதமாவது தற்காலத்துத் தமிழ் மக்களுக்குத் தமிழிலும் வித்தையிலும் உள்ள அசிரத்தையும், அனாதரவுமே. இது காரணமாக நாம் 'அட கெடுவாய்! பல தொழிலு மிருக்கக் கல்வி யொன்றே கற்றோம் அறிவில்லாமல்' என்று நமது எழுத்தாளர்களை இடித்துக்கூறி, அன்னவரை குணாட்டியன் பைசாச பாஷையைக் கற்றுப் பெருங்கதை எழுதியது போல, தெலுங்கு, ஹிந்தி முதலிய பாஷைகள் வாயிலாக, தமது கற்பனா ரத்தினங்களை உலகுக்கு அளிக்குமாறு பிரார்த்திக்கும் நிலையில் நாம் இருப்பது, தமிழருக்குப் பெருமை யன்று. தமிழின் சுவையையும், தமிழ்ப்பண்களின் நுட்பங்களையும், நாட்டியம், சிற்பம், சித்திரம், கீதம் முதலிய அருங்கலைகளின் ரஹஸ்யங்களையும், அறிந்தின்புற தமிழர் முன் வருவர் என்று எண்ணியது மனப்பால் குடித்தது போலாயிற்று. இது பரிதவிப்பதற்குரிய விஷயம்.

முன்னொரு காலத்தில் ஒரு குளத்தில், பல வாத்துக்களும், குளக்கரையில் காக்கைகளும் கோழிகளும் வாழ்ந்து வந்தன. இவைகளினிடையே மயில் குஞ்சு ஒன்றும் குயில் குஞ்சு ஒன்றும், சிறு சகோரம் ஒன்றும், குழவி அன்னம் ஒன்றும், கர்மவசத்தால் அங்கு வந்து சேர்ந்தன. குயில் குஞ்சு வளர்ந்து பருவமடைந்து மதுரமாகப் பாட வாரம்பித்தவுடன், அங்குள்ள காக்கைகள் அதைக் கொத்தித் துன்புறுத்தி விரட்டி விட்டன. விசித்திர வர்ணங்களுடன் திகழ்ந்த மயிலும், அத்தகைய வர்ண வைசித்ரியம் பெறாத கோழிகளால், இக் காரணத்தாலே வெருட்டப்பட்டு காடேகியது. இம்மாதிரியே, சந்திர கிரணங்களை அருந்தி உயிர் தரித்த சகோரமும், காக்கைகளின் ஹிம்சையினால் அங்கிருந்து பறந்தோடி விட்டது.

குளத்திலுள்ள வாத்துக்களோ பிரதி தினமும் நீருக்குள் தலை கீழாகவும் கால் மேலாகவும் இருந்து தமது மூக்கினால் சேற்றைக் குடைந்து அங்குள்ள புழுக்களை அருந்துவது வழக்கம். இவை அன்னப் பிள்ளையைத் தங்கள் இனம் என்று எண்ணியதால், முதலில் அதைத் துன்புறுத்த வில்லை. ஆனால் அது தாமரைத் தண்டில் உள்ள இனிய உணவையும், தேனையும், மகரந்தத்தையும் அருந்துவதைக் கண்ட வாத்துக்கள் சந்தேகமடைந்தன. அன்னப்பிள்ளையின் குரலோ அதி மனோஹரமாயும், அதிமதுரமாயும் இருந்தது. அதன் நடையோ, வர்ணிக்க ஒண்ணாத அழகு வாய்ந்திருந்தது. இதன் குரலிலிருந்தும், நடையிலிருந்தும், 'ஹம்ஸத்வனி' 'ஹம்ஸநாதம்' 'ஹம்ஸகிங்கிணி' 'ஹம்ஸகதி' முதலிய கான, நர்த்தன வைசித்திரியங்கள் தோன்றின. ஆனால் வாத்துக்கள் கலஹம்ஸத்தின் அருமை பெருமைகளை அறிவதெப்படி? ஆகையால், அவை ஒன்று சேர்ந்து அன்னப்பிள்ளையைத் துன்புறுத்தித் துரத்தி விட்டன. குளத்தை விட்டுக் கரை யேறிய அன்னத்தை ஒரு நாய் கடிக்க வந்தது. ஒரு எருமை கொம்புகளால் தாக்க முயன்றது, கழுதை உதைத்தது; குரங்குகள் கல்லெடுத்தெறிந்தன. இவைகளின்றும் தப்பி அன்னம் மேன் மேலும் போய்க் கொண்டிருந்தது. நாளடைவில் அதன் இறகுகள் பூர்ணமாக முளைத்து விட்டன. அச்சமயம் குமரியாடித் திரும்பிய ராஜஹம்ஸக் கூட்டம் ஒன்று இவ்வன்னத்தைக் கண்டு, அதை அன்புடன் ஏற்று,

தமது இருப்பிடமான, ஹிமாசவத்தில் உள்ள மானஸ ஸரோவரத்திற்கு அழைத்துச் சென்றன. அங்கு நிர்மலமான ஜல மத்தியில், அன்னமானது தன் இனத்தாரோடு இனிது வாழ்ந்து வந்தது.

இவ்வன்னத்தின் வரலாறே சில்பஸ்ரீ மாதப் பத்திரிகையின் சரித்திரமும். ஆரம்ப முதல் இது வரையில், கதையில் மயில, குயில், சகோரம், அன்னம் முதலியவைகளுக்குக் கிடைத்த உபசாரங்களே, சில்பஸ்ரீயின் பாக மாக அமைந்தன. சில்பஸ்ரீ கோரிய ஆதரவு வெகு அற்பமே. இந்த அற்ப ஆதரவை அளிக்கத் தமிழ் நாட்டில் மனிதர் இல்லை என்றால், யாரை நிந்திப்பது? மயிலின் சாயலும், குயிலின் குரலும், ஹம்ஸத்தின் கதியும் தோஷமெனக் கொள்பவரைத் திருத்துபவர் யார்?

இரண்டு வருஷங்களுக்கு முன்னர், ஸ்ரீமான் என். துரைசாமி ஐயர் அவர்கள், தமது வீட்டில் தமிழ் அபிவிருத்தி காரணமாக ஒரு கூட்டம் கூட்டினர். அச்சமயம் ஐயரவர்கள் ''தற்காலத்துத் தமிழில் சிறு கதைகளைத்தவிர வேறு ஒன்றும் இல்லையா? அழகை ஜீவனாகவுடையவும், ரஸபரிதமாயுள்ளனவுமான இலக்கியங்கள் தமிழில் தற்போது சாத்யமில்லையோ? 'வந்தே மாதரம்' என்ற மஹா கீதம் பாரத சமுதாயத்தையே சிருஷ்டி செய்தது. அதை யொத்த, இலக்கியம் தமிழில் தோன்றாதோ!'' என்றெல்லாம் கேட்டனர். இவ்வினாக்களுக்கு விடையாகவே சில்பஸ்ரீ தோன்றியது. கற்பனா சக்தி வாய்ந்த சில்பஸ்ரீ எழுத்தாளர் பலர், தமது அதிசயக் கற்பனைகளையும், கட்டுரைகளையும், தேவியின் பாத காணிக்கையாகச் செலுத்தினர். இவ்விதழில் உள்ள, 'சிவபெருமான் தூது' என்ற நாடகத்தின் அழகையும், 'பொன்னுச்சியா'ரின் ரஸத்தையும், 'வேதவல்லி மாலை'யின் வாக்கையும், 'பிரதாபஸிம்ம'ரின் வீரத்தையும், முன் பகுதிகளிலுள்ள பல பல அதிசயக் கற்பனைகளையும், கட்டுரைகளையும் தமிழ் மடந்தை இதற்கு முன் கண்டறியாள். சில்பஸ்ரீ இயற்றிய தமிழ்த் தொண்டை, உடன் பதித்துள்ள அட்டவணையில் விரிவாகக் காணலாம். அதை நாம் இங்கு புகழ்வது தற் !புகழ்ச்சியாகும். ஆகையால் அழகும், கற்பனையும் நிறைந்த தமிழ் எழுதுவோர் தமிழ் நாட்டில் பலருளர். அவர்களுக்கென்றே அமைந்தது சில்பஸ்ரீ. ஆனால் தமிழ் நாட்டில் அக்கற்பனைகளைப் படித்தின்புறுவோரைத்தான் காணோம். அத்தகையோர் தமிழ் நாட்டில் உளரேல், இப்பகுதி வேறு வகையான மங்களப் பகுதியாக அமைந்திருக்கும்.

அஜந்தா சித்திரங்களையும், எலோரா சிற்பங்களையும் ஒப்ப சில்பஸ்ரீயின் பூர்த்தியடையாத நிலையே அதன் அழகாகும். சிவபிரான் அபூர்த்தியான அர்புலியை உவந்தெடுத்து தலையில் சூடினானன்றோ? கதிரவனும், அரையுடல் அருணனைத் தனது பிரிய ஸாரதியாகக் கொண்டானன்றோ? ரஸிகர்களும் இவ்வாறே அபூர்ணமாய் நின்ற சில்பஸ்ரீயை என்றும் போற்றுவார்கள்.

சில்பஸ்ரீ பத்திரிகை தற்போது நிறுத்தப்பட்டதால், அதன் லக்ஷியங்கள் மறைந்து விடவில்லை. அவை எப்போதும், ஸஹ்ருதயரின் உள்ளங்களில் நந்தா விளக்கெனக் கொழுந்து விடுவன.

முன்பு இந்திரஜித்து நாகபாசம் விடுத்த போது, அதனால் மோஹ மடையாதவர் யார் என்று விபீஷணன் தேடியது போல், நாமும், ரஸிகர்கள் எங்கு உளர் என்று தேடியலைய வேண்டியிருக்கிறது. சில்பஸ்ரீ மறுபடி தோன்றுதவரையில், அத்தகைய் ரஸிகர்களின் எண்ணிக்கை தமிழ் நாட்டில் மிகக் குறைந்தது என்றே கொள்ளவேண்டும். அப்படி சீக்கிரம் சில்பஸ்ரீ மறுபடியும் தோன்றினால், தமிழ் நாட்டிலும் பல ரஸிகர்கள் உளர் என்று ஒப்புவது அவசியமாகும். தமிழரைப்பற்றிய எமது இந்த அபிப்ராயம் தவறு என்று நிரூபிக்கத் தமிழன்பர் உளரேல், அவர்கள் சில்பஸ்ரீயை மறுபடி தோற்றுவிக்கத் துணை புரிவாராக.

மங்கள வாழ்த்து.

(வே. நாராயணன்)

எனது நண்பர் 'சில்பஸ்ரீ'யைத் தொடங்குமுன், நான் அவரை மிகவும் அதைரியப் படுத்தினேன். பத்திரிகைகள் மலிந்த இக் காலத்தில் ஒரு புதுப் பத்திரிகை எதற்கு என்றேன். ஆயினும் இதர பத்திரிகைகளோடு போட்டி போடாமல் காவியம், ஓவியம் கீதம் நாட்டியம் முதலிய கலா சில்பங்களின் சம்பந்தமாக ஒரு தனிப் பத்திரிகை வேண்டுமென்று அவர் எண்ணினர். 'தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டும்' என்றே தமது பத்திரிகைக்கு எல்லாப் பெருமைகளும் அமையுமாறு பாடுபட்டார். அதன் பயனாக அவர் உபாஸித்த 'சில்பஸ்ரீ' தேவியின் சதுர் புஜங்களிலும் முறையே புஸ்தகம் வீணை அக்ஷமாலை அமிர்த கலசம் என்னும்படியாக, நான்கு 'வால்யூம்' கள் இப்பொழுது விளங்குகின்றன. பல இடையூறுகளுக்கும் மனமுடையாமல் தாம் ஏற்றுக் கொண்ட கைங்கரியத்தை இனிதாகப் பூர்த்தி செய்து விளங்கும் ஸ்ரீ. கே. வி. ராமச்சந்திரன் தமது இஷ்ட தெய்வமான சில்பஸ்ரீ தேவிக்கு மேன் மேலும் பல துறைகளிலே சிறப்புச் செய்வார் என்று நம்புகிறேன். இப்பொழுது செய்து முடித்த வேலை திருக்கோயிலின் கர்ப்பக்கிரஹம் போன்றது. அதனுள் தேவியைப் பிரதிஷ்டித்துக் கும்பாபிஷேகமும் செய்திருக்கிறார். இனி, மீண்டும் இத்திருப்பணியிலே இறங்கி அர்த்த மண்டபம், மகாமண்டபம், பிராகாரம், கோபுரம் முதலியவற்றையும் செய்து முடிப்பதற்கான ஊக்கத்தையும் சௌகரியங்களையும் சில்பஸ்ரீ தேவி தமிழ் மக்கள் வாயிலாக இவருக்கு உதவப் போகும் நற்காலத்தை சமீபத்தில் எதிர்பார்க்கிறேன். திருவருள் கை கூடுவதாகுக.

"குயிலின் பாடு"

(புனர்வஸு)

தோழன்:

குயிலே குயிலே
இன்குரல் குயிலே!
குயிலே பஞ்சம
வின்னிசையாளா!

தேங்கமழ் மாதவ
மாங்கிளை யேறிக்
காதல் வெற்றியை
யூதும் குயிலே!

எங்குன் குயிலே!
எங்கே உன்குரல்?
அஞ்சவ தேனோ?
அஞ்சவ தேனோ?

குயில்:

சுவைபோற்று மருமன்ப
ரவை யிங்கெனக்கில்லை;
காகா வெனக்கத்து
மாகாத காகம்;

உள்ளமதை யிழந்தவர்
கள்ள மொழி கவிகள்;
இங்கேயோ ஆமசென்று
ஆர்க்கும் மதங்கொண்டு;

ஆடு கழுதைகள்
நாடுமோ பாடகரை?
செவிதரும் வள்ளலும்
புவிதனில் இல்லையே!

சில்ப ஸ்ரீ.

வாழ்த்து

தமிழ் வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்.

1 செங்கதிருஞ் சில்பஸ்ரீயுஞ் செய்யின் செகமீதில்
எங்கு மொளிபரப்பு மெந்நாளும்—அங்கவற்றுள்
செங்கதிரோ போழ்துபடுஞ் சில்பஸ்ரீ போழ்துபடா
தெங்கு முலவிவரு மேய்ந்து.

2 இவ்வுலகத் தீண்டு மிருள்கடிந்தே யெந்நாளுஞ்
செவ்வியளிக் கும்பொருள்கள் செப்பிடினே—எவ்வுலகும்
நின்றதமிழ்ச் சில்பஸ்ரீ நேரிழையொன் றுமிரண்டு
நின்றொளிரும் நீள்கதிரு மாம்.



வெண் தயிர் கடையும் விநோதம்.

தமிழ் வித்துவான். கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்.

"தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்க, குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம்."

என்றும்,

"கனைத்திள கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறுக்கும் நற்செல்வன்"*

என்றும்

"ஈரநீர் படிந்திந் நிலத்தே சில
கார்க ளென்ன வருங்கரு மேதிகள்
ஊரின் நின்ற கன்றுள்ளிட மென்முலை
தாரை கொள்ளத் தழைப்பன சாலியே,†

என்றும், கூறும்படிப் பண்டை நாளில் பால் வளம் நிறைந்திருந்தது நம் நாடு. ஆவும், எருமைகளும் நாளுக்கு மூன்று முறை குடம் குடமாகப் பால் தந்தன. ஆய்ச்சியர், அப்பாலைக் காய்ச்சுவதும், காய்ச்சிய பாலைப் பிரை யிட்டுத் தயிர் தோய்ப்பதும், தோய்ந்த தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பதும், பின்னர் மோர் விற்பதும் தங்கள் முதன்மையான வேலையாகக் கொண்டிருந்தனர் என்பது, "முப்போதும் கடைந் தீட்டிய வெண்ணெய்" என்றும், "காலை யெழுந்து கடைந்த விம்மோர் விற்கப் போனேன்" என்றும் வரும் ஆன்றோர் வாக்கினால் அறியலாகும். அவ்வாறு ஆய்ச்சியர் தயிர் கடையும் அழகினைக் கவிஞர்கள் திறம்படக் கவிச்சித்திரத்திற் காட்டி யிருக்குங் காட்சி அறிந்து இன்புறற்பாலது. அக் கவிகளிற் சில வருமாறு :—

* ஆண்டாள். † (கம்பர்.)

*''கள்ளிருள் விடியற் புள்ளெழப் போகிப்
புலிக்குரல் மத்தம் ஒலிப்ப வாங்கி
ஆம்பி வான்முகை யன்ன கூம்புமுகிழ்
உறைபமை தீந்தயிர் கலக்கி நுரை தெரித்துப்
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ
நாண்மோர் மாறு நன்மா மேனிச்
சிறு குழை துயல்வருங் காதிற் பணைத்தோள்
குறுநெறிக் கொண்ட கூந்தல் ஆய்மகள்.''

(கடியலூர் உருத்திரங் கண்ணனார்—பெரும்
பாணாற்றுப்படை)

'நல்ல அழகான உடம்பையும், சிறிய ஓலைச் சுருள் அசைந்தாடுகின்ற காதினையும், மூங்கில் போன்ற தோளினையும், குறுகிய வகிரெடுத்த கூந்தலையுங் கொண்ட ஆய்மகள்,—செறிந்த இருள் நீங்கி உதயமாகுங்காலத்தில் பறவைகளெல்லாந் தூக்கத்திலிருந்து எழுந்திருக்க, புலியின் முழக்கம்போல் மிகுதியாக ஒலிக்கின்ற மத்து ஆரவாரிக்கும்படிக் கடைகயிற்றை வலித்து, குடைக்காளானுடைய வெண்மையான குமிழ்களை யொத்த குவிந்த குமிழ்கள் பொருந்திய வெட்டோடு இறுகத் தோய்ந்த இனிய தயிரைக் கடைந்து, வெண்ணெய் எடுத்து, தயிர் தெறித்த புள்ளிகளோடு கூடிய வாயையுடைய மோர்ப்பானையைப் பூப்போல் மெத்தெனச் செய்த சும்மாட்டின் மேல் வைத்து, காலையிலே மோர் விற்கும்' என்பது மேற் கூறிய அடிகளின் பொருள்.

இதில் இறுகத் தோய்ந்த தயிரின் அழகும், சிறு கொப்புளங்களுடன் விளங்கும் மேலேட்டிற்குப் புள்ளிகள் அரும்பிய பூஞ்சகாளானின் உவமையும், அத்தகைய தயிரை விடியலில் எழுந்து, பறவைகள் தூக்கத்திலிருந்து எழும்படியாகப் புலியின் முழக்கம் போல் முழங்குகின்ற நிலைமத்தினை வலுத்து நின்று கடையுங் காட்சியும், அவ்வாறு கடைந்து வெண்ணெய் எடுத்த பின் மோர்ப்பானை தயிர் தெறித்த புள்ளிகளோடு விளங்கும் அருமையும், கடையும் ஆய்மகளின் அழகும் ஒருங்கே தோன்றக் காட்டியுள்ள கவிச்சித்திரம் எத்துணை அருமை வாய்ந்தது!

இனிக் கவிச் சக்கரவர்த்தியாகிய கம்பர் தயிர் கடையுங் காட்சியைக் கூறுங் கவியினைக் காணுவோம்.

*''தோயம் வெண்டயிர் மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை வாய்விட் டரற்றவும்
தேயு நுண்ணிடை சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர் அங்கை வருந்துவார்.''

'ஆயர் மங்கையர், பாறைபோல் தோய்ந்துள்ள வெண்மையான தயிரைக் கடைகின்ற மத்தொலி விட்டுவிட்டு மிகுதியாக ஒலிக்கவும், அவர்கள் கைகளில் அணிந்துள்ள விசித்திர வேலைப்பாடு அமைந்துள்ள வெள்ளிய சங்கவளையல்கள் கல கல வென்று வாய்விட்டுக் கத்துவது போலக் குலுங்கவும், மெலிந்துள்ள அவர்கள் இடை முன்னும் பின்னுஞ் சென்று சென்று வளையவும், அழகிய கைகள் வருந்தும்படித் தயிர் கடைவார்கள்' என்பது இக் கவியின் பொருள்.

ஆயர் மங்கையர் கைகளில் நிரம்ப வளையல்கள் அணிந்திருப்பதும், கடைகயிற்றைப் பற்றி வலிக்கும் போது அவர் கை வளைகள் குலுங்கியொலிப்பதும், தயிர் மிகுதியினால் நெடுநேரங் கடைய வேண்டியிருப்பதால், அவர் உடல் முன்னும் பின்னும் வளைந்தும் நிமிர்ந்தும் இடை தள்ளாடக் கடைவதும், கைகள் தளர்ந்து அவர்கள் வருந்துவதும், நம் மனக் கண் முன் காட்சி யளிக்குமாறு அமைந்துள்ள இக் கவியின் சிறப்பு இருந்தபடிக் கூறலாமோ!

அதி வீர ராம பாண்டியன் கூறிய தயிர் கடையும் கவிச் சித்திரத்தை யீண்டு நோக்குவோம்.

*[புள்—பறவை. மத்தம்—மத்து. ஆம்பி—பூஞ்சகாளான். முகை—அரும்பு. கூம்பு—கொப்புளம். உறையமை—பாலேடுபடிந்த. நுரை—வெண்ணெய். புகர்—புள்ளிகள். குழிசி—தயிர்ப்பானை. சுமடு—சிம்மாடு. இரீஇ—வைத்துக் கொண்டு. மாறும்—விற்கும். குழை—காதணி. துயல்வரும்—ஆடுகின்ற. பணை—மூங்கில். குறுநெறி—குறுகலானவகிர்.]

*மாய வெள்வளை—விசித்திரமான மேலைப்பாடு அமைந்த வெண்மையான சங்கவளையல்கள். நுண்ணிடை—மென்மையான இடை. வணங்கவும்—துவண்டு போகவும். அங்கை—அழகிய கைகள்.

*"முல்லையங் கோதை நல்லார் முகமதி வெயர்வு
தோன்ற
வல்லிநுண் மருங்குல் நோவ வால்வளை வாய்விட்
டார்ப்ப
மெல்விரல் காந்தள் சேப்ப வெண்டயிர் கடையு
மோதை
கொல்புலி முழக்க மென்ன வயின்றொறுங்
குளிறுமாதோ.',

(நைடதம்.)

'முல்லை மலர் மாலையைச் சூடிய இடைச்சியர் முக சந்திரனில் முத்து முத்தாக வெயர்வை தோன்றவும், பூங்கொடி போன்ற மெல்லிய இடை வருந்தவும், வெண்மையான சங்க வளையல்கள் வாய் விட்டுக் கூச்சலிடவும், மெல்லிய கை விரல்கள் காந்தள் மலர் போல் சிவக்கவும், வெண் தயிர் கடைவார்கள்; அத் தயிர் கடையும் ஒலி, பிராணிகளைக் கொல்லும் புலியின் முழக்கத்தைப் போல அவர்கள் வீடுதோறும் ஒலிக்கும்' என்பது இதன் பொருள்.

இங்கும், தயிரின் மிகுதியினால், அதைக் கடையுங் கஷ்டங் தோன்ற, இடைச்சியர் சந்திரன் போன்ற முகத்தில் முத்து முத்தாக வெயர்வை துளிப்பதும், மாற்றி மாற்றிச் சடை கயிற்றை வலிப்பதால் கைவளைகள் குலுங்குவதும், இடை வளைந்தும், நிமிர்ந்தும் வருந்துவதும், கடைகயிற்றை அழுத்தமாகப் பிடித்து வலிப்பதால் கை விரல்கள் சிவந்து போவதும் ஆகிய இயற்கைக் காட்சி மனம் விட்டு அகலுமோ!

கண்ணபிரான் தயிர் கடைந்த காட்சியைக் கூறுங் கவியை யிங்குக் காண்போம்.

*கோதை—மாலை. வல்லி—கொடி. மருங்குல்—இடை. வால்வளை—வெண்மையானவளை. ஆர்ப்ப—சப்திக்க, காந்தள்—ஓர் பூ. சேப்ப—சிவக்க, ஓதை—ஓசை. வயின் றொறும்—வீடுதோறும். குளிறும்—ஒலிக்கும்.

*"கெண்டை யொண்கண் மடவா ளொருத்தி
கீழை யகத்துத் தயிர் கடையக்
கண்டு, ஒல்லை நானுங் கடைவ னென்று
கள்ள விழியை விழித்துப் புக்கு
வண்டமர் பூங்குழல் தாழ்ந்து லாவ
வாண்முகம் வேர்ப்பச் செவ்வாய் துடிப்பத்
தண்டயிர் நீ கடைந்திட்ட வண்ணம்
தாமோதர மெய்யறிவன் நானே."

(குலசேகராழ்வார்.)

'கெண்டை மீனைப் போன்ற கண்களைக் கொண்ட ஆய்மகள் ஒருத்தி கீழண்டை வீட்டில் தயிர் கடைவதைக் கண்டான் கண்ணன். அவளை யடைந்து தன் வசப்படுத்த வேண்டுமென்று எண்ணினான் அவன். அதனால், அதற்கு ஓர் வியாஜமாக, அவள் அருகிற் சென்று, 'அழகிய பெண்ணே! நீ தயிர் கடைந்து மிகுதியும் வருந்துவதாகத் தோன்றுகிறது; அதனால், உனக்கு உதவியாக நானும் உன்னோடு விரைவில் தயிரைக் கடைந்து தருகிறேன்' என்று அசட்டுப் பார்வை தோன்ற அவளிடஞ் சொல்ல, கண்ணன் கள்ளம் உணராத அவள், ஒரு பக்கத்துக் கடைகயிற்றை யவன் கையில் கொடுத்தனளாக, கண்ணன், அதைப்பற்றி, வண்டுகள் மொய்த்திருக்கும் பூவணிந்த தன் தலைமயிர் முடியவிழ்ந்து அசையவும், ஒளிபொருந்திய முகம் வெயர்வை யரும்பவும், சிவந்த உதடுகள் துடிக்கவும், குளிர்ந்த தயிரைக் கடைந்தனன்', என்பது இக் கவியின் கருத்து. கண்ணன் தயிர் கடைந்த அழகுதான் என்னே!

இனி, பட்டர்பிரான் கூறும் பாசுரத்தை நோக்குவோம்.

"இடையிரு பாலும் வணங்க இளைத் திளைத்து
என் மகள் ஏங்கிக்
கடைகயிறே பற்றி வாங்கக் கைதழும் பேறி
டுங்கொலோ"?

(பெரியாழ்வார் திருமொழி.)

ஆய்மகள் ஒருத்தியைக் கண்ணன் அவள் பெற்றோர் அறியாமல் தன்னோடு அழைத்துச் சென்று விட்டனன். அப் பெண்ணின் தாய்,

*கெண்டை—ஓர்மீன். மடவாள்—இளமை பொருந்தியவள். கீழையகம்—கீழண்டை வீடு. ஒல்லை—விரைவில். புக்கு—புகுந்து.

தன் மகள் புக்ககத்தில் புரிய வேண்டிய வேலைகளை நினைத்து, 'என் மகள் மிக்க இளமையும் மென்மையும் பொருந்திய வளாயிற்றே; அவன் விட்டு வேலைகளை யெல்லாம் செய்ய அவளால் இயலுமோ? மேலும், அவன் வீட்டில் பாலும் தயிரும் நிறைந்து கிடக்குமே; என் மகளுக்குக் தயிர் கடையும் வேலையைக் கொடுத்து விட்டால் என்ன செய்வது; என் மகள் முன்னும் பின்னும் இரு புறங்களிலும் வளைந்து வளைந்து சோர்ந்து சோர்ந்து வருந்திக் கடைகயிற்றைப் பிடித்து வலித்தால், அவள் கைகளில் தழும்பேறிப் போகுமே' என்று வருந்திக் கூறுவதாக வந்துள்ளன இவ்வடிகள்.

இங்கு, நின்று தயிர் கடையும்போது, இடை இருபுறமும் வளைந்து வளைந்து துவண்டு போவதும், கடைகயிற்றைப் பற்றியிழுப்பதால் கைகளில் தழும்பேறிப் போவதும் எத்துணை இயற்கையாகக் கூறப்பட்டுள்ளன!

பட்டர்பிரான் கூறும் இன்னொரு பாசுரத்தையுங் காணுவோம் :—

''வெண்ணிறந்தோய் தயிர்தன்னை வெள்
வரைப் பின் முன் எழுந்து
கண்ணுறங் காதே யிருந்து கடைய வுந்தான்
வல்லள் கொலோ?''

(பெரியாழ்வார் திருமொழி.)

மேற்கவியிற் கூறியபடியே, கண்ணனால் அழைத்துச் செல்லப்பட்ட தன் மகளை நினைந்து ஓர் தாய் வருந்துவதாக வந்துள்ளது இதுவும். அத்தாய், 'என்னுடைய மகள், கிழக்கு வெளுப்பதற்கு முன்னே எழுந்து, மீண்டும் உறங்காமல் இருந்து, தோய்ந்துள்ள வெண்மையான தயிரைக் கடைய வேண்டுமே! இது அவளால், செய்ய வியலுமோ?' என்று தன் மகள் சௌகுமாரியம் தோன்ற இரங்குகிறாள்.

பட்டர்பிரான் பெற்றெடுத்த சூடிக்கொடுத்த நாச்சியார் கூறும் வெண் தயிர் கடையும் விநோதத்தை யீண்டுக் கவனிப்போம்.

''கீசுகீ சென்றெங்கும் ஆனைச்சாத் தங்கலந்து
பேசினபேச் சரவங் கேட்டிலையோ பேய்ப்
பெண்ணே!
காசும் பிறப்புங் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்த தயிரரவங் கேட்டிலையோ!
நாயகப் பெண்பிள்ளாய் நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய்.''

(திருப்பாவை 7)

கோதையார் மார்கழி நீராட்டத்துக்காகத் தன்னொத்த இளமகளிரோடு இல்லந்தோறுஞ் சென்று, துயில்கின்ற தன் தோழிகளையும் எழுப்பிச் செல்கின்றனர். அவ்வாறு தன் தோழியொருத்தியை யெழுப்பும் பாசுரம் இது. அவர், துயில்கின்றவளுக்குக் கிழக்கு வெளுத்து உதயமாவதை யுணர்த்துவதற்கு இரண்டு அடையாளங்கள் கூறுகின்றனர். ஒன்று:—'ஆனைச்சாத்தம் என்ற வலியன் பறவைகள் கலந்து கீசு கீசென்றிடுஞ் சப்தத்தை நீ கேட்கவில்லையோ' என்பது. இரண்டு:— 'ஆய்ச்சியர் தயிர் கடையும் ஓசையும் உன் செவிகளில் விழவில்லையோ' என்பது. ஈங்குத் தயிர் கடையுந் தன்மையை நோக்குவோம்.

'வாசனை பொருந்திய கூந்தலையுடைய ஆய்ச்சியர், கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலியும், ஆமைத்தாலியும் கலகலவென்று ஒலிக்கும்படிக்கையை மாற்றி மாற்றி முன்னும் பின்னுமாகக் கடைகயிற்றை யிழுத்து, மத்தினால் ஒலியுண்டாகும்படிக் கடைந்த தயிரின் ஓசையை நீ கேட்கவில்லையோ? இன்னம் உறங்குகின்றாயே! எழுந்திருப்பாயாக' என்று துயில் உணர்த்துகின்றார் கோதையார்.

புகழேந்திப் புலவர் கூறும் ஓர் கவியை இப்பொழுது பார்ப்போம்.

நாடிழந்து, மக்களைப் பிரிந்து, நடுக்காட்டில் மனைவியோடு பாழ்மண்டபத்தில் நள்ளிரவில் தங்கியிருந்த நளன், தன் மனைவியின் கஷ்டங்களைக்காணச் சகியாதவனாய், அவளைப் பெற்றோர் நகர்க்குப் போக்க நிச்சயித்து, 'இவளை யிங்கேயே விட்டுச் சென்றுவிட்டால், இவள் காலையில் எழுந்து எவ்விதமேனும் தன் பெற்

றோரை யடைவள்' என்று எண்ணி, அவள் துயிலும்போது, அவள் ஆடையிற் பாதி மெதுவாகக் கிழித்துக் கொண்டு, அவளை விட்டுப் பிரிய எழுந்தான். எழுந்தவன் சிறிது தூரம் சென்றான்; அவன் மனம் கேட்கவில்லை; திரும்பி மனைவியிடம் வந்தான்; மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு மீண்டுஞ் செல்ல முயன்றான்; சில அடிகள் எடுத்துவைத்தான்; அவள் தனிமையை நோக்கிப் புலம்பினான்; அவள் அருகு வந்தான். இவ்வாறு அவன் வருவதும் போவதுமாகப் பன்முறை வருந்தி, முடிவில் அவளை அரிதிற் பிரிந்து சென்றான். இந்நிலைக்குப் புகழேந்திப் புலவர்,

> போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டேகும்
> *ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல்
> கடைவார்தங் கைபோல ஆயிற்றே
> காலன் வடிவாய வேலான் மனம்''

(நளவெண்பா 274.)

என்று, தயிர் கடைவாரின் கரங்களை உவமை கூறிய நயம் மிகவும் இன்புறற்பாலது.

மேற்கூறிய சில பாடல்களிலிருந்து நாம் அறியக் கிடப்பன சிலவுள வென்பது ஆழ்ந்து நோக்கின் தெரியவரும்.

தயிர்கடையும் ஒலி; புலியின் முழக்கம் போல் இருக்கவேண்டுமாயின், கடையும் தயிரின் அளவும், அதை வைத்திருக்கும் தாழியின் பெருமையும், நிலைமத்திட்டு ஆய்ச்சியர் நின்று கடையும் வேகமும் எவ்வளவு சிறப்புற்றிருக்க வேண்டும்! இவைகளினால், நம் நாட்டு மாட்டுவளமும், அவைகளை மேய்த்த ஆயர்களின் மிகுதியும், ஆய்ச்சியர்களின் உடல்வன்மையும், நன்கு விளங்க வில்லையா? மற்றும், இப்பாடல்களினால், ஆய்ச்சியர், கரங்களில் சங்கவளையல்களை அணிவதும், காதுகளில் ஓலைச்சுருள்களைத் தோடாகப் பூண்பதும், கழுத்தில் காசும், பிறப்பும் தாலியாகக் கட்டிக் கொள்வதும் ஆகிய அக்காலத்திய ஆபரண விசேஷங்களும் நன்கு வெளியாகும். மேலும், தயிர் கடைவதற்குத் தக்க காலம், கிழக்கு வெளுக்கும் சமயமே என்பதையும் அறிய வேண்டும்.

அக்காலத்தில், நம் நாட்டில் கால் நடைகளைக் கருத்துடனும் கனிவுடனுங் காத்து வந்தமையால் தான், நம் நாடு சீரும் சிறப்பும், செல்வமும் பெற்று விளங்கியதோடு, மக்களும் உடன்வன்மையும், தேக ஆரோக்கியமும், நீண்ட ஆயுளும் பெற்று விளங்கினர். இந்நாளிலோ, நம் நாட்டில் பசுமாடுகளின் பராமரிப்புக் குறைந்து விட்டது; அவைகள் அளவற்ற தீமைகளையும் அடைகின்றன. அதனாலேயே, நம் நாட்டினர் வறுமையாலும், பிணியாலும், அற்ப ஆயுளாலும் அல்லலுறுகின்றனர்.

ஆக்களைக் காக்க அந்நாளில் அவதரித்த கோபாலன், இந்நாளிலும் அவதரித்து, தயிர் வாவியும், நெய்யளறும், பாலாறுமாக நம் நாட்டில் நிறையும்படிச் செய்து, மனைகள் தோறும் வெண்டயிர் கடையும் விநோதம் மீண்டுஞ் சிறக்குமாறு அருள்புரிவானாக.

*ஆயர்—இடையர். அடுபால்—காய்ச்சிய பால். தோயல்—தயிர். காலன்வடிவாய வேலான்—யமன் போன்ற வடிவமைந்த வேலை யேந்திய நளன்.

மூன்று ரீதிகள்.

(மாயக்கூத்தன்)

நமது பழைய கிரந்தங்களை கதை, கவிதை, நூல் என்று மூவகையாகப் பிரிக்கலாம். வடமொழிப் புராணங்கள் கதை என்னும் பகுதியைச் சேர்ந்தன. வேதங்களும் உபநிஷத்துக்களும் இராமாயணமும் கவிதை என்னும் வகையைச் சேர்ந்தன; பிரம்ம சூத்திரம் வியாகரணம் முதலியன, கதை கவிதைகளைப் போலாது, உண்மைகளை மிகச் சுருக்கமாகக் கூறும் 'நூல்' என்னும் வகுப்பைச் சேர்ந்தன.

இது போன்றே, தமிழிலும் தொல்காப்பியம் நன்னூல் முதலியன நூல் எனப்படுவன. எட்டுத் தொகை, பத்துப் பாட்டு, சிலப்பதிகாரம் முதலியன காவியப்பகுதிகளும் காவியங்களுமாம்.

இம் மூவகைப் பாகுபாட்டிலே ஓர் உண்மை அமைந்துள்ளது. பாலர்களும் பாலர் போன்ற மனப் பான்மையுடையவர்களும் கதா ரீதியிலே உண்மைகளை விளக்குவதையே மிகவும் விரும்புவார்கள். நல்ல வயது வந்தவர்கள் கவிதையைக் காதலிப்போர் ஆவர்; ஞானத்தால் முதிர்ந்தவர் "கவிதையால் என்ன பயன்? உண்மையை உள்ளபடி சுருக்கிச் சொல்வதே மேல்" என்று சூத்திர ரீதியை அவலம்பித்து நிற்பார்கள். இந்த ரீதியை அனுசரித்தது திருக்குறள். இப்படி ஒரே உண்மையை மூன்று ரீதிகளிலும் விளக்கக்கூடும் என்பதை ஒரு திருஷ்டாந்தத்தால் காட்டலாம்.

நல்லா றெனினும் கொளல்தீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று

என்னும் குறள் ஒரு அடிப்படையான உண்மையை சூத்திர ரீதியிலே எடுத்துக் காட்டுகிறது.

அவ்வுண்மையைக் கதாரூபமாக அமைக்கும் பௌராணிகர் பலிச் சக்கரவர்த்தியின் கதையால் விளக்கினர். பலி மேலுலகத்தையும் ஆண்டு அனுபவித்து வந்தான். வாமனனாய்த் திருமால் அவனிடம் யாசித்தபோது, சுக்கிராசாரியர், "உன்னதான இம் மேலுலகத்தை உனக்கு இல்லையாக்கி இந்திரனுக்கு மீண்டும் அளிப்பதற்கு வாமன வேஷம் பூண்டு திருமால் வந்துள்ளார்; ஆகையால் ஈதலை மறுத்து விடு" என்று புத்தி கூறினர். "மேலுலகு இல்லையாயினும் ஈதலே நன்று" என்றான் பலிச்சக்கிரவர்த்தி; வாமனன் அந்தணனே யாயினும், அவன் மூவடி மண் யாசித்துப் பெற்றது நன்றன்று என்பதும் இப் புராண கதையால் விளக்கப் பெற்றது.

இவ் வுண்மையை கவிதையிலே அமைக்கும் முறையை கம்பராமாயணத்திலே காணலாம். புராணரீதியாக, பாலகாண்டத்திலே பலிச்சக்கரவர்த்தியின் கதை கூறப்படுகின்றது: "கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்" என்று பலி கூறுவதாகக் கம்பர் பாடுகிறார். ஆனால் இதில் கதை முழுக் கவிதையாகப் பரிணமிக்கவில்லை. அயோத்தியை வருணிக்கும் போது, கம்பர் "யாதுங் கொள்வாரிலாமைக் கொடுப்பார்களுமில்லை மாதோ" என்று பாடுகிறார். இதுவே கவிதா மார்க்கம். அயோத்திமாக்கள் (கொளல் நல்லாறு என்று விதிக்கப்பெற்ற அந்தணர் உள்பட) அனைவரும் "கொளல் தீது" என்ற உறுதிப்பாடு உடையவர்கள். எனவே தன் உயிரைக் கேட்பினும் கொடுக்கும் வண்மை மிகுந்த வமிசத்திலே பிறந்த தசரதன் முதலானவர்களுக்கும் கொடை அசாத்தியம் ஆயிற்று. காட்டிலிருந்து ஒரு அந்தணன் வரவேண்டியதாயிற்று, தசரதன் தன் உயிரினும் பெரிதாகக் கருதிய ஸ்ரீராமனைத் தானஞ்செய்வதற்கு. இவ்வாறு நகரச்சிறப்பைக் கூறும் போக்கிலே வள்ளுவசூத்திரப் பொருளை கவிதா ரஸ பரிதமாகச் செய்கிறார் கம்பர்.

பல கோடி நூறுயிரம் உண்மைகளை ஒரு குறளிலே அமைக்க வல்ல திருவள்ளுவர் அடிப்படையானதோர் பேருண்மையை பத்துக்குறளாலே வற்புறுத்துகிறார். பலபடியான

உண்மைகளை யெல்லாம் கற்றுத் தேர்வதால் என்ன பயன்? ஞானஸ்வரூபனாய் ஸ்ரீகாயத்ரீ ப்ரதிபாத்தியனாயுள்ள வாலறிவனுடைய திருக்கமலபாதங்களிலே தொழுதெழுவதே கற்றதனால் ஆய பயன் அன்றோ? ஒரு ஜீவாத்மாவும் தன்னை அறியாத காலத்திலே திரிவிக்கிரமனாய் சகல ஜீவராசிகளின் தலைகளிலும் தன் திருப்பாதத்தை வைத்ததனால் 'நற்றாள்' என்றும் 'நல்லடிப்போது' என்றும் பெயர் பெற்ற இறைவனது அடியிற் சேர்வதே பரமோபாயம். இவ்வுபாயத்தை உணராது பலர் பிறவிப்பெருங்கடலை நீந்த முயல்வர்; அவ்வாறு முயல்வோர் நீந்தவே மாட்டாது ஆழ்ந்து போவார்கள் என்பர் திருவள்ளுவர். நீந்த முயல்வோர் கடலுள் ஆழாதிருக்க வேண்டுமென்றால், அவர்களுக்கு உதவ ஒரு புணை வேண்டும். பிறவிப் பெருங்கடலிலே நீந்த முயலும் மாந்தர்களுக்கெல்லாம் சிறந்த புணையாவது திருமாலின் திருவடிகளே. அவை நமது சிரங்களிலே வாமனாவதார காலத்திலேயே வைக்கப்பட்டுள்ளன. ஆதலின் அவற்றைப் புணையைப் பற்றிக் கொள்ளும் பான்மையில் நாம் சிரமேற் கரங்குவித்து இறைவனடி சேர்ந்தவர்கள் ஆதல் வேண்டும். "பிறவிக்கடல் நீந்துவார்க்கு உதவும் திருவடியாம் புணையை யுடையவன் இறைவன்" என்று கவிதா ரீதியிலே ஆழ்வாரால் வெளிப்பட்ட உண்மையைச் சூத்திரிப்பது

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேராதார்

என்னும் குறள்.

ஐயமும் ஆச்சரியமும்.

(துகளன்)

இறையனார் அகப்பொருளின் உரையிலே அகத்துறைகளை ஆதிமுதல் கூறும் பகுதியிலே காதலர் இருவரும் தம்முட் கண்ணுறுவதாகிய காட்சித்துறையின் இலக்கணம் கூறிய பின், ஐயம் என்னும் துறை கூறப்படுகின்றது. இத் துறையைப் பற்றிய ஓர் ஐயத்தை இங்கு நீக்க முயல்வேன்.

"ஐயம் என்பது கண்ணுற்றபின் ஐயப்படுவது. எங்ஙனமோ வெனின், வரையரமகள் கொல்லோ வானரமகள் கொல்லோ நீரரமகள் கொல்லோ இத்துணை மேதகவுடையாள். அன்றி மக்களுள்ளாள் கொல்லோ என்று ஐயப்படுவது.............இவளும் இவனை ஐயப்படும். கடம்பமர் கடவுள் கொல்லோ இயக்கன் கொல்லோ அன்றி மக்களுள்ளான் கொல்லோ என்று இங்ஙனம் ஐயப்படும்." இது இறையனாரகப் பொருளுரை.

அணங்குகொல் ஆய்மயில் கொல்கனங்
குழை
மாதர்கொல் மாலும் என் நெஞ்சு

என்னும் குறள் இவ் வகத்துறையை விளக்குவது.

இங்கு கற்போர்க்கு ஏற்படக்கூடிய ஐயம் யாதெனில், தலைவனுக்கு அணங்கோ மயிலோ மாதரோ என்னும் ஐயம் எழுவதாயின், அவனே தலைவியை 'கனங்குழை' என்பது கூடுமோ என்பதாம். பரிமேலழகரும் 'இக் கனவியகுழையுடையாள்' அணங்கோ, ஆய் மயிலோ மாதரோ என்று ஐயப்படுகிறான் என்று உரை காண்பர். ஆதலின், தலைவன் தலைவியைக் கண்டதும் அவள் மானுடமாது என்று உணர்ந்தான் என்பதும், பின்பு ஐயம் கூறுமுகத்தால் அவளுடைய சிறப்புக்களைக் கண்டதால் எழுந்த வியப்பைக் கூறுவதே இத் துறையின் கருத்து என்பதும் தெளிவு. தலைவன் தன் நெஞ்சம் தலைவியிடம் சென்றமையாலும் அவள் எதிர் நோக்கியதாலும் அவள் மானுடமாது என்று கண்டு கொண்டானும் அவளுடைய வடிவும் அவளைக் கண்ட இடமும் சிறந்திருக்கின்றன வாதலின் அச் சிறப்பால் விளைந்த ஆச்சரியத்தை ஐயமொழியாற் கூறுகின்றான்.

மடமானேக்கி வடிவுங்கண்ட
இடமும் சிறந்துழி எய்துவது ஐயம்

என்பது நம்பி யகப்பொருட் சூத்திரம்.

இதற்கு உரை கூறுமிடத்து சுன்னுகம் குமாரசாமிப்புலவர் "எனவே இவை சிறவா வழி ஐயம் நிகழாதென்பதாயிற்று" என்பர்; இவ்வாக்கியம் 1878 ஆம் வருஷத்துப் பதிப்பிலே வல். வை. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள் உதவிய பழையவுரையிலுள்ள வாக்கியத்தை யொட்டி யெழுதப் பெற்றது போலும். அந்த வாக்கியம் வருமாறு :—

எனவே, அவை சிறப்புடைய அல்லாத
காலத்து ஐயம் நிகழாது என்பதாம்.

இதுபற்றியே பரிமேலழகரும் 'அணங்கு கொல்' என்பது வடிவு சிறந்ததைக் குறிப்பதாகவும் 'ஆய்மயில் கொல்' என்பது இடம் சிறந்ததைக் குறிப்பதாகவும் கொண்டனர். "எழுதலாகா வுருவும் தன் வருத்தமும் பற்றி 'அணங்கு கொல்' என்றும் சாயலும் பொழில்வயின் நிற்றலும் பற்றி 'ஆய்மயில் கொல்' என்றும் தன் நெஞ்சம் சென்றமையும் அவள் எதிர் நோக்கியவாறும் பற்றி மாதர் கொல் என்றும் கூறினான்" என்பது பரிமேலழகர் உரை.

வறிஞனுக்கு பெருநிதி கிடைத்தபோது அந் நிதியை மெய்யாக உடையவனாயினும் அவன் எங்ஙனம் "இது கனவோ நனவோ?" என்று ஐயுறுவதாகக் கூறி அவனுக்கிருக்கும் வியப்பை வெளிப்படுத்துவானோ, அது போன்று கவிதா

ரஸம் ததும்ப அமைந்தது இவ் வகைத்துறை. திருவள்ளுவர் இக் கவிதா ரீதியை பிற குறள்களிலும் கையாண்டுள்ளது யாவரும் அறிந்ததே.

கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல்
நோக்கம் இம்மூன்று முடைத்து

என்பதை நோக்குக.

ஒரு மாணிக்கத்தை நெடுவழியிற் கண்டெடுத்த இரத்தின வியாபாரி தான் அதனை நன்கு பரீக்ஷித்து அது சாதி மாணிக்கமே என்று கண்டறிந்தும், தனக்கு பரம லாபம் அகஸ்மாத்தாகக் கிடைத்ததை நினைந்து வியந்து 'இது குருவிக்கல்லோ அல்லது மாணிக்கமேயோ?'' என்று ஐயமொழி கூறுவது போன்றது ஐயமென்னும் அகத்துறையில் அமைந்த பாடல்.

இத்தகைய ஐயத்தை அகப்பாட்டு அல்லாத கவிதையிலும் காண்கிறோம். 'ஏழையராவி யுண்ணும்' என்னும் திருவாய்மொழி இவ் வகைப்படும். ''ஏழையர் ஆவி உண்ணும் இணைக்கூற்றங் கொல்லோ? ஆழியங் கண்ணபிரான் திருக்கண்கள் கொல்லோ?'' என்று ஆழ்வார் கண்ணன் கண்கள் என்று அறிந்து வைத்தும் ஐயமுற்றார் போலப் பேசுகிறார். ஹனுமான் சீதாப்பிராட்டியைக் கண்டு அவள் ஸ்ரீராமனது தேவியே என்று நிச்சயித்த பின்பும் அவளை நோக்கி ''அம்மா, நீங்கள் தெய்வப் பெண்ணோ, மானுடப் பெண்ணோ, கூறல் வேண்டும்'' என்று ஐயப்பாடுற்றவன்போல வினவியதாக ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலே கூறப்பட்டுள்ளதும் ஒப்பு நோக்குதற்குரியது. நோக்கவே, ''களவியலினுள்ள ஐயமென்னும் துறை உண்மையாக ஐயத்தைக் கூறுவதன்று; தலைவனுக்கு காட்சியால் எழுந்த வியப்பினையே கவிதை முறையிலே ஐயமாகவும் தெளிவாகவும் அமைத்துக் கூறுவர் பழந் தமிழ்ப் புலவர்'' என்பது புலனாகும்.

சொல்லும் பொருளும் ஒப்புவமை.

(வே. திருப்பதிநாயுடு இடிகரை)

கம்பநாட்டாழ்வார் அருளிய ராமகதையைப் புலவர் திலகமாகிய புகழேந்திப் புலவரானவர் நன்கு ஆராய்ந்து அவரது கொள்கைகளையும் கருத்துக்களையும் சொற்களையும் தாம் பாடிய நளவெண்பாவில் பல இடங்களில் அப்படியே அமைத்துள்ளார். ஆழ்ந்து நோக்குவோருக்குக் கம்பரது சிஷியன் புகழேந்தி எனவே தோன்றும் படியாயிருக்கும். உதாரணமாக—கம்பநாடர் முதலில் காப்புச் செய்யுள்,

''தருகை நீண்டதயரதன்றன்தரும்
இருகை வேழத்திரா கவன்றன்கதை
திருகை வேலைத் தரை மிசைச் செப்பிட
குருகை நாதன் குரை கழல் காப்பதே''

என்னும் பாசுரத்தால் தனது வழிபடு கடவுளாகிய நம்மாழ்வாரை வாழ்த்துகிறார். புகழேந்தியும் அந்தக் கொள்கையையே பின் பற்றி—

''நேசரிதங்கூர நிலவலயந்தாங்கு நளன்
மாசரிதங்கூற வருந்துணையா—பேசரிய
மாமகிழ் மாறன் புகழாம் வண்டமிழ்
வேதம்விரித்த
மாமகிழ் மாறன்றண்மலர்''

இவ்விரு செய்யுள்களும் கொள்கையைத் தழுவியது இனி கருத்தொப்புப்பற்றி.

சீதாபிராட்டியின் விவாகத்துக்காக மிதிலை நகருக்குச் சென்ற தசரத சக்கரவர்த்தியின் சேனை சமுத்திரத்தின் பரப்பை வர்ணிக்கும் பாலகாண்டம் எழுச்சிப்படலத்தில்

''உழுந்திட விடமிலை யுலக மெங்கணும்
அழுந்திய உயிர்க்கெலா மருட் கோம்
பாயினன்
எழுந்திலன் யெழுந்திடைப் படருஞ் சேனை
யின்
கொழுந்து போய்க் கொடிமதின் மிதிலை
கூடிற்றே''

நள வெண்பா சுயம்வரகாண்டம். தமயந்தியின் சுயம்வரத்துக்காகக் குண்டினபுரத்துக்குச் சென்ற நளமகாராஜாவின் சேனைப் பரப்பின் மிகுதியை கூறும் வெண்பா—

''சடைச் செங்நெல் பொன் விளைக்குந்
தன்னாடு பின்னாக்
கடற்றானை முன்னாகக் கண்டான்—அடற்
கமைந்த
வில்லியரும் போற்றும வீமன்றிருமகளாள்
நல்லுயிரும் வாழு நகர்''

கம்பராமாயணம் பாலகாண்டம் கோலங்காண் படலம்

''அமிழ்மைத்துணைகள் கண்ணுக்
கணியென வமைக்குமாபோல்
உமிழ்சுடர்க்கலன் கணங்கையுருவினை
மறைப்பதோரார்

நளவெண்பா சுயம்வர காண்டம்

இன்னுயிர்க்கு நேரே—யிள முறுவலேன்
கின்ற
பொன்னழகைத்தாமே புதைப்பார்போல்

இனிச் சொல்லும் பொருளும் ஒப்பு. அயோத்தியாகாண்டம் சூழ்வினைப்படலம்.

எண்டருங்கடை சென்றயாம மியம்புகின்றன
வேழையான்
வண்டு தங்கிய தொங்கன் மார்பன் மயங்கி
விம்மியவாறெலாம்
கண்டு நெஞ்சு கலங்கியஞ் சிறையான
காமர் துணைக்கரங்
கொண்டு தம்வயிறெற்றி யெற்றி விளிப்ப
போன்றன கோழியே

நளவெண்பா கலிதொடர் காண்டம்.

''தையறுயர்க்குத் தரியாது தஞ்சிறகாங்
கையான் வயிறலைத்துக் காரிருள்வாய்—
வெய்யோனை
வாவுபரித்தேரேறி வாவென்றழைப்பன
போற்
கூவினவே கோழிக்குலம்''

இங்ஙனம் பல ஒப்புமைகள் இவ்விரண்டு நூல்களிலும் காணப்படுகின்றன; விரிவஞ்சி விடுக்கப்பட்டது.



மொழிபெயர்ப்புப் பகுதி.

நீலகண்டதீக்ஷிதர்—சிவ லீலார்ணவம்

முதல் சர்க்கம்.

வாழ்த்து

(1) எந்தக் கங்கையின் ஜலம் இயற்கையிலேயே மிக்கப்பரிசுத்தமுள்ளதோ, மேலும் சிவபிரான் சிரத்திலிருந்து வந்ததால் முன்னிலும் பரிசுத்தமானதோ, உலகத்திற்கெல்லாம் தாயாகிய பார்வதி சிவபிரானிடம் கோபங் கொண்டு அவர் தன்னை வணங்குங் காலத்தில் சிரத்தில் பெண்ணுருவத்துடன் கங்கையைக் கண்டு காலாலுதைப்பதனால் எது விச்வஜனனியின் திருமலரடியில் பட்டு மிக்கப் பரிசுத்தமடைந்ததோ அந்தக் கங்கா ஜலம் நம்மைக் காக்கட்டும்.

(2) பரமாணு (எது இரண்டாகப் பிரிக்க முடியாதவாறு அவ்வளவு சிறிய அளவோ அது) அளவு உள்ளதும், ஆகையாலேயே மற்ற அவயவங்கள் போல் பிரிக்க முடியாததும். சிவபிரானுக்கும், உமையாளுக்கும் பொதுவாக ஒன்றாயுள்ளதுமான மனது வம்சபரம்பரையாய் அடிமையாயுள்ள என்பால் அருள் நிறைந்ததாக இருக்கட்டும். (இதனால் தீக்ஷிதரவர்கள் அர்த்த நாரீச்வரரைத் தனது இஷ்டதெய்வமாகக் கொண்டிருக்கிறார் என்பது விளங்குகிறது. இதே அபிப்பிராயத்தில் (நீலகண்டவிஜயம் என்ற நூலிலும் தனது மங்களத்தை யமைத்திருக்கிறார்.)

(3) ஒருமீன் முன்னொரு காலத்தில் கடலில் மூழ்கி வேதங்களைத் தேடித் தேடியலைந்து மிகக்களைப்புற்றது. அதை நான் தியானித்து வணங்கவில்லை. ஆனால் மற்றொரு மீன் பற்பல வேதங்களால் தேடப்பட்டு வருகிறது. அதையே நான் துதிக்கிறேன். அந்த மீன் யாது? தாயே உனது திருக்கண்ணேயதுவாகும். (மீனாக்ஷியின் துதி.)

(4) ஒருவர் தாயின் ஸ்தனங்களிலிருந்து பெருகிய ஞானப்பாலைப் பருகி மஹாகவியாக

விளங்கினர். (இது திருஞானசம்பந்தரைக் குறிப்பது) மற்றொருவர் தாயின் தம்பலத்தை யருந்திக் கவியானர். (இது மூககவியைக் குறிப்பது) ஆனால் நான் அவ்விருவரையும் விடப் பெருமையடையவேண்டி அவ்விருவருக்கும் அனுக்ரஹமளித்த ஸ்தானங்களுக்கு (ஸ்தனம், வாய்) மேலேயுள்ள கடைத்திருவிழியை வணங்குகிறேன் தாயே!

கவிகளின் சிறப்பு.

(8) உத்தம கவிகள் தங்கள் புகழை உலகில் எவ்விதம் பரவச் செய்கிறார்கள்? கவித்திறமை என்னும் மணியை அடித்துத் தொனியை வெளிப்படுத்தினர்கள். எவ்வளக்கெவ்வளவு அம்மணியிலிருந்து வரும் தொனி(ஓசை) அதிகப்படுகிறதோ அவ்வளக்கவ்வளவு அதற்கு மதிப்பும் அதிகப்படுகிறது. தொனி என்பது காவியத்தின் உயிர். இது காவியத்திலடங்கிய சொற்களால் விளக்கப்பட்ட பொருளிலிருந்து ரஸிகர்களுக்கு மட்டிலும் புலப்படக்கூடியது.)

(11) கலைமகள் எல்லோருக்கும் புலப்படக்கூடிய இடங்களிலேயே பகிரங்கமாகச் 'சொற்கள், பொருள்கள்' என்கிற ரத்னங்களை வாரி இறைத்திருக்கிறாள். எனினும் அவைகள் எல்லோருக்கும் புலப்படுவதில்லை. பல கவிகள் அதைக் கூர்ந்து கண்டு பிடிக்க முயலுகிறார்கள். அவர்களிலும் எவனோ ஒருவனுக்குத்தான் அவைகள் புலப்படுகின்றன. (அவன் தான் மஹாகவி.)

(13) நாம் வழங்கும் சொற்களையே கவிகளும் வழங்குகிறார்கள். நாம் எப்பொருள்களைச் சொற்களிலிருந்து தெரிந்து கொள்ளுகிறோமோ, அப்பொருள்களையே விளக்குகிறார்கள். ஆனால் அவைகளையே நாம் அமைப்பது போலில்லாது மாற்றியமைத்து அவைகளுக்குத் தனிப்பட்ட சிறப்பை யூட்டி உலகைப் (ரஸிகர்களை) பரவசப்படுத்தி விடுகிறார்கள்.

(14) உலகில் உயிரற்றவைகளான வீணை, புல்லாங்குழல் முதலிய வாத்தியங்கள் கீதங்களைப் பாடுகின்றன. அச்சுவையைச் சிறுவர்களும் அனுபவிக்கிறார்கள். விலங்குகளுமனுபவிக்கின்றன. ஆனால் காவியங்களை யியற்றவோ, அல்லது இயற்றப்பட்ட காவியங்களைப் பரீக்ஷித்துத் தெரிந்து கொள்ளவோ இரண்டு அல்லது மூன்று நபேர்கள் உளரோ இலரோ (என்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது.)

(15) சொற்களென்பது சிவபிரானின் இடது பாகமாகும். பொருள் வலது பாகம் அச்சொற்களும், பொருளும் இனிது அமைந்த காவியத்தின் உருவம் சிவபிரானின் உருவமேயாகும். ஸகலமங்களங்களையு மளிக்கத்தக்க அவ்வடிவம் மஹாபுண்ணியசாலிகளுக்கல்லாமல் மற்றவர்களுக்கு விளங்குமா?

(20) ஈசனை வேதங்கள் 'ஸர்வக்ஞன்' (எல்லாமறிந்தவன்) என்று சொல்லுகின்றன. அதன் பொருள் உலகிலுள்ள எல்லாவற்றையும் அவர் அறிவார் என்பது. ஆனால் கவிகள் தம் புத்தி மலர்ச்சியினால் அதே பொருள்களை எங்கெந்த விதமாகத் தெரிந்து கொள்வார்களோ அதை மட்டும் சிவனறியார். (அதாவது ஈசன் பொருள்களை, உள்ளவைகளை உள்ளபடி தெரிந்து கொள்ளுகிறார். கவிகளோ உள்ளபொருள்களையே பல விதமாகத் தெரிந்து கொள்ளுகிறார்கள். இல்லாதவைகளையும் கற்பனை செய்து விடுகிறார்கள் என்று ஒரு பொருள். ஈசுவரன் ஸர்வக்ஞனாயினும் கவிகளினறிவின்போக்கைமட்டிலுமறியான் என்பது மற்றொன்று.)

(24) மனிதனைத் தன்னுயிர்க் காதலிபோல் பரவசப்படுத்துவது கவியின் வாக்கே. மற்ற எவ்விதக் கலைச் சுவைகளிலும் மனத்தைப் போகவிடாது கட்டுவது இதுதான். நீண்ட காலத்தையும் நொடிப்பொழுது போல் தோற்றுவிப்பது மிதுவே.

(26) பிராணயாமம், புலன்களை ஜயித்தல், பிரம்மசரியம், உணவின்மை முதலிய எவ்விதத்துன்பமுமில்லாமல் தன் மனதை யசையாது சிவபிரானிடம் ஒப்புவிக்கக் கவிகளுக்குத்தான் தெரியும்.

காவிய விமர்சம்

(32) காவியத்தின் சரீரமான சொற்களும் பொருள்களும் எல்லோருக்கும் தெரிந்தவைகளே. ஆனால் அவைகளை அந்தந்த இடங்களில் பார்த்து அமைப்பது மட்டிலும் எல்லாருக்கும் விளங்குவதில்லை. அவ்வித அமைப்புக் கவிகளுக்குத்தான் புலனாகிறது. அவ்வமைப்புப் பெற்றதுதான் காவியமாகும். அமைப்பிலுள்ள மாறுபாட்டைப் பொறுத்தே காவியங்களும் உயர்வு தாழ்வுகளைப் பெறுகின்றன.

(34) சொற்கள் அழகியவைகளாயிருந்த போதிலும் அமைப்பிலுள்ள மாறுபாட்டினால் அழகுகள் குன்றிப் போகின்றன. ஒரு அழகிய உயர்ந்தரத்தினங்களிழைக்கப் பெற்ற ஓலையைக் காதிலணியாது மூக்கிலணிந்தால் எப்படியிருக்கும்?

(35) பல அழகிய சொற்களைக் கொண்டு அமைக்கப்பெற்ற காவியத்தில் ஏதாவது ஒரு சொல் மாறுபட்டு அமைந்து விட்டால் உதட்டிற்கு வெளியில் தலை காட்டிக் கொண்டிருக்கும் ஒரு தித்திப்பல்லினால் முத்துவரிசையையொத்தபல் வரிசையின் மேன்மை குறைவது போல் அழகு குன்றிவிடுகிறது.

(36) சில காவியங்களில் சொல்லணிகளும், பொருளணிகளும் பொருத்தமாகக் கலந்தமைக்கப் பெற்றிருக்கலாம். எனினும் வியங்கியப் (வெளிப்பொருளைக் காட்டிலும் வேறான அதைவிட அதிகச்சுவை பெற்ற உட்பொருள்) பொருளில்லாத காவியங்களிலமைக்கப்பட்ட அவ்வணிகள் உயிரற்ற உடலிற்கு அணிவிக்கப்பட்ட ஆபரணங்கள் போல் ரஸிகர்களுக்குத் துக்கத்தையே விளைவிக்கும்.

(38) கிருதயுகத்தில் காவியங்கள் (முன்பு விவரிக்கப்பட்ட) வியங்கியப் பொருள்களையே முக்கியமாகக் கொண்டிருந்தன. இரண்டாவது திரேதாயுகத்தில் அவைகள் வியங்கியப் பொருள்களின் மேன்மை சிறிது குன்றி விளங்கின. இந் நான்காவது கலியுகத்திலேயோ யமகம் (ஒரேவித எழுத்து வரிசையைப் பன்முறையமைப்பது) என்ற சொல்லணியே மிகுந்து தோன்றுகிறது.

(39) 'கவித்வம்' என்ற ஸாம்ராஜ்யத்தைக் கைவசப்படுத்திய அறிஞர்கள் பொருளினிமையற்ற சொல்லணிகளைக் கண்டு களிப்பார்களா? ஒருவன் தன் புண்ணிய வசத்தினால் ஆயிரக்கணக்கான "அப்ஸரஸ்" என்ற திவ்யமங்கைகள் நிரம்பிய வானுலகு சென்றும் அவன் தன் போகத்திற்காகக் கண்ணிழந்த ஒரு பெண்ணைத் தேடித் திரிய வேண்டுமா?

திறமையற்ற கவிகள்.

(40) சில கவிகள் சொற்களைத் தொடுப்பது மட்டிலுமே காவியத்தின் அமைப்பு என்ற நினைவுடன் வீணில் சொற்களையே அடுக்கி விடுகிறார்கள். நன்கு நீந்தத் தெரியுமென்று தங்களுக்குள் நினைவுள்ள சிறுவர்கள் கைகளையும் கால்களையும் அசைப்பதே நீந்துவது என்று ஆழ்ந்த நீரில் இறங்கிக் கைகால்களை அசைத்துக்கொண்டு நீந்த முடியாமல் முழுகிறார்களல்லவா? அவர்களைப் போல்தான் இக் கவிகளும்.

(43) நான்முகன் புன்கவிகளைப் படைக்கும்பொழுதே அவர்களின் வாக்கில் வெள்ளைப் பூண்டுடன் வேம்பின் ரஸத்தை ஊற்றினான் என்ன? அப்படியவன் செய்திராவிடில் புன்கவிகளின் வாக்கிலிருந்து சொற்கள் புறப்படும் பொழுதே ரஸிகர்களுக்கு வெறுப்பு உண்டாவதேன்?

(45) சொற்களின் பொருள்கள் கோசங்களில் சொல்லப்பட்டிருப்பது போல் தெரிந்து கொண்டிருந்தபோதிலும் ஸந்தர்ப்பத்திற்கேற்றவாறு எங்கெந்தச் சொற்களை எப்படி மாற்றியமைக்க வேண்டுமென்றறியாத கவிகள் தரித்திரன் பலபுத்திரர்களை யடைந்ததால் எவ்வளவு களிப்பைப் பெறுவானோ அவ்வளவு ஆனந்தத்தை யடைவார்கள்.

(48) உயர்ந்த கவிகள் ஒரு காவியத்தையமைப்பதற்கு எவ்வளவு பாடு படுகிறார்களோ, அவ்வளவோ அதையும் விட அதிகமாகவோ புன்கவிகளும் பாடு படுகிறார்கள். உலகில் எல்லாவித உயர்வும் பெற்ற ஒரு ஸத்புத்திரனை ஈன்ற தாயும் மிக்கக் கொடிய புத்திரனை ஈன்ற தாயும் தாம் கருத்தரித்த தினத்திலிருந்து பிர

ஸவ காலம் வரையிலும் ஒரே விதமான கஷ்டத்தையே யனுபவித்தவர்கள்.

(55) புன்கவிளின் ஸ்தூலமான (பருத்த) அறிவுக்குட்பட்ட கற்பனைகளும் மிக்கப்பருத்தனென்றே நாம் நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படியில்லாவிடில் நாம் எவ்வளவு முயற்சியுடன் அவைகளைக் காதுகளில் நுழைக்கப் பார்த்தாலும் அவை என் நுழைவதில்லை!

காவிய ரஸிகர்கள்.

(60) உத்தமரஸிகர்கள் காவியத்தைக் கேட்கும் பொழுது அதிலிருந்து தொனிக்கும் ரஸத்தைச் சுவைத்து ஆனந்திக்கிறார்கள். சிலர் வெளிப்படையான பொருள்களையும் அணிகளையுங் கண்டு களிக்கிறார்கள். மற்றும் சிலர் பத அமைப்பைக் கண்டே சந்தோஷிக்கிறார்கள். உயர்ந்த ஆடையையும் அணிகளையும் அணிந்திருக்கும் ஒரு யுவதியைக் கண்டால் நெசவுத் தொழிற்காரன் அவளணிந்திருக்கும் ஆடையையும், ரத்தின வியாபாரி ஆபரணங்களையும், நல்ல யௌவனம் வாய்ந்தவன் அவள் வனப்பையுங் கண்டு களிப்பார்களல்லவா? அது போல் தானிதுவும்.

(64) சில ரஸிகர்கள் புராதனக்கவிகளிடத்தில் மட்டிலும் ஆதரவுள்ளவர்கள். சிலர் நல்ல காவ்யங்களைப் புராதன மென்று நினைத்துக் கொண்டு முதலில் புகழ்கிறார்கள். பிறகு அவை நவீனமென்று தெரிந்தால் அவைகளில் வீணுக் குற்றங் கண்டு பிடிக்க மிக்கப் பாடு படுகிறார்கள். அவர்கள் செய்த குற்றத்திற்கு அதுவே தண்டனையாகாதா?

(67) சிலர் நல்லமைப்பில்லாத பதக்குவியல்களையே காவியமென்று நினைத்து மிக்கப் பாடுபட்டு அக்காவியத்தில் நல்லமைப்பும் பொருளழுகும் இருப்பதாகச் சாதிக்கிறார்கள். அவர்கள் ஒரு வேளை ரவிக்கையைக் கொண்டு பலமாகத் தூக்கிக் கட்டப்பட்ட தொங்குங்கும் ஸ்தனத்தைக் கொண்டே சந்தோஷமடைந்து விடலாம்.

(75) உலகில் நல்ல கவி யொருவனிருந்து அவன் அவனது சொற்சுவையை யறியத்தக்க ரஸிகனில்லாது மேலும் அவனது காவியத்தில் குற்றம் தேடும் துஷ்டர்களைச் சந்தோஷப்படுத்துவதைவிட அந்தக் கவி ஊமையாகப் பிறந்திருக்கலாம். அல்லது விலங்காகவோ புல்லாகவோ செடியாகவோ ஜனித்திருக்கலாம்.

(76) உலகில் ஜனங்கள் பெரும்பாலும் காவிய அறிவு பெறாதவர்கள். சிலர் அறிவிருந்த போதிலும் பொறாமை யுள்ளவர்கள். நமது காவியமோ தோஷங்கள் நிறைந்தும், மேன்மையைத் தேடிக் கண்டு பிடிக்கத்தக்க வாறுமிருக்கும், ஆயினும் இவ்வளவு பாடு பட்டு நான் காவியமியற்ற முன் வந்தது, வெகு சிலராவது இக் காவ்யத்திலுள்ள பெருமைகளைத் தேடியாவது கண்டு பிடித்துக் களிப்பார்கள் என்ற காரணம் பற்றித்தான்.

(77) 'மஹாபுருஷனை ஈச்வரனை நாமறிவோம்' என்று செருக்குடன் சொல்லிய வேதங்களை தண்டிப்பதற்காகச் சிவபிரான் அவைகளை நாய்களாகச் செய்து விட்டார். அப்படியிருக்கச் சொல்லுக்கும் மனத்திற்கும் புலனாகாத அந்த ஈசுவரனை நான் எவ்விதம் வருணிக்கப் போகிறேன்.

(80) ஒ மீனாக்ஷி! நீ எனக்குச் சொற்களாகிற ரத்தினங்கள் நிறைந்த பொக்கிஷ மொன்றை அருளினாய். அதிலிருந்து சில ரத்தினங்களை நான் சில சிற்றின்பங்களை யனுபவிக்க வேண்டி விற்று விட்டேன். அவை மறுபடியும் பெற முடியாதவை. மிஞ்சிய ரத்தினங்களைத் திரும்ப உன் அடிகளிலேயே காணிக்கையாகக் கொடுக்கிறேன். முன் போலவே என் மீது அருள் மாறாது அவைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் தாயே!

பசித்த நெஞ்சம்.

(Famished Heart.)

தமிழ் வித்துவான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்,

கற்பிற் சிறந்த காரிகை யொருத்தி, எக்காலமும் ஆத்ம சிந்தனையில் ஆழ்ந்து, மௌனமாய்க் காலங் கழித்து வரும் தன் கணவனிடமிருந்து அன்பு நிறைந்த நோக்கமும், ஆசை மிகுந்த பேச்சுக்களுங்கூடக் கிடைத்தற் கருமையாயிருந்தமையின், பசித்த நெஞ்சின ளாய், அவன் பாதங்களில் வணங்கித் தன் மனக்குறையை வெளியிட்டுப் பிரார்த்திப்பதைக் கூறுவது இக்கவி.

கண்ணிறைந்த கணவனையும் செழித்தோங்குஞ் செல்வத்தையும் பெற்றும், அவன் அன்பை வெளிப்படையாகப் பெறாத அம்மங்கையின் மனத்துயரத்தைப் படிப்பவர் மனத்தை யும் உருக்கும் வண்ணம் பாடிய ஆங்கிலக் கவிஞரின் பெயர் அறியக்கூடவில்லை. அவ்வாங்கிலக் கவிதையின் மொழிபெயர்ப்பு வருமாறு :—

நிலமண்டில ஆசிரியம்.

1. அகத்தினி லாழ்ந்தநின் னன்பினை யறிவேன்,
எதற்குஞ் சிறந்தவோர் கோயிலி லிருத்துவை;
என் நடை,—என் குரல்,—எல்லா முனக்கே
மகிழ்ச்சியைத் தருமே மற்றெதைக் காட்டிலும்.

2. இருப்பினும்,—அன்பே! இன்னலார் நாளெலாம்
இனிய வோர்மொழி யியம்பலை யென்னிடம்,
கூந்தலைக் கோதலை,—மிருதுவா யென்கரம்
உன் கரம் வைத்தெனை யுவப்புடன் தழுவலை.

3. ஓர் கால் நினைப்பை நீ,—உன் வாழ்க் கையில்யான்
அன்பின் சிகரமா யமர்ந்துளே னென்பதை
நினைந்துயான் திருப்தி நிறைதலே போது மென்று;—
ஆகவே, என் குறை யறிந்திலை கனவிலும்.

4. இருவருந் தனிமையா யிருந்திடும் போழ்தினில்,—
அமைதியாஞ் சிந்தையி லாழ்ந்துநீ யிருந்திட,—
காதல்நோக் கிற்குங் கனிந்தவோர் மொழிக்கும்
என்னுளங் குழந்தைபோ லேங்கிய தறிந்திடாய்.

5. கண்கள் என் கண்களைக் காணுறும் போழ்திலே
"இன்னுயிர்த் துணையிவள்" என்றே யியம்பலாம்;—
இனியவுன் பார்வையி லிலங்கிடு மன்பையான்
உணரின் இப் பழமையாம் உலகெலா மொளிபெறும்.

6. மௌனமாய்த் துதியில்நீ வைகிடுங் காலையில்
ஆசிகள் யான்பெற ஐயனை வேண்டலாம்;
ஆனல், வாய்திறந்து 'அன்பே வாழ்' கெனில்,
வேண்டும் வரமிலை விண்ணிலு மெனக்கே.

7. கடுவழி களில்யான் களைப்பேன் சில்போழ்து;—
எனக்கின்ப முன்னல், என்றுநீ கூறின்,
பாழ்த்த பாலையிற் படர்தா நேரினும்,
பசுமையா மென்றன் பாதத் தடியிலே.

8. கடலில் நிறைந்திடும் கணக்கில நீரன்று
வாடிய மலரின் வாட்டந் தீர்ப்பது;—
விளங்குநுண் டுளியாய் விண்ணுறப் படர்ந்து
மெதுவாய் மழையென வீழ்துளி யன்றே

9. உற்றபய னுண்டோ களஞ்சியம் நிறையினும்
தமனியத் தானிய வகைகளின் மிகுதியால்,
உடைமைபா யுடையயாம் உட்செல வொணமல்
பசித்தே பூட்டிய படியெதிர் நின்றல்?

10. அந்தோ! துன்பமே!! அவனியின் மகுடமாம்
உண்மைக் காதலை யுணர்ந்திடுஞ் செல்வர்கள்
காதலடை யாளத்தைக் கைவரப் பெறுமலே,
வெளுத்த வாயுடன் வேண்டிப்பின் செலலே.

(ஓர் பழைய ஆங்கிலக் கவி.)

புதுக் கற்பனைகள்.

---

* "சிவபெருமான் தூது"

(ஸ்ரீவாதூலன்)

(ஒற்றையங்க நாடகம்)

நாடக பாத்திரங்கள்.

ஸுந்தரமூர்த்தி சுவாமிகள் :—	நாயன்மாருள் பிரசித்திபெற்ற ஒருவர்.
அம்பரகேசர் :—	ஆரூர் அந்தணர் தலைவர்.
வன்மீகநாதர் :—	தியாகேசனை அர்ச்சிக்கும் குருக்கள்.
சங்கிலியார் :—	ஒற்றியூரில் ஸுந்தரர் மணந்த மடந்தை.
பரவையார் :—	ஆரூர்க் கோயில் தாஸி.
ஸுந்தரவல்லி, குமுதவல்லி, கருத்தார்க்குழலி :—	பரவையாரின் தாதிகள்.

தொண்டர்கள், பெரியோர்கள் முதலானோர்.

காலம் :— கி. பி. 8-ம் நூற்றாண்டு.

---

* பெரிய புராணத்தைத் தழுவிச் சித்திரித்தது; உரிமை ஆசிரியரதே.

அங்கம் 1. காட்சி 1.

(ஆரூரில் தியாகேசன் ஆலயம். மாசிமகம். இடபாரூடராய்த் தியாகேசன் வீதிவலம் வர அலங்கரிக்கப்பட்டிருக்கின்றார். தொண்டர்கள் தம்பிரானைப் போற்றித் துதி செய்கின்றனர். ஒரு புறமாகக் கருத்தார்க் குழலியும் குமுதவல்லியும் பிரவேசம்).

கூட்டத்தினர் :—வழி விடுங்கள்; வழி விடுங்கள்.

கருத்தார்க்குழலி :—(கடைக் கணித்துப் புன்முறுவலுடன்) போதும், ஐயா! எம்பிரான் வீதி வலத்துக்கு நாங்கள் நேரங் தாழ்த்து வந்தோமா?

கூட்டத்தினர் :—இல்லையில்லை, சரியான நேரந்தான்! இனி நாட்டியம் நடக்கவேண்டியதுதான் தாமதம். சுவாமி புறப்பாடு செய்யலாம்.

குமு:—(கருத்தார்க் குழலியின் கைகளைப் பிடித்தமர்த்தி) அடி! இன்னும் பிராட்டியார் வரவில்லை; அதற்குள்ளாக நாட்டியம் எப்படி நடத்துவது?

கருத் :—(உற்சவ மூர்த்தியை அணுகி வணக்கம் செய்துவிட்டு) தொழும்பர்களே! சற்றுப் பொறுங்கள். எங்கள் தலைவி பரவையார் இதோ வருவதாகச் சொன்னார்கள். அவர்களும் வந்துவிடட்டும்.

குமு :—அக்காள்! நான் வேண்டுமானால் திரும்பப்போய்................

கூட்ட :—போய்த்தான் அழைத்து வா.

கருத் :—(தொண்டர்களை வணங்கி.) ஐயன்மீர்! எம்தலைவி ஸுந்தரமூர்த்தி சுவாமிகளைப் பிரிந்ததிலிருந்து உயிரற்ற பதுமை போல விளங்குகிறாள். அவரது என்றும் அலர்ந்த முகம், மகிழ்ச்சி என்பதை அறவே மறந்துவிட்டது. காலாகாலத்திற்குரிய கடமைகளினின்றும் தன்னிலை யழிந்து திகைக்கின்றார்கள். ஊணுறக்கம் கொஞ்சமு மில்லாமல் நெஞ்சம் நெடுந்தூரம் எண்ணி நெக்குருகுகின்றார். ஆகையால்..............

கூட்ட :—அப்படியானால் பரவையார் இங்கு வரவே மாட்டாரோ? இன்றும் நிருத்தம் இல்லாது போனால் தியாகேசனின் மகவிழா சோபிக்காது.

கருத் :—பெரியோர்களே! நாங்கள் என்ன செய்வோம். போன புஷ்ய உற்சவத்துக்கு தேவி வரவில்லை. அது முதல் நாங்கள் பல வாறாக ஆலோசனை செய்தோம். அதன் பயனாக இன்று தியாகேசன் உள்ளமகிழப் பரவையாருக்குப் பொய்ச் செய்தி யொன்று சொல்லியிருக்கிறோம். ஒருகால்...........

கூட்டத்துள் ஒருவர் :—அதென்ன சமாசாரமோ? எங்களுக்கு அதை வெளியிடலாமோ?

கருத் :—அடியீர்! அதை உங்களிடம் தெரிவிப்பதுதான் நாங்கள் பொய் சொன்ன குற்றத்திற்குப் பரிகாரம் ஆகும். தேவி பரவையின் நிலைமை எங்களுக்குக் கவலையாக இருந்தது; நேற்றிரவு மெள்ளச் சுந்தரவல்லியின் துணைகொண்டு பரவையின் அந்தப்புரத்துக்குப் போனோம். தேவியாரைக் கண்டோம். வணங்கி நின்றோம். "அடி! சுந்தரவல்லி! இவர்கள் இங்கு எதற்காக வந்திருக்கிறார்கள்; கோவிலுக்குப் போகவில்லை?" என்று கேட்டார்கள். நாங்கள் ஏற்கனவே செய்துகொண்ட சமிக்ஞையின் படி பேசாமல் நின்றோம். ஸுந்தரவல்லி எங்களைக் கடைக்கணித்துப் பரவையாரைப் பார்த்துச் சொன்னாள் :—

"தேவி! நாளை தியாகேசனுக்கு மக உத்ஸவமல்லவா? இவர்கள் வழக்கமாகக் கோவிலுக்குப் போய்த் திரும்பி வந்தார்களாம். வழியிலே தில்லைவாழ் அந்தணருள் ஒருவர் எதிர்ப்பட்டாராம். இவர்கள், அன்றொரு நாள் இரவு நமது யஜமானர் மேற்படி அந்தணர்களின் பெருமைகளைப் பற்றிச் சொன்னதை நினைத்துக்கொண்டு அவரை, வணங்கினார்களாம். அவர் இவர்களை ஆசீர்வதித்துப், 'பரவையரே! எனக்குப் பரவையாரின் மாளிகை எங்குளதென்று தெரியவில்லை. நேரமும்

ஆகிவிட்டது. நீங்கள் பரவையாரைக் காணின் தில்லையில் எழுந்தருளி யிருக்கும் ஸுந்தர மூர்த்தி சுவாமிகள், "மக விழாவுக்கு ஆரூர் தவறாது வருவார்கள்." என்று சொன்னதாகத் தெரியப்படுத்துங்கள்' என்றாராம் என்று.

கூட்டத்துள் மற்றொருவர் :—ஆமாம், ஆரூரரும் ஆரூரை முற்றும் மறந்து தாம் பிறந்த தொண்டை மண்டலத்தையே நிரந்தர வாசஸ் தலமாக்கிக் கொண்டார்போல இருக்கிறது.

கருத் :—பக்தர்களே! இவ்வார்த்தையைக் கேட்ட பரவையார் சந்தோஷமடைந்து இன்று நாட்டியத்துக்கே வருவதாகச் சொல்லி யிருக்கிறார்கள். எம்பிறைவன் வன்மீகநாதன் அருள் இருந்தால் நாங்கள் கூறிய பொய் மொழியும் மெய் யாகலாம்.

(தியாகேசனை அர்ச்சிக்கும் வன்மீகநாதர் என்ற ஆதிசைவர் வருகிறார்)

வன்மீகநாதர் :—(தேவதாஸிகளைப் பார்த்து) பரவையாரின் நிருத்தம் இல்லாமலே எம்மானைப் புறப்பாடு செய்வது இன்னும் எத்தனை நாளைக்கோ?

குமுத :—இல்லை சுவாமி! இப்பொழுதே தேவி வந்து விடுவார்கள்.

கருத் :—(கூட்டத்தை ஊடுருவி வெளியே நோக்கி) அதோ......அதோ.........வருகிறார்கள்.........வந்து விட்டார்கள்.........பரவையார்.

கூட்டத்தினர் :—நகருங்கள், நகருங்கள்; வழி விடுங்கள்! (நாணமீதூர மயிற்சாயலன்ன பரவையார் ஸுந்தரவல்லியுடன் தியாகேசன் சந்நிதியை நோக்கி வருகின்றார்.)

வன்மீக :—தேவியார் வரவு நல்வரவாகட்டும். இதோ பிரசாதங்கள்! சீக்கிரம் நிருத்தம் நடக்கட்டுமே!

(குமுதவல்லி, கருத்தார்க்குழலி, ஸுந்தரவல்லி, எல்லோரும் மீண்டும் கடவுளை வணங்கப் பரவையார் நமஸ்கரித்து எழுகிறாள். நட்டுவ மேளம் கூட்டுவதன் ஒலி. பரவை நட்டுவமேளத்தை அனுசரித்துப் பாடுகிறாள்.)

பண் : இந்தளம்.

சொல்லிடில் எல்லை யில்லை
சுவை யிலாப் பேதை வாழ்வு

நல்லதோர் கூரையுக்கு
நலமிக வறிந்தேன் அல்லேன்

மல்லிகை மாடநீடு
மருங்கொடு நெருங்கி யெங்கும்

அல்லிவண் டியங்குமாரூர்
அப்பனே அஞ்சினேனே!

(அதேசமயம் திருச்சன்னிதியிலிருந்து ரீங்காரத்வனியுடைய தாள சப்தமும் அதைத் தொடர்ந்து, துயரமே உருவெடுத்த பண்மொழியும் வெளிப்படுகிறது.)

கூட்டத் :—(உற்றுக் கேட்கின்றனர்.)

"..
....

வரையின் மடமகள் கேள்வன் வானவர்
தானவர்க்கெல்லாம்

அரையன் இருப்பதும் ஆரூர் அவர் எம்மையு
மாள்வரோ கேளீர்!"

ஆஹா! இக்குரல் சுந்தரமூர்த்தியின் குரலாக வன்றோ காணப்படுகிறது.

(எல்லோரும் சன்னிதிவாயிலைப் பார்த்த வண்ணம் இருக்கின்றனர். ஒற்றைக் கண்ணிழந்து ஊன்றுகோல் தாங்கிச் சங்கிலியார் கைப்பற்றி வரச் சுந்தரர் கோவிலுள் பிரவேசிக்கிறார்.)

சுந்தரர் :—தொழும்பர்களே! இவ்வாரூரர் குற்றமுள்ள அடியேனை ஆட்கொள்ளுவாரோ, கேட்டுச் சொல்லுங்கள். (ஒற்றைக் காத்தால் கண்ணை அழுக்கியவாறும் மற்றைக் காத்தால் கூட்டத்தை விலக்கியும்) வழி வழித் தொண்டர்களே! வல்வினையேன் இவ்விடர்ப்பட அருளினவன் இவ்வன்மீகநாதனே!

கூட்டத் :—ஐயோ! வன்றொண்டருக்கு இத்தீவினை எங்கிருந்து முளைத்ததோ?

ஸுந்தரவல்லி :—(ஆச்சரியமும் திகைப்புங் கொண்டு) தேவ தேவி! இதோ சுந்தரர்!

குமுதவல்லி :—(கடைக் கணித்து மகிழ்ச்சி தோன்ற) ஆம், அம்மே! நந்தலைவர் சுந்தரர் தான்; சந்தேக மில்லை.

ஸுந் :—பிராட்டி! இதென்ன கோலம்! ஒற்றைக் கண்ணிழக்கச் சைவ அருள் பெற்ற வருள் இவரும் ஒருவரா?

கூட்டத் :—சுவாமிகளே! தங்களுக்கு இவ் வல்வினை எங்கு வாய்த்தது?

வன்மீக :—பரவாய்! அதோ அவர் முன்னால் வரும் மங்கை நல்லாள் யாவளோ? (சங்கிலியாரைச் சுட்டிக் காட்டுகிறார்: பரவை பிரமத்துடன் சுந்தரரையும் சங்கிலியாரையும் மலங்க நோக்கிப் பெரு மூச்சுடன் மூர்ச்சை அடைகின்றாள்.)

குமுத :—அடி! ஸுந்தரவல்லி, இதோ இப்படித் தாங்கிக் கொள், நம் தேவியை. ஐய, ஐய! கொஞ்சம் தண்ணீர் கொண்டு வாருங்கள். (குருக்கள் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கப் பரவையாரின் மூர்ச்சையைத் தெளிவிப்பதில் முனைகின்றனர் தேவ தாஸிகள்.)

காட்சி 2.

(பரவையாரின் மாளிகை)

(மஞ்சத்தில் சோர்வுடன் பெருமூச் செறிந்த வாறு பரவை சயனித்திருக்கிறாள். கவலை தேங்கிய முகத்துடன் தாதிகள் பிராட்டியின் குறிப்பறிந்து பணிவிடை யாற்றிக் கொண்டிருக்கின்றனர்.)

பர :—(பெரு மூச்செறிந்து) ஸுந்தரவல்லீ! இன்னுமா உனக்கு விளங்கவில்லை? நீண்ட நாட்களாக அவர் இங்கு வாராததிலிருந்தே என்மனம் எண்ணாததை யெல்லாம் எண்ணியதடி! சங்கிலிபால் காதலுற்ற அவர் ஈசன் தொண்டரா இனி? (பெரு மூச்சிலே கண்ணீர்த் திவலைகள் ததும்புகின்றன.)

ஸுந் :—தேவி, வேண்டாம் இந்த வருத்தம், பொறுத்துக் கொள்ளுங்கள். வன்மீக நாதன் அருள் இருப்பின் எல்லாம் இனிது முடியும். (சாமரம் கொண்டு விசிறுகிறாள்.)

பர :—ஸகி மணி! நீ பார்த்தாயே அவளை; அவளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

குமுத :—தலைவி, நான் ஒன்றும் அவளைக் கவனித்துப் பார்க்கவில்லையே, எனக்கென்ன தெரியும்! (பாதத்தைப் பிடிக்கிறாள்.)

பர :—ஆம், உனக்குத் தெரியாது. அவளே ஒற்றியூர்ச் சங்கிலி! என் சுந்தரரை அழகாம் சங்கிலி கொண்டு பிணித்துத் தன் வயப்படி ஆட்டுகின்ற சங்கிலி அவளே! ஏனடி, ஸுந்தரவல்லி, பரத்தை என்று தானே அவர் நம்மை மறந்தார்? பரத்தை பரவை பெருமை யழிந்து போனாள் என்ற நிலையை உலகில் உண்டாக்கிய அவரது திருத்தொண்டை உரககங்கணன் உள்ளமுவந்து ஏற்பரோ? பாவை பரவையை ஏமாற்றிப் பொய்யுரைத்துத் திரியலாம்; பரமனையே ஏமாற்றவுங் கூடுமோ?

ஸுந் :—(சாமரத்தைக் கையில் ஏந்திய வாறு) தேவி! ஏன் இங்ஙனம் நெஞ்சழிகிறீர்கள். இதோ கருத்தார்க்குழலி வருகிறாள். அவள் இப்பொழுது எல்லாம் சொல்லக் கூடும் (கருத்தார்க்குழலி பிரவேசிக்கிறாள்.)

கரு :—பிராட்டி! நம்மாளிகை வாயிலிலே தொண்டர் பலருடன் சங்கிலியே வந்திருக்கிறாள்.

ஸுந் :—யார் அவள்? சங்கிலியா? நந்தேவியின் வீட்டு வாயிலில் அவள் வரக்காரணம்? (பிரமையுடன் பரவையாரை நோக்குகிறாள்.)

பர :—கருத்தார்க்குழலி! அவள் எதற்காக இங்கு வந்திருக்கிறாளாம். அவளை இங்கு யார் அனுப்பினார்கள் என்றும் விசாரித்தாயா?

கருத் :—தேவி! உண்மையை யறிந்து கொள்ள நான் அவளைக் கேட்டேன்—"ஏன் நீங்கள் இங்குக் கூட்டம் போடுகிறீர்கள்" என்று.

ஸுந்தரவல்லியும் பரவையும் :—(ஒரே தொனியில்) அதற்கு அவள் என்ன சொன்னாள் ?

கருத் :—நம் தலைவர் சுந்தரர்தான் உத்திர விழாவரையிலும் சங்கிலியையும் தொண்டர்களையும் இம்மாளிகையிலே இருக்கும்படி உத்தரவிட்டனுப்பினாராம். நான் மட்டும் நல்ல வேளையாக இடைகழியில் இல்லாமல் இருந்திருப்பின் அவர்கள் யாவரும் கட்டாயம் உள்ளே வந்திருப்பார்கள். தங்கள் உண்மை ஸ்திதியை.............

பர :—(கோபித்து) வெகு நல்லது! நமக்கும் அவருக்கும் தொடர்புள்ள காலம் இது வல்ல. சிறையிலுள்ளவன் தன் மனையிலுள்ள மகிழ்ச்சியறையை நினைத்துக் கொண்டு மாழ்குவதே போலன்றோ இருக்கின்றது இவர்கள் வார்த்தை! சங்கிலியாம் சங்கிலி யிட்ட இவருக்கு ஆரூரில் தங்கு மிடம் ஏது? மடமை மிகுந்த என்னை மறந்தவர் என் மாளிகையை மறக்கக்கூடவில்லையோ? அச் சழக்கரின் உள்ளத்தின் இயல்பறியாத இந்தத் தொண்டர்களுக்குத்தான் என்ன துணிவு? பாவம், நீ அதற்கு என்ன பதில் சொன்னாய்?

கருத் :—(புன்முறுவலுடன்) ஆம் தேவி! அதை எண்ணியே இனி அவர்கள் இங்கு வரவே கூடாதென்று உத்தரவிட்டு விட்டேன். அப்பொழுது.........

பர :—அப்பொழுது என்ன ஆயிற்று?

குமுத :—அப்பொழுது ஆங்குக் கூடியிருந்த தொண்டர்கள் எல்லோரும் அவமதிப்பும் நாணமும் அடைந்து தியாகேசன் ஆலயத்தை நோக்கிச் சென்று விட்டார்கள். ஆனால்......

குமுத :—ஆனால் என்றால்?

கருத் :—அந்தப் புதுப்பாவை மட்டில் கற்சிலைபோல நம்மாளிகைவாயிலிலே கொல்லிப் பாவையைப் பழிக்க நின்றாள்.

பர :—(வியப்புடன்) அப்புறம்?

கருத் :—திடீரென்று அந்தணர் பெருமகன் அம்பரகேசர் தங்களைப் பார்க்க வேண்டுமென்று வந்தார்.

சுந் :—அம்பரகேசரா? பாவமே, எங்கே அவர்?

கருத் :—நானா அவரை உள்ளே விடுவேன்? தேவியின் உடல் நிலை சரியாயில்லையென்று சொல்லியனுப்பிவிட்டேன்.

குமுத :—நல்ல காரியம் செய்தாய்.

பர :—பிறகு அம்பரகேசருடன் அவ்வொற்றியூர்க் கள்ளியும் போய்விட்டாளோ?

கருத் :—இல்லை, அம்மணி! இன்னமும் அவள் தலைக்கடையிலேயே நிற்கிறாள்.

பர :—(சினம்தவழ) அவளையும் இவ் வீட்டை விட்டு வெளியேறும்படி நீ சொல்லவில்லையா?

கருத் :—சொன்னேன் தலைவி! தங்களைப் பார்த்துப் பேசி விட்டுப் போவதாகக் கூறுகிறாள்.

சுந் :—அவளுக்கு இங்கு என்ன பேச்சு கிடக்கிறது?

குமுத :—மறையவரை மணந்த மத மல்லவா அப்படி அவள் சொல்லுவது!

பர :—குமுதவல்லி! நீ போய் அவளை இங்கு அழைத்துவா! அவளைக் கிண்டிவிட்டு அவள் வாயிலாகவே இச்சழக்கரின் உண்மையை நாம் ஆராய்வோம்.

குமுத :—இதோ அழைத்து வருகிறேன். (வெளியே சென்று சங்கிலியாருடன் குமுதவல்லி வருகிறாள்.)

சங் :—(அகமகிழ்வுடன்) அக்காள், நமஸ்காரம்.

பர :—(பெருமூச்செறிந்து) நன்றாயிருங்கள்; ஏனம்மா தாங்கள் யார்? தொழும்பர்களுடன் வந்தீர்களாமே. அடியார்க்குத் தொ

ண்டாற்றுவது உம்போன்றோர்க்குப் பெரும் பயன் அளிக்கும்.

சங் :—இல்லே, அக்காள்! நீங்கள் என்னே அறிந்து கொள்ளவில்லே. நான் உங்களே முன்னமேயே தெரிந்து கொண்டு விட்டேன்.

குமுத :—அப்படியா!

ஸுந் :—அதைத்தான் எங்கள் சீமாட்டி கேட்டது! (குமுதவல்லியும் ஸுந்தரவல்லியும் கடைக்கணித்துக் கொள்கின்றார்கள்.)

பர :—என்னே உங்களுக்குத் தெரிவித்தவர் யாரோ? அப்புண்ணியவான் பெயர் எதுவோ? அதிருக்கட்டும், என்னே அக்காள் என்று கூப்பிடும் முறையையும் அவர்தான் உங்களுக்குப் போதித்தாரோ?

சங் :—அக்காள்! என் பெயர் சங்கிலி என்பது. பிறந்தவூர் திருவொற்றியூர். என் கன்னிப் பருவத்திலேயே என்னேப் பெரியோர் ஆசியுடன் மணக்க விருந்தவர் அப்பொழுதுற்றபோரிலே பொருது வீரசுவர்க்கம் அடைந்தார். ஆகவே நான் சைவத்தொண்டே தையலின் துணைத் தொண்டெனக் கருதிக் கன்னிமாடத்திருந்தேன். அப்பொழுது...... (சங்கிலியின் முகம் நாணத்தால் வெளுக்கிறது.)

பர :—அப்பொழுது என்னவாயிற்று?

சங் :—க்ஷேத்திராடனஞ் செய்வதில் விருப்பமுற்ற திருத்தொண்டர் தலைவர் அப்பொழுது ஒற்றியூருக்கும் வந்தார். ஒரு வருஷருதுவின்காலே! ஆம்! அங்குக் கோவிலே மெழுகி அலகிடும் என்னேக் கண்டார். ஏனே என் கண்கள் அவரை நோக்கின என்பதை நான் அறியேன். பிறகு சில நாட்களிலே நாங்கள் இருவரும்.........(வெட்கமுறப் பேச்சை நிறுத்துகிறாள்.)

ஸுந் :—இம்மாளிகையில் உம்மைப் போன்ற பெண்மணிகளன்றி ஆடவர்கள் ஒருவருமில்லேயே. வெட்கம் வேண்டாம். வாய் விட்டுக் கூறுங்கள்.

சங் :—திருவொற்றியூரரின் ஆணைப்படி அக்கோயிலிலேயே திருமணஞ் செய்து கொண்டோம்.

பர :—எந்தத் தொண்டர் தலைவரைத் தாங்கள் மணந்தது?

சங் :—அவர்தான் அக்காள்! இவ்வாரூரில் தங்களே மணந்து இல்லறம் நடத்திய திருத்தொண்டர் தாம்!

கருத் :—அத்தகைய பெருமையையுடைய தொண்டர் தங்கள் மணத்திற்குப் பின்னர் தான் கண்ணிழந்தாரோ?

சங் :—(கடுத்த முகத்துடன்) இப்பொழுது தான் உங்களியல்பு நன்றாகத் தெரிகிறது. இப்பரிகாசம் என்னேச் சாராது. நீங்கள் கூறுகிற மொழிகள் யாவும் ஆரூரனுக்கும் அவரது வழி வழி அடியார்களுக்கும் பொருந்தும் என்பதைக் கொஞ்சமும் எண்ணவில்லேயே! போதும்!

பர :—தங்காய்! கோபம் வேண்டாம். அப்பெரியாருக்குப் பார்வைபற்றது இவ்வுலகிற்கே ஒரு பெரு நஷ்டம். அதை இவ்வுலகில் கண்டு துக்கிப்பவருள் உம்மையும் என்னேயும் தவிர்த்து வேறு யாரிருக்கிறார்கள்? கருத்தார்க்குழலி! உன் வாயை மூடு. இப்பொழுது கூறுங்கள்; ஏன் அவர் பார்வை மறைந்தது?

சங் :—இறைவனின் திருவுளம் அஃது. நேற்றிரவுதான் அவர் இரு கண்ணும் தெரியப் பெற்றார். உத்திரவிழாக் காணும் நானும் தொண்டர்களும் இங்கு தங்கலாமா? கூறுங்கள்.

பர :—அடி சுந்தரவல்லி! இவ்வஞ்சி அக்காள் உறவிலே யான் மயங்குவேன் என்று நினைத்தாள் போலும். இவளேயும் நாளேக்கு அக்காள் என்று அழைத்துக் கொண்டு வரப்போகும் அபரஞ்சி எங்கு பிறந்திருக்கிறாளோ! சைவராம்! தொண்டராம்! நெறியிலாச் செய்கையும், நினைவு நீங்கிய சொல்லும் உடைய அச்சழக்கருக்கோ, அல்லது அவருடைய சொந்தமும் பந்தமும் உடையவர்களுக்கோ இம்மாளிகை இடம் தாராது. ஆம், ஆரூரனின் அன்பையும், இன்பையும், பரவை

மறந்து விட்டாள் என ஏவினவரிடம் சொல்லிக் கொள்ளட்டும் இவள்.

சுந் :—(நிதானத்துடன்) ஆர், நங்காய்! சழக்கரின் சொற்றுணை கொண்டு வழுக்கிய வாழ்வுடையாய்! இனி இங்கு இம்மாதிரி கூறிக் கொண்டு வாராதீர்கள். தங்களை ஏவினவரையே வேறு தங்குமிடம் எங்குள்ளதென்று கேட்டால் ஒரு சமயம்—ஏன் உண்மையாகவே அவர் வேறிடம் தங்குவதற்குச் சொல்லக்கூடும். குமுதவல்லி. தங்கைக்கு வாயில் வழி காட்டிவா.

சங்—(நாணமும் விம்மலும் பெற்று) அக்காள்! தொண்டர் தம்முள்ளக் கோயிலில் தாங்கள் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறீர்கள். ஆனால் இவ்வெற்று மாளிகை இருண்டிருக்கிறது. நான் வெளியேற விடை கொடுங்கள். மீண்டும் இம் மாளிகையில் அன்பொளியுடன் அணைவேன். ஒற்றியூரார் அருளுவார். (நமஸ்கரிக்கிறாள்.)

குமு :—(நமஸ்கரித்து எழும் சங்கிலியை நோக்கி) அம்மணி! இப்படியே வாருங்கள். இதுதான் வாயிற்புறம். அதோ தெரிவது ஆரூரன் கோயில் (சங்கிலியை வெளியே விட்டுக் கதவைத் தாளிடுகிறாள்.)

காட்சி 3. அங்கம் 1.

(பரவையாரின் சயன மஞ்சம். பஞ்சணையில் அரை விழியுந் துயிலுமாய்ப் பரவை அவஸ்தைப் படுகிறாள். அவளுடைய மனக் கண்ணில் ஆரூர்க் கோயில் வாசற்படி காணப்படுகின்றது. அங்கு நடக்கும் சம்பவமொன்றை அவள் கனவு காண்கிறாள்.)

(கனவில்) சுந்தரமூர்த்தி :—ஆரூர்த்தலைவ! உன்பால் அடிமையொட்டிய என்னை இக்கதிக்கு ஆளாக்கல் திருவுள்ளமா உமக்கு! அடிமையின் துயரைப் போக்குவதன்றோ ஆண்டகையின் இலக்கணம். தேவ! செய்வினை பிழைத்த மக்களும் நிர்மதியாக உறங்கும் இந் நடு நிசியில் உன்னால் தடுத்தாட்கொள்ளப்பட்ட எனக்கு இக்கட்டு விளைவதாயின் அதை என்னென்று கூறுவது! மூவாமுதல்வ! முன்னம் மகிழ்க்கீழ் சூளுரை என்னிடமிருந்து பெற்று இப்பொழுது என்னைத் துயர்ப் படுத்தும் இவ்வல்லலை நீ தீர்க்காதிருப்பாயாயின் உன்னை இவ்வுலகில் ஆண்டகையென்று கூறுவோர் யாவர்? 'பெண்ணெனில் பேயும் இரங்கும்' என்பர் பெரியோர். இரக்கமே உருக்கொண்ட சங்கிலியின் இன்னிசை மொழியும் என் காதலி பரவையின் கல்நெஞ்சைக் கரைக்க வில்லையே. என் வாய்ச் சொல்லின் வரவையே ஆவலுடன் எதிர் பார்த்து அங்காந்திருந்த அவளுடைய கொவ்வை இதழ், சங்கிலியைப் போ வென்று கூறிய பண்புதான் என்னவோ! சுவாமி தாங்கள் எப்படியும் என் அன்பிற்குரியாளும் உமது வழியடியாளுமான அவளது புலவியை நீக்கித்தாருக வேண்டும். இன்றேல் தங்கள் திருச்சன்னிதியின் வாயிலிலே பழவடியேன் என் பிராணனைப் போக்கிக் கொள்வேன். ஆரூர! வன்மீகநாத!! தியாகேச!!! இன்னும் எத்தனை நேரம் இம்மறையவன் புலம்புவது? ஈசா, என் முன்னைய வினைக்கெல்லாம் மூலமாய பரவையின் ஊடலை அகற்றுவது உமது கடன். இன்றேல் தமியேனின் வாழ்வும் எஞ்சிய செயலும் பிறிதொன்றுமில்லை. இதோ உன்னைத் துணைக் கொண்டேன். எழுந்தருளீரா! (தியானஞ் செய்கிறார்.)

(தொண்டர் முன் தியாகேசன் வன்மீகநாதர் என்ற குருக்கள் வடிவமாகக் காணப்படுகிறார்.)

சுந் :—(தியானத்திலிருந்து விழித்து) ஆதிசைவரே! தாங்கள் இவ்வகாலத்தில் இங்கு ஏன் வந்தீர்கள்?

வன்மீக :—தொண்டரே! தாங்கள் இன்னும் ஏன் மாளிகை செல்லவில்லை. உம்முடைய முகம் வாட்டமாயிருக்கிறதே! தங்களுக்குற்ற துன்பம் யாதோ?

சுந் :—ஆரூர! இனி எனக்கேது மாளிகை இவ்வாரூரில்? அடிமையின் சுதந்தரத்தைப் பறிக்க எண்ணங் கொண்ட ஆண்டகையின் செயலைப் போன்றன்றோ என்னைத் திக்கற்றவனாக்கிச் சோதிக்கின்றாய்.

வன்மீக ?—ஏன் ஐய, உமக்குத்தான் பரவையாரின் பேரில்லம் உண்டே!

சுந்த :—சுவாமி! அதை ஏன் கேட்கிறீர்கள்! ஆதிமுதல் தொடிசு கொண்ட இச்சழக்கனின் (கோயிலினுள் சுட்டி) சருக்கரை மொழிகளை நம்பியதால் வந்த தீவினை இங்கில்லை. அன்று ஒற்றியூரில் மகிழமரத்தடியிலே சபதம் என்பால் பெற்றுச் சங்கிலியை எனக்கு மணம் புரிவித்தான். 'பங்குனி விழாவுக்குப் போ' என்றும் நெஞ்சினுள்ளிருந்து தூண்டியவனும் அவனே! சபதம் மாறியதால் பார்வையை இழக்கச் செய்து பரிதபிக்க விடுத்தனன்! சங்கிலியின் துணை கொண்டு வந்த என்னைப் பார்வையுடன் தங்குமிடமின்றி அல்லலுற இச்சந்தியில் நிறுத்தினன். மூலமும் முதல்வனுமாகிய இவனுக்கு இச்செயல்கள் பொருந்துமோ? நீரே கூறும்.

வன்மீக :—அதெல்லாம் போகட்டும். தாங்கள் பரவையார் மனைக்குப் போவதுதானே!

சுந் :—ஆதிசைவரே! இன்னுமா உமக்கு விளங்க வில்லை? பரவைக்கு என்பால் அடங்காத சினம் உள்ளது. காரணம் சங்கிலியின் திருமணம் தான். நான் இங்கிருந்து விடுத்த அடியார்களை அவமதித்துத் திருப்பி யனுப்பி விட்டாள். சங்கிலியையும் அவ்விதமே செய்தாள். அம்பரமேசருக்கு அடியெடுத்து வைக்கக்கூட அனுமதி இல்லை. என்மீதுள்ள ஊடற்சினம் தவிர அவள் பால் இவனே செல்ல வேண்டும்.

வன்மீக :—(புன்முறுவலுடன்) பதுமதளம் போன்ற அவளுடைய நெஞ்சென்ன அவ்வளவு கடினமா?

சுந் :—(தனக்குள்) ஹா! இவ்வாதிசைவர் இவ்வளவு என்னிடம் கேட்டும் இவ்விதம் கூறுகிறாரே. (நன்கு நிதானித்து நோக்குகிறார்.)

வன்மீகன் :—எனக்கு இப்பொழுது தோன்றும் யோசனை தாங்களே பரவையாரின் மாளிகைக்குச் செல்வதுதான் நல்லது.

சுந் :—ஆஹா! எம்பெருமானே நீவிர் ஆதிசைவர் என்று நான் பூர்வத்தில் அலமந்தேன். சுவாமி! தாங்கள் இப்பொழுது பரவையின் ஊடலைத்தீர்க்க விரைந்து செல்லவேண்டும் ஆம், உங்களைத்தான் வேண்டுகிறேன்.

பர :—(கனவினூடே கையைத் தூக்கித் தடுத்து) வேண்டாம், வேண்டாம்! இங்கு யாவர் வந்தாலும் பயனில்லை.

சுந் :—(கண்ணீர்மல்க) தியாகேச! இன்னும் என் தாமதம்? செல்லுங்கள். இன்றேல் இப்பழவடியேன் இதோ உமது காலடியிலேயே என் உயிரைப் போக்கிக் கொள்ளுவேன்.

வன்மீக :—சுந்தர! வேண்டாம். இதோ நானே தூதாகச் செல்கிறேன். (பரவையின் மாளிகை நோக்கிச் செல்ல முற்படுகின்றார்.)

பர :—(இருகரங்களையும் உதறித்தடுத்து) இங்கு வரவேண்டாம். ஸகிமணீ! குமுதவல்லீ.........குமுதவல்லீ! அதோ வருகிறார் அவர்! அவரை வெளியே போகச்சொல்லு. ....ஹா..............புரண்டு மஞ்சத்தினின்றும் கீழே விழுகிறாள்.)

குமுத :—(வாரியெழுந்து ஓடிவந்து) அம்மணீ! இதென்ன இது? சுந்தரவல்லி; கருத்தார்க்குழலி! எழுந்திருங்கள்; இங்கே வந்து பாருங்கள். (எல்லோரும் எழுந்து பரவையைத் தாங்கி மஞ்சத்தில் சயனிக்கச் செய்து விசிறுகின்றனர்.)

பரவை :—(மூர்ச்சை தெளிந்து) அடி! நான் கீழே விழ்ந்திருந்தேனா?

குமு :—ஆம், அம்மணி!

பர :—(யோசித்து) அப்பொழுது நான் கண்டது கனவுதான்.

சுந்தரவல்லி :—கனவா, தேவி! என்ன கண்டீர்கள்?

பர :—அந்த ஒற்றியூர்ப் பொய்யன் இங்கு வருவதாகக் கண்டேன்.

(மாளிகையின் வாயிலிலிருந்து, கதவின் தட்டொலியும் "பரவாய்! பரவாய்!! என்ற தீனக் குரலும் கேட்கப்படுகிறது.)

பர :—யாரடி! அது? வாயிற்கதவை இவ்வகாலத்தில் இடிப்பவர்?

(எல்லோரும் மீண்டும் செவிகொடுத்துக் கேட்கின்றனர்).

[மீண்டும் வாசலிலிருந்து பரவாய்! பரவாய்!! என்ற ஒலி.]

சுந்த:—குமுதவல்லீ! நீ விரைந்து வெளியே போய் அது யாரென்று பார்த்து வா!

குமு:—(பரபரப்புடன் வெளியே சென்று தாழ்ப்பாளைத் திறந்தவண்ணம்) யாரது?

வன்:—நான்தான் கதவைத்திற!

குமு:—(கதவின் இடைவெளியில் நின்று கொண்டு) யார் நீங்கள், நான் என்றால்?

வன்:—என்னம்மா குமுதவல்லீ! என்னை உனக்குத் தெரியாதா?

குமு:—பெரியோய்! ஏது இந்த இருட்டில் ஒருநாளுமில்லாமல்.........

வன்:—ஆமாம், உள்ளே பரவை விழித்துக்கொண்டிருப்பாளென்று நினைக்கிறேன். அப்படித்தானே?

குமு:—ஆம். தங்களுக்கு அந்த விஷயம் எப்படித் தெரியும்?

வன்:—(கலகலவென நகைத்து) அங்கே தம்பிரான் தோழர் விழித்திருக்கிறார். அதி விருந்து இங்கே இவளும்...........

குமு:—(வெட்டெனக் குறுக்கிட்டு) பெரியோய்! இங்கு அவர் பேச்சை மறுபடி உச்சரிக்க வேண்டாம். அதிருக்கட்டும், தங்கள் வேலை என்ன இப்பொழுது?

வன்:—என் வேலையா, பரவையிடம் முக்கிய காரியமாக வந்தேன்.

குமு:—என்ன விஷயமோ அது?

வன்:—இந்த விஷயம் உன்பால் நான் சொல்லக்கூடியதல்ல. பரவையைப் பார்க்கலாமோ இப்பொழுது.?

குமு:—இங்குதானே இருங்கள். நான் போய் தேவியைக் கேட்டு வருகிறேன். (உள்ளே போகிறாள்).

குமு:—(திரும்பி வந்து) ஐய, தேவிக்கு உடம்பு அசௌகரியம், சீக்கிரம் தாங்கள் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லிவிட்டுப் போகச் சொன்னார்கள். வாருங்கள் உள்ளே.

(வன்மீக நாதர் பரவை மாளிகையினுள் நுழைகிறார். தேவர்கள் ஆகாயத்தினின்றும் பூமாரி பொழிந்து வாழ்த்துகின்றனர்).

ஆகாசவாணி:—ஹேசம்போ! சங்கர! மாலயனால் காணவரிய தங்கள் திருவடியையும் திருமுடியையும் இன்றுதான் கண்டோம்.

"காலனைக் காய்ந்த கஞ்சமலர்த் தாளிணை போற்றி!

மாலயன் காணா அடிமுடியாய் மங்கை பாக போற்றி!

கோல விழியாள் பரவை கோண்ட ஊடற் கோள்ளை கெடச்

சாலச் சிவந்ததோ துளங்கியதோ மேனி தூது சென்றாய் போற்றி!

பர:—(மஞ்சத்தினின்றும் லாகவமாக எழுந்து) வாருங்கள் ஐய! இப்படி வீற்றிருங்கள். (ஆசனத்தைச் சுட்டுகிறாள்).

குமு:—(தாம்பூலத் தட்டை ஏந்தியவாறு) ஐய! ஒரு நாளும் வாராத விருந்தினர் அல்லவா தாங்கள்; தாம்பூலம் போடுங்கள் (தட்டைக் கீழே வைக்கிறாள்).

வன்:—குழந்தாய்! கோயிலிலிருந்தே தங்களுக்கு ஏற்பட்ட வியாதி இன்னும் தீர்ந்தபாடில்லையே?

பர:—சுவாமி! இந்தத் துயரப்பிணியைச் சுமக்க அந்தக் காட்சியையும் கண்ணால் நான் காணவேண்டுமா? (பெருமூச்செறிகிறாள்).

வன்:—ஆரூரனைத்தானே கூறுகிறாய்?

பர:—ஐயா! இனி அந்த அபாக்கியசாலியின் பெயரை இங்கு எடுக்காதீர்கள். உங்களைப் பிரார்த்திக்கின்றேன் வேண்டாம்.

வன் :—ஆமாம், துரதிர்ஷ்டசாலி! இனி உன்னை அணுகுந்து அவன் பாக்கியம் பெற விரும்புவதில் என்னதடை?

பர :—என்ன, சுவாமி! தாங்களும் இவ்விதம் கூறலாமா?

வன் :—என்ன குழந்தாய்! நீ பேசுவது; அவன் உனக் கிழைத்த தீங்குதான் என்ன?

பர :—யாரைப்பற்றித் தாங்கள் கூறுகிறீர்கள்? "அவன்" என்றால்? (ஐயம்கொண்டு குருக்களை ஊடுருவி நோக்குகிறாள்).

வன் :—(புன்முறுவலுடன்) தவறி விட்டேன்; அவரைத்தான் சொல்லுகிறேன். வன்றொண்டர்!

பர :—சுவாமி, அவர் இழைத்த தீங்கு ஒன்றா இரண்டா எடுத்துச் சொல்ல? சொல்லிலும் செயலிலும் சழக்கரையே வென்ற அவர் எனக்கு இன்னும் தீங்கிழைக்க விரும்புகிறார் போலும்!

வன் :—இறைவன் அன்பை எளிதில் பரிபூரணமாய்ப் பெற்ற அவர்பால் நீ கொள்ளும் வெறுப்பு உன் குலத்திற்கு உரியதன்று. சினந் தவிர்.

பர :—சுவாமி, நான் தேவதாசியே! தொண்டர்களே இவ்விதம் மாறு செய்யின் தேவதாசியின் குல உரிமை எப்படி நிலைத்திருக்கும்?

வன் :—குழந்தாய், நான் உனக்கு உறுதி கூறுகிறேன். இனி அவன் உன்பால் தவறுதலாக நடந்துகொள்ள மாட்டான். அவனை இப்பொழுதே இங்கு............

பர :—நன்று கூறினீர்! ஏன்; ஒற்றியூரில் அவர் இருப்பது தானே?

சுந் :—ஆம் ஐய, அவளும் நூல் இழந்தவள் என்று கேள்வி. அஃது உண்மை தானே.

வன் :—நூல் இழந்தவள் என்று யார் கூறியது? கன்னிமாடத்திருந்து கடுநோன்பு நூற்றதால் அன்றோ வன்றொண்டரைச் சார்ந்தாள். அவளைப்பற்றி இங்கு இவ்வித அபிப்பிராயம் நிலைகொள்ளுமானால் அதுப் பெரும் பாபமே யாகும்.

பர :—ஸுந்தரவல்லி! வாயை மூடு! ஐய! என்னவோ, பரவையும் கன்னிமாடத்திருக்க நிச்சயித்துவிட்டாள். தாங்கள் இதைத் தங்களைத் தூதனுப்பினவரிடம் தெரிவித்து விடுங்கள். குமுதவல்லீ! ஆரியரை அழைத்துப்போ.

வன் :—பரவாய்! நான் விடை கொள்ளுகிறேன். நான் சென்றதும் நீ பச்சாதாபப் படப்போகிறாய். நிச்சயம். (வெளியே போகிறார்).

காட்சி 4. அங்கம் 1.

பரவை :—குமுதவல்லீ, குமுதவல்லீ! அவர் போய் விட்டாரா?

குமு :—(ஓடிவந்து) ஆம் தேவி! படியை விட்டிறங்கியதும் விரைவாகவே தெருவைக் கடந்து மறைந்து விட்டார்கள்.

பர:—குமுதவல்லீ! என் புத்தி கெட்டு விட்டது. இதோபார் இக்கொன்றை மலர். அதோ அந்தச் சாய்மணையில் திருநீற்றின் சுவடுகளைப் பார். ஆம் வந்தது அவரே. ஐயோ, பாபி நான் அறியாமல் அவரை மறுத்து உரையாடினேனே. வன்மீகநாத! உன்னை நம்பியிருந்த நான் என் சொல்லாலேயே கேடடைந்தேனே. ஹா! இஃதென்ன வியாக்கிரசர்மாசனம்? சுந்தரவல்லி! இச்சாய்மணையில் இதை யாரேனும் கொண்டு வந்து போட்டார்களா? (புலித்தோலை எடுத்து உற்றுக் கவனிக்கிறாள்.)

சுந் :—(அதைக் கூர்ந்து கவனித்த வண்ணம்) ஆம். தலைவி! அவர் உண்மையில் குருக்களா, அம்மாயச்சைவர்? எனக்குச் சங்கையாயிருக்கிறது.

குமு :—(ஆச்சரியத்துடன்) இவ்வாசனம் நம்முடையதல்ல. இது இங்கு வந்தது தெய்விகமே!

பர :—கருத்தார்க்குழலி! இவ்வாசனத்தை நன்றாய்க் கவனி.

கரு :—(கவனித்து) அம்மா அம்மா! இதோ இதில் ஏதோ எழுத்துக்கள் காண்கின்றனவே.

(எல்லோரும் உற்றுக் கவனிக்கின்றனர்).

பர :—(உச்சரிக்கிறாள்) "தியாகேசன்"!

சுந் :—ஆம், அம்மா! வந்தவரும் தியாகேசரே!!

பர :—(கண்களில் நீர் பனிப்ப) முக்கண்ணா! மூவாமுதல்வ! மூடப்பட்ட அறிவின் வயத்தால் பேதையேன் எதிருரையாடியதை எங்ஙனம் நீர் சகித்திருந்தீரோ? குலவியல்பு உணர்த்திய கொற்றவ! கொன்றை சூடி! தொழும்பர் பொருட்டுத் தூது நடந்தவ! உமது புனிதப் பாதம் அடிநாயேன் மனையுற மதிப்பறியாது இறுமாந்திருந்த என் பாபம் என்னவோ? ஈசா! சுந்தரநம்பி பொருட்டு நீர் மேற்கொண்டு வந்திருந்த மாண்பை மறைத்துப் பின்னர் "நீ பச்சாதாபப்படுவாய்" என்று உரைத்துச் சென்றீரே! உணர்ந்தேன் உண்மையை! பாபமுடையாளை மன்னியும்! ஆதிசைவர் உருவுடன் தோற்றமளித்த என் தோன்றாத்துணையே! என் சிந்தினவாழ்வை நிமிர்த்த முயன்ற என் விழுத்துணையை வெறுத்து விடுத்துப் போக வழி காட்டினேனே! ஈசா! வன்மீகநாத!! ஆரூர!!! மன்னிக்க வேண்டும் இம்மா பாவியை.

(கண்ணீர் ஒழுகப் பாடுகிறாள்)

"புன்புலால் யாக்கை புரை புரை கனியப்
பொன்னெடுங் கோயிலாப் புகுந்தென்
னென்பெலா முருக்கி யெளியை யாண்ட
வீசனே! மாசிலா மணியே!
துன்பமே பிறப்பே யிறப்போடு மயக்காந்
தொடக்கெலா மறுத்த நற்சோதீ!
இன்பமே! யுன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே?

[மஞ்சத்தில் சோர்ந்து வீழ்கிறாள்; மீண்டும் மாளிகை வாயிலில் "பரவாய்! பரவாய்!!" என்ற ஒலி]

குழ :—தலைவி! மீண்டும் அதே குரல் கேட்கின்றதே. அவரை அழைத்து வரட்டுமா.

சுந் :—தேவி! தேவி! திரும்பவும் அவரே வந்திருக்கிறார்போலிருக்கிறது.

பர :—(மூர்ச்சை தெளிந்து) என்ன? எங்கு? யார்?

சுந் :—வன்மீகநாதர் என்ற மாயச் சைவர் மீண்டும் வந்திருக்கிறார்.

பர :—எங்கே?

குழ :—இதோ வாயிலில் நிற்கிறார்!

பர :—(தாசிப்பெண்கள் தொடர விரைந்து ஓடி வந்து) ஹா! என் கொழுந்தே! என் புகலிடமே! நின்னியல்பு உணராமல் செம்மாந்திருந்தேனே! மன்னிக்க வேண்டும். (பாதங்களில் வீழ்கின்றாள்).

வன் :—பரவாய்! இதோ சுந்தரநம்பி வந்துளான். யாமே திருவொற்றியூரில் உன் ஊடலுக்குக் காரணமான சங்கிலியை மணம் புரிவித்து வைத்தோம். அவ்வுண்மை விளங்க இவ்வாரூரன் விருப்பப்படி நங்கோயிலுள் இலிங்கமும் இன்றும் மகிழும் தோற்ற அருள்புரிவம். புலவி நீங்கிச் சங்கிலியுடன் அணைந்து இவ்வன்றொண்டனுடன் வாழ்க்கை நடத்துவாய். ஆரூர! இனிப் பரவையை அணைவதில் யாதும் தடையேயின்று. (மறைகின்றார்).

சுந் :—இறைவ! என் தோழ! நின் திருவருள் வண்ணமே!

பர :—சுவாமி! பிராணேச!! இப்பழவடியாளை மன்னிக்கவேண்டும். (சுந்தரர் பாதங்களில் நமஸ்கரித்தெழுகிறாள்).

சுந் :—தலைவி! இவ்வரிவை சங்கிலியை உன் தங்கையாகப் பாவிக்கவேண்டும். தொண்டர்களே! இன்று முதல் வஸந்த விழாவரையிலும் நீங்கள் இங்குத் தங்கித் தியாகேசனைத் தரிசித்து வாழலாம்.

தோ :—தம்பிரான் தோழரே! தங்கள் திருவுளம் எம்மிறையருள்.

பர :—தங்காய்! சங்கிலி! நந்தலைவர் மகிழ்வுற மகரயாழ் கொண்டு பதிகம் பாடுவோம், வா!

சங்கி :—அக்காள்! அவ்விதமே!

[பரவையும் சங்கிலியும் மகரயாழில் சுருதி கூட்டிப்பாடச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் பண் பாடுகிறார்.]

பண் :—தக்கேசி.

மாதினுக்குடம் பிடங்கொடுத் தானை
மணியி னைப்பணி வார்வினை கெடுக்கும்

வேதனை வேத வேள்வியர் வணங்கும்
விமலனையடியேற்கெளி வந்த

தூதனைத் தன்னைத் தோழமை யருளித்
தொண்ட னேன்செய்த துரிசுகள் பொறுக்கும்

நாதனைநள் ளாறனை யமுதை
நாயினேன் மறந்தென்னினைக் கேனே''

(ஆரூர்க் கோயிலில் திருப்பள்ளி யெழுச்சிக் கறிகுறியான மணியோசை கேட்கின்றது.)

சுந் :—(செவிமடுத்து) தேவி! நான் தம்பிரானை வணங்கச் செல்லுகிறேன். நீ தங்கையுடன் சீக்கிரமே கோயிலுக்கு வருவாயாக.

பரவையும் சங்கிலியும் :—(சேர்ந்த குரலில்) ஆணைப்படியே, எம் இறைவ!

[மக்கள் அன்பு, மகளிர் காதல், இறை பக்தி இம்மூன்றையும் ஒருங்கே கவரும் காரிருட் போன்ற காலத்திரை பூமண்டலத்தைப் பரந்து மூடுகிறது.]

முற்றும்.

பிரதாபஸிம்மர்.

(K. வரதாச்சாரி, B., A., B., L.,)

(673-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் 5. காட்சி 1

(ஆஜ்மேரில் அக்பரின் மந்திராலோசனை சபை. பகல். அக்பர் ஒரு கடிதத்துடன் ஸந்தோஷமாக உலாவுகிறார். எதிரில் மானஸிம்மர் நிற்கிறார்.)

அக்பர் :—ராஜாஸாஹேப்! தங்கள் திறமையே திறமை! பிரதாபஸிம்மரையும் பிடித்து விட்டீர்களே! தாங்கள் வெல்லாத சத்துரு இல்லை. தங்களால் முடியாத காரியமுமில்லை! ஆனந்தத்தின் சிகரத்தை அடைந்து விட்டேன். எங்கே நமது ராஜகவி? இவ்வானந்தத்தைக் கொண்டாடவேண்டும். அழியாப்பாக்களில் பாராட்டவேண்டும்.

(மஹாபத்கான் வருகிறார். நமஸ்கரிக்கிறார்.)

அக்பர் :—மஹாபத், இன்று மஹானந்தம் நகரமுழுவதும் பறையறைவித்துத் திருநாளாகக் கொண்டாடவேண்டும். வீட்டுக்கு வீடு மங்களவாத்தியமும் தோரணங்களும், கோவில்களிலும் மசூதிகளிலும் பிரார்த்தனைகளும் வந்தனங்களும், விருந்தும் கூத்தும், வேண்டும்! ஏழைகளுக்கு அன்னமும் வஸ்திரங்களும் வேண்டியமட்டும் வாரி வாரிக் கொடுங்கள். பிரதாபஸிம்மர் எனக்குத் தலை வணங்கி விட்டார்! எனக்குப் பணிந்துவிட்டார், மஹாபத்! இன்றும் நாளையும் இடைவிடாது உற்சவம் கொண்டாடவேண்டும். எல்லாம் ஏற்பாடு செய். போ.

மஹாபத்:—உத்தரவு (நமஸ்கரித்து விட்டுச் செல்கிறார்.)

(பிருத்விராஜர் வருகிறார்.)

அக்பர் :—வாருங்கள் வாருங்கள் கவிராஜ்! இன்றுதான் தன்னியரானேம். உம் உத்தம காவியம் இன்றே இயற்றத் தக்கது.

பிருத்வீ :—என்ன விசேஷம்? நானும் கேட்டுக் கூடிக் களிக்கிறேன்.

அக்பர் :—ராணா பிரதாபஸிம்மர் தோல்வியை ஒப்புக் கொண்டு நமக்குப் படிந்துவிட்டார்.

பிருத்வீ :—என்ன என்ன? நிஜம்தானா? மறுபடியும் சொல்லுங்கள்.

அக்பர் :—இதோ பாருங்கள் அவர் கடிதத்தை. பின் என்ன? (கொடுக்கிறார்.)

பிருத்வீ :—(படிக்கிறார்; பிறகு கவலையுடன் மறுபடியும் படிக்கிறார்.)

அக்பர்:—ராஜாஸாஹேப்! பிரதாபருக்கு என்ன பதில் அனுப்புவது?

மானஸிம்மர் :—தங்களுக்குத் தெரியாததா? நமது ஸந்தோஷத்தைத் தெரிவித்து அன்புடன் அவர் வரவை எதிர் பார்ப்பதாயும், அவருக்காக உயர்ந்த ஆஸனம் வலது புறத்தில் அமைத்து வைத்திருப்பதாயும் ராணாவின் அந்தஸ்துக்கு ஏற்றவாறு அதிகமாகவே சன்மானங்கள் தயாராக இருக்கின்றனவென்றும் வாக்கு அனுப்பலாம். (தனக்குள்) இதுவா சன்மானம்? ஐயோ, பிரதாபஸிம்மரே! நீர் இழந்து விட்ட ஆத்ம மரியாதைக்கு முன் இவையெல்லாம் எம்மாத்திரம்! நல்ல முத்துக்கு எதிரில் பொய் முத்தே இவை!

பிருத்வீ :—சக்ரவர்த்தி! இது பிரதாபஸிம்மர் கையெழுத்தல்லவே!

அக்பர் :—(திடுக்கிட்டு) என்ன! ஏனில்லை? உங்களுக்குத் தெரியாது! அவரிடமிருந்துதான் வந்திருக்கிறது. அவருடையதுதான் இது. ஏன் இல்லை என்கிறீர்கள்?

பிருத்வீ :—ஏனா? ஏன், தீ குளிர்ச்சியாக இல்லை, சூரியன் மலினமாகவில்லை, ஸங்கீதம்

கசப்பாக வில்லை? இயற்கை தன் தன்மையைத் துறப்பதில்லை? ஆதலால்தான் பிரதாபஸிம்ம ரும் தலை வணங்குவதில்லை. அவர் கையெழுத் தல்ல இது!

அக்பர் :—நான் திருநாளாகக் கொண்டாடக் கட்டளை அனுப்பி விட்டேன். அவர் கையெ ழுத்தல்ல என்றால்? இல்லை இல்லை. அவர் கையெழுத்துத்தான். நிச்சயம். என் கட்டளைப் படியே உற்சவம் நடக்கட்டும்.

(வேகமாகப் போகிறார்.)

மானஸிம் :—கவிராஜ்!

பிருத்வீ :—ஓர் ஆசை மிஞ்சி நின்றது. அது வும் தொலைந்ததா? ராஜபுதனத்தின் கடைசீ விளக்கும் அணைந்ததா? இனித் தங்கு தடை யின்றி பாதுஷா மனம் போன போக்கெல் லாம் செய்யத் துணிவார். அழிந்தோம் நாம். வேர் அறுந்தது.

மானஸிம் :—தங்கள் கருத்தை அறிந்து கொண்டேன். தாங்கள் மேவாருக்குச் சென்று பிரதாபஸிம்மரை யுத்தத்துக்குத் தூண்டி விட் டாலும் நான் ஆச்சரியமடைய மாட்டேன். தவறென்றும் சொல்லத் துணியேன்.

பிருத்வீ :—போதும். அதுவே போதும். (வேகமாகப் போகிறார்.)

மானஸிம் :—மஹாராணா பிரதாப்! வீரபிர தாப்! ஏனிப்படிச் செய்து விட்டீர்? மேவா ரின் சூரியன் அஸ்தமித்ததே! பர்வதசிகரம் ஒடிந்து விழுந்ததே! ராஜபுத்திர குல கௌர வம் குலைந்து மண்ணாயிற்று! இனி யாவரும் அடிமைகளே நாம்.

காட்சி 2.

(பின்ஸஹராக் கோட்டை)

(சக்தஸிம்மர் தனியாகப் பார்த்துக் கொண்டு நிற்கிறார்.)

சக்த :—ஸலீம்! தெரிந்ததா இப்பொழுது? மறப்பது நானல்ல. வஞ்சம் தீர்த்துக் கொள் ளவே விடுதலை ஏற்றுக் கொண்டேன். உன் கோட்டைகளைத் தகர்த்துப் பிடித்துக் கொண் டேன். ஓர் புதிய சேனையைத் திரட்டிக் கொண் டேன். உன் உயர் பெறும் வீரர்களனைவரையும் மாய்த்தேன்—அநேக எளியவர்களும் கூடவே மாண்டனர். என்ன செய்யலாம். அநியாய மல்ல. லங்கை அழியவில்லையா? யுத்த முறை யே இவ்விதம். (தூதன் வந்து நமஸ்கரிக்கி றான்.) என்ன? ஏதாவது புலப்பட்டதா?

தூதன் :—ஆம். ராணா பீடூர் காட்டிலே இருக்கிறார். மானஸிம்மர் நம் கும்பேல் மேரைத் தீக்கு இரையாக்கியதும் உண்மையே.

சக்த :—அப்படியா? அவ்வளவா? ஸரி! நாளைக்கே புறப்படுகிறோம். கோட்டைக் காவலை இங்கு அனுப்பு. (தூதன் நமஸ்கரித்து விட்டுச் செல்லுகிறான்.) மானஸிம்மா! யாரு டன் விளையாடுகிறாய்? உன் கர்வத்தை நசுக்கா விட்டால், பதிலுக்குப் பதில் வாங்காவிட்டால் நான் சக்தஸிம்மனா? பார்.

காட்சி 3.

(பீகானீர், மார்வாட், குவாலியர், சந்தேரி அரசர்கள் பிருத்வீராஜரைச் சுற்றி உட்கார் ந்து பேசிக் கொண்டிருக்கின்றனர்.)

மார்வாட் :—குச்ரோஜ் மேளனமும் வழக்கம் போல் நடந்து விட்டது!

குவாலியர் :—ஆம். பிரதிவருஷம் நேரும், ராஜபுத்திர குலஸ்திரீகளின் அவமானமும் ஆகி விட்டது.

சந்தேரி :—(பிகானீரைப் பார்த்து) ஏன், நீங்கள் பேசவே யில்லை? என்ன அப்படிப்பட்ட ஆழ்ந்த யோசனை? சற்று உல்லாசமாகப் பொழுது போக்குவோமே! ஏதாவது சொல் லுங்கள் கேட்போம்.

பீகானீர் :—சொல்ல என்ன இருக்கிறது?

சந் :—ஏதோ ஒரு மாதிரி இருக்கிறீர்களே, என்ன விசேஷம்?

குவாலி :—குச்ரோஜ் மௌனத்திலா?

பீகா :—அதெல்லாம் ஒன்றுமில்லை. சுத்தப் பொய்.

குவாலி :—எதெல்லாம்? குச்ரோஜ் மௌன த்தினின்றும் திரும்பி வந்த பீகானீர் ராணியின் ஆபரணத்துவனி எங்கள் அந்தப்புரம் வரையில கேட்டதே, காதைத் துளைத்தது, 'ரிணிக்' 'ஜிணிக்' 'ரிணிக்' 'ஜிணிக்' 'ஜிணிக் ரிணிக்' 'ரிணிக் ரிணிக்' 'ரிணி' 'ஜிணி' ஆஹா நம் நாட்டு நகைகளுக்கேது அந்தத் துவனி? முக லாய வேலைப்பாடே விசேஷம் தான், ஓர் தனி நேர்த்தி!

மார்வா :—ராணியை மௌனத்தில் மரியா தையாக வரவேற்றனர்களா? பாதுஷா நேரில் வந்திருந்தாரா? மங்களமாகவே முடிந்ததா? சொல்லுங்கள், கேட்போம் ஒவ்வொன்றாக.

பீகா :—இவையெல்லாம் என்ன கேள்வி? எல்லாம் மாமூல்படிதான். வேறு என்ன?

க்வாலி :—அது தான் என்ன என்று அறிய விரும்புகிறோம்.

சங் :—தெளிவாக, விஸ்தாரமாகச் சொன் னால்தான் என்ன மோசம்?

பீகா :—நான் சொல்வானேன்? உங்கள் ராணிகளைக் கேளுங்கள். விசதமாக வியக்த மாக விளங்கி விடும். ஆணையிட்டு உண்மையை உரைக்கச் சொல்லுங்கள் புரிந்து விடும். நம் மானத்தை நாமே நாற்சந்தியில் இட்டு உடை க்க வேண்டுமோ?

(கண் சிவந்து தலை அவிழ்ந்து அலங்கோல மாக ஜோஷீ அவ்விடம் வேகமாக வருகிறாள். அரசர்கள் திகைத்து நிற்கிறார்கள்.)

ஜோஷீ :—(கைகளை உயரத்தூக்கி) நமது மரணமா? இன்னுமா மானம் வைத்து வாழ் கிறது. ஹே ராஜபுத்திர ராஜாக்களே! ஹிந்து தர்மமே! பிருத்வீராஜரின் பத்தினி யான நான் பெண்டிர்க்குரிய நாணத்தையும் ஒழித்து உங்கள் முன் வந்து நிற்கின்றேன்; என் இளங்கத்தை உத்கோஷிக்க வந்தேன்! அடக்கிவைத்துக் கொள்ள இயலாது; சரீரம் பற்றி எரிகிறது. குச்ரோஜ் மௌனத்துக்கு விஜயம் செய்தவர்களில் நானும் ஒருத்தி; எப் படியோ பழுதுபடாது தப்பி வந்தவள் நான் ஒருத்தி. ஆயினும் குலகர்வத்துடன் சென்ற நான் அதை அங்கு இழந்து திரும்பினேன். ஒவ் வொரு வருஷமும் இப்படியே நடக்குமா? குல ஸ்திரீகளின் மானமும் தர்மமும் இப்படியே விற்கப்படவேண்டுமா? உங்களுக்கு உணர்ச்சி இல்லையா? முகத்தில் இருப்பது மீசை யல் லவா? செருப்படிபட்டும் உறக்கம் கலையாதா? எக்கேடு கெட்டாலும் தங்கள் குலஸ்திரீகளை காப்பவர்கள் ராஜபுத்திரர்கள் என்று நான் கேட்டிருப்பதெல்லாம் பொய்தானா? ஹிந்து பாதிவிரத்தியத்தைக் காக்க ஓர் ராஜபுத்திரன் கூட முன் வரமாட்டானா? வீரம் அழிந்து விட்டதா? ஆண்மை அற்று விட்டதா?

ஜோத்பூர் :—ஏன் இருக்கிறாரே ராணா பிர தாபசிம்மர்.

ஜோஷி :—இல்லை. அவரும் இல்லை இனி. தன்னந்தனியாக, சிறிது காலம், ஹிந்து தர் மத்தையும் ராஜபுத்திரமானத்தையும், தூக்கி நிறுத்திக் கொண்டு நின்றார். அற்பபோகங் களை விரும்பி, அன்னியருக்கு அடிமைப்பட்டு, அமிழும் பொய்யர்கள் நடுவில், வறுமையைப் பெருமையாகக் கொண்டு தலை தூக்கித் திகழ்ந்த அப்பிரதாப சூரியன் இன்று அக்பருக்குப் பணிந்து விட்டார். அவர் திருநாமத்தை ஜபித்துக்கொண்டு நம்பி வாழ்ந்த எங்களுக்கு இனி வேறு கதியார்? ஆம் ராஜபுத்திரர்களே தங்கள் ஸ்திரீகளின் மானத்தைக் கருதா விடில், புருஷனே தன் மனைவியின் கற்பைக் காக்காவிடில், இனி நாங்கள் செய்வது என்ன? (பீகானீரைப்பார்த்து) இதுதான். இதோ பாருங்கள். (தன் இடுப்பிலிருந்து கட்டாரியை எடுத்து) இதனாலாவது உங்கள் ஆண்மை விழித்தெழுமோ பார்ப்போம். (கட்டாரியால் தன் மார்பில் ஆழமாகக் குத்திக் கொண்டு கீழே விழுகிறாள். யாவரும் அஞ்சித் திகைத்து விழிக்கிறார்கள்.)

பிருத்வீ :—ஐயோ ஜோஷீ! (அருகில் ஓடி வந்து) என்ன செய்து கொண்டு விட்டாய்?

ஜோஷீ :—என்னைக் காத்துக் கொண்டேன். என்னை அவமதிக்கத் துணிந்தவனுடைய சரண கமலங்களுக்கு இன்பப் பாக்கள் இயற்றி இனிது வாழுங்கள் இனி.

பிருத்வீ :—ஜோஷீ, ஜோஷீ! இப்பொழுது தான் நான் உன்னைக் கண்டு கொண்டேன். உன் அருமையையும் உயர்வையும் அறிந்து கொண்டேன். இப்பொழுதுதான். உன் உபதேசங்கள் என் ஹிருதயத்தில் நுழைந்து, புத்தியைக் கலக்கிப் புதிய துறைகளில் கற்பனைகளைத் தூண்டி விட்டிருக்கின்றன. இப்பொழுது என்னை விட்டுச் சென்று விடாதே, ஜோஷீ என் ஜோஷீ!

ஜோஷீ :—சுவாமி, இதுவே பாக்கியம். என் வாழ்வு பயன் பெற்றது (குரல் தழ தழத்துக் குன்றுகிறது.)

பிருத்வீ :—ஜோஷீ, ஜோஷீ.

ஜோஷீ :—(சற்று நிமிர்ந்து) கலங்க வேண்டாம். நான் ஸந்தோஷமாகவே இறக்கிறேன். உங்கள் இவ்வார்த்தை ஒன்றே போதும் எனக்கு. மனது நிம்மதியாயிற்று. என் ஆத்துமா சாந்தியடையும். நீங்கள் பிரதாபஸிம்மரை அணுகி, ஒப்பற்ற தேசிய கானங்களாலும் அரும் பெரும் சேவைகளாலும் ஸமூகத்தை ஒன்று படுத்தி ஆரியாவர்த்தத்தை அன்னியர்களின் ஆக்கிரமத்தினின்று மீட்டு விடுவீர்கள் ....இதுவே ஸுகம். (பிருத்வீராஜரின் மடியில் இறக்கிறாள்.)

காட்சி 4.

(மலைக் குகை: பிரதாபஸிம்மரும் லக்ஷ்மியும்)

பிரதாப :—பார்த்தாயா, மறுபடியும் ஆரம்பித்து விட்டாயே, நல்ல கதியையே அடைந்தாள். நாம் ஏன் சோகிக்கவேண்டும்.

லக்ஷ்மி :—நாத—(அழுகிறாள்.)

பிரதாப :—அழாதே. நாமும் சீக்கிரம் சென்று சேர்ந்து கொள்வோம். இன்னும் சில நாட்களே நம் வாழ்வு, அழாதே.

லக்ஷ்மி :—ஆறுதலுக்கு அடங்குவதில்லை. உள்ளவரையில் உங்களுக்குப் பணி செய்யும் பாக்கியமாவது கிடைத்தால் போதும். (உள்ளே போகிறாள்.)

(கோவிந்தஸிம்மர் வருகிறார்.)

கோவிந்த :—ஆக்கிராவில் உற்சவம் கொண்டாடுகிறார்கள்! அக்பருக்கு நீங்கள் பணிந்து விட்டீர்களாம். ஆனந்தம் எங்கும் வெற்றிக் கொடிகளும் வாத்திய கோஷமும், வாண வேடிக்கைகளும், விளையாட்டுக் கோஷ்டிகளுமே. யாவும் தங்களைக் கரைவிக்கவே!

பிரதாப :—(வருத்தமாகச் சிரித்து) ஆஹா என்ன கௌரவம்! என்ன பாக்கியம்!

கோவிந்த :—பாதுஷாவின் தர்பாரில் உயர்ந்த ஆஸனம் உங்களதேயாம்!

பிரதாப :—என்ன அனுக்கிரகம்! அவர் அருளே அருள்!

(சக்தஸிம்மர் வருகிறார்.)

சக்த :—அண்ணா அண்ணா (ஓடி வந்து பணிகிறார்.)

பிரதாப :—சக்தா, வா, வா (கட்டிக் கொள்கிறார்.)

சக்த :—இனி நான் தங்களுடனேயே இருக்கப் போகிறேன். புதிய ஸேனை ஒன்று திரட்டி விட்டேன். முகலாயர்களை அப்படியே நசுக்கி விடுவோம்.

பிரதாப :—வேண்டாம் அதெல்லாம். முகலாயர்களுக்குத் தோற்று அடிபணிந்து விட்டேன். இனிப் போருமில்லை வைரமும் இல்லை.

சக்த :—என்ன, என்ன, தாங்கள் தானா சொல்வது? அக்பருக்குத் தாழ்வது தாங்களா?

பிரதாப :—ஆம், ஏன் வீண் விரோதம்? தனக்குத் தேவையென்று தானே சித்தூரைப் பிடித்துக் கொண்டார். அவரே வைத்துக் கொள்ளட்டும். கும்பல்மேரையும் கைக்கொள்

ளட்டும், மேவார் முற்றிலும் வேண்டுமானாலும் அவரே எடுத்துக் கொள்ளட்டும். அதனால் என்ன? எனக்கு வருத்தமில்லை.

சக்த :—ஐயோ, உலகம் நகைக்குமே!

பிரதாப :—நகைக்கட்டும்.

சக்த :—மார்வாட் குவாலியர் எல்லோரும் ஏளனம் செய்வார்களே!

பிரதாப :—நன்றாகச் செய்து கொள்ளட்டும்.

சக்த :—மானஸிம்மர் மகிழ்வாரே!

பிரதாப :—ஐயோ (பெருமூச்சுடன்) ஆம். என்ன செய்வது!

சக்த :—அண்ணா, ஏனண்ணா இப்படித் திடீரென்று சளைத்து விட்டீர்கள்! கனவிலும் கருதவில்லையே.

பிருத்வீ :—எல்லாம் விதி. காலம் ஒரே விதமாக இருப்பதில்லை. மாறுகிறது.

சக்த :—ஆகையால்தான் நான் உங்களுடன் வந்து சேர்ந்து கொண்டு விட்டேன். இனிக் கவலையே இல்லை. நல்ல காலம் துவக்கமாயிற்று.

பிரதாப :—(பேசாமல் நிற்கிறார்.)

சக்த :—அண்ணா, நான் பின்ஸஹாரக் கோட்டையைப் பிடித்து வசப்படுத்திக் கொண்டு விட்டேன்.

பிரதாப :—என்ன? நீ ஒருவனாகவேயா? உதவிக்குச் சேனையுமில்லாமலா?

சக்த :—கண்டவர்களை எல்லாம் கூட்டிக் கொண்டேன். 'பிரதாபஸிம்மரின் ஸஹோதரன் நான்' என்று கூவினேன். திரள் திரளாய் ஜனங்கள் என் கொடியின் கீழ்க் கூடின. என்ன ஆச்சரியம்! கிருஹஸ்தர்கள் தங்கள் பெண்டிரையும் இளங் குழந்தைகளையும் விட்டு என்னைச் சேர்ந்தார்கள். உலோபிகள் தங்கள் பணத்தையும் விட்டு என்னை அடைந்தனர். கூனன் ஒருவன், கேட்ட மாத்திரத்தில் நிமிர்ந்தான்; கையில் வாளைக் கொண்டான். வழியில் சென்று கொண்டிருந்த கூலி ஆட்கள் அப்படியே தங்கள் தலையிலிருந்த சுமையை எறிந்து விட்டு என்னைச் சூழ்ந்து கொண்டனர். கணக்கற்ற சைனியம், அண்ணா என்னிடம் இப்பொழுது தங்கள் பெயரைச் சொன்னால் போதும். அது ஓர் மந்திரம். அதன் மகிமை தங்களுக்கும் தெரியாது. இப்பொழுதுதான் நானும் கண்டு கொண்டேன். எவ்வளவு உற்சாகம், எவ்வளவு ஆவேசம் கொண்டு எழுகின்றனர். ஆஹா!

(பாமாசாவும் பிருத்வீராஜரும் வருகின்றனர்.)

பிருத்வீ :—ராணாஜீ, ராணாஜீ, (வந்து பணிகிறார்.)

பிரதாப :—யார், பிருதவீராஜரா? வாருங்கள். ஏது, இவ்வளவு தூரம்?

பிருத்வீ :—அக்பருக்குத் தாங்கள் பணிந்தா விட்டீர்கள்? உண்மையாகவா?

பிரதாப :—ஆமாம், உண்மை.

பிருத்வீ :—(திகைத்துச் சோர்ந்து) ஐயோ, மேவாரும் அழிந்ததா! ராணாஜீ, நாங்கள் தான் ஆண்மையும் அற்று அடிமைப்பட்டு உழலுகிறோம். தாங்கள் ஒருவராவது மாண்புற விளங்குகிறீர்கள் என்று அபிமானமும் கர்வமும் கொண்டிருந்தோம். அக்பரை எதிர்த்து நிற்கும் ராஜபுத்திரன் உளன் என்று மகிழ்ந்திருந்தோம். அதுவும் இல்லையா இனி? உயர் க்ஷத்திரியமும் தாழ்ந்து விடுவதா? எங்கள் ஆதர்சபுருஷரான தாங்கள்—

பிரதாப :—உங்களுக்கு ஆதர்சமாக இருந்துவர நான் காடும் மலையுமாக இரண்டு கவளம் அன்னமுமின்றி அலைய வேண்டும். நீங்களோ, மார்வாட் குவாலியர் சந்தேரி, எல்லோருமாகப் போக விலாஸங்களில் மூழ்கிய வண்ணம், இப்பக்கமும் நோக்காது, என்னைத் தன்னந்தனியாகத் தவிக்க விட்டு விடுங்கள்.

பிருத்வீ :—ராணாஜீ, தங்களுக்குத் தெரியாததா? ஸிம்மம் தன்னந்தனியாகவே வாழ்

கிறது. தன் நாட்டில், தன் பிரதிஷ்டையுடன் இதா அற்ப மிருகங்கள் மனிதனுக்கு அடிமைப் பட்டு நாட்டில் கேளிக்கூத்துக்கள் காட்டப்படுகின்றன. சூரியனும், கை விளக்கும், ஸமானமாகுமா? ஸாதாரண கிருஹஸ்தர்கள், நித்திய காலக்ஷேபத்தில் சிக்குண்டு அற்ப ஸாகதுக்கங்களுக்கு ஆட்படுகின்றனர். விபூதியும் ஜடையுமாக ஓர் ஸித்த ஸன்யாஸி எப்பொழுதாகிலும் அவர்கள் இடையே தோன்றுகிறார். புதிய தர்மத்தை விளக்குகிறார். அந்தகாரத்துக்கு நடுவில் தோன்றும் இப்பிரகாசம், அற்பங்களுக்கு நடுவே தோன்றும் இப்பெருந்தகை, அல்லல்களுக்கு நடுவே தோன்றும் இச்சிதானந்தம், பதின் மடங்கு அதிகமாகவே விளங்குமன்றோ? அத்தகைய ஸித்த ஸன்யாஸியே தாங்கள். இத்தேசத்தை உத்தாரணம் செய்வதற்காக மட்டில் தோன்றிய வீரபுருஷரன்று தாங்கள்; தேசோத்தாரண மென்மென்பதே எவ்வாறு செய்யத் தக்கது என்று எடுத்துக்காட்ட அவதரித்த மஹான். தாங்களா தணிவது?

பிரதாப:—ராஜபுத்திரர்கள் மட்டில் ஒன்று சேர்ந்து விட்டால் எவ்வளவு நாழிகை நிற்கும் இப்பாதுஷாவின் ஸிம்மாஸனம்? தன்னந்தனியாக எவ்வளவு காலம் தான் நான் பாடுபடமுடியும்? என் பரிவாரங்கள் படும் துன்பங்களைக் காண மனம் சலித்து விட்டது. என் பெண் ஈராவையும் பறிகொடுத்தேன். பிருத்விராஜ்! குளிரில் விறைத்து, தக்க மருந்து மின்றி மாண்டாள். அவளுடனே இப்பிரதாபனும் இறந்தான். உங்கள் கண் முன் நிற்பது வெறும் எலும்புக்கூடு—என் ஈரா இறந்தாளே—இனி என்ன?

பிருத்வீ:—ஐயோ, ஈராவா?

சக்த:—என்ன, என்ன, நம் ஈராவா?

பிரதாப:—ஆம். இத்தரித்திரன் வீட்டில் வாழ இயலாது விண்ணேகினாள்.

பிருத்வீ:—ஈசா, இது தானா நற்செய்கைகளின் வினைவு! ராணாஜீ, தங்கள் திருநாமத்தையே உஜ்ஜீவனமாகக் கொண்ட நம் ஜோஷீயும் இறந்தாள்.

பிரதாப:—ஐயோ, ஏன்? எப்பொழுது? ஒன்றும் தெரியவில்லையே!

பிருத்வீ:—இந் நாரதமனை விட்டுச் சுவர்க்கம் சேர்ந்து விட்டாள். குச்ரோஜ் மேளனத்திற்கு அழைப்பு வந்தது. அவள் போக இணங்கவில்லை. நான் வற்புறுத்தி அனுப்பினேன். அக்பர் அவளைக்கண்டு ஆசை கொண்டாராம். கையைத் தொட்டாராம். இவள் சீறித் தன் கட்டாரியை எடுத்துத் தன் மானத்தைக் காத்துக் கொண்டாள். வீடு திரும்பினாள் உத்தமி. நாங்கள் எல்லோரும் வம்பு பேசிக்கொண்டிருந்தோம். எங்கள் முன் தோன்றினாள். எங்கள் கோழைத் தனத்தைக் கண்டித்தாள். அதே கட்டாரியால் தன்னை மார்பில் குத்திக் கொண்டு மாண்டாள் எங்கள் முன்.

பிரதாப:—ஆ! ஹிந்து ராஜாக்களை அவமதித்தும் திருப்தியடைய வில்லையா! அவர்கள் மனைவிமார்களையுமா அவமதிக்கத் தொடங்கினார்? அழிந்தது இனி பாரதவர்ஷம்!

சக்த:—ஆ! பழிவாங்காமலா விடுவோம்.

பிருத்வீ:—வாங்குவோம் நிச்சயம். புறப்படுவோம் இதோ. அதற்காகவேதான் ராணாவை அண்டினேன். ராணாஜீ, தஞ்சமென்று வந்து அடைந்தேன். என்னைக் கை விடுவீர்களா?

கோவிந்த:—தஞ்சமென்று அடைந்தவரைக் கைவிடுவது ராணாவல்லவே!

பிரதாப:—வாஸ்தவம். ஆயினும் என்ன செய்வது? என்னிடம் இப்பொழுது ஒரு பலமும் இல்லை. பத்துவீரர்களே என் பக்கத்தில் எஞ்சி நிற்பவர்.

சக்த:—அண்ணா, சேனையைப் பற்றிக் கவலையேன்? நான் தருகிறேன் ஓர் இணையற்ற சேனை, பயிற்சியிலும் ஊக்கத்திலும் ஒப்பற்றது, ஒன்று தயாரித்திருக்கிறேன்.

பிரதாப:—செலவுக்கு என்ன செய்வது? செல்லாதகாசுகூட நமது பொக்கிஷத்தில் இப்பொழுது இல்லையே.

பாமாசா:—ஏனில்லை? வேண்டிய தனம் இருக்கிறது. ஒரு குறைவுமில்லை.

பிரதாப :—ஏது, மந்திரி சிரேஷ்டரே நம்மிடம்? நமது கஜானுதான் காலியாயிற்றே!

பாமாசா :—கஜானு காலியா யிருக்கலாம். ஆயினும் தனத்துக்குக் குறைவில்லை.

பிரதாப :—ஏது, ஏது? புத்தியும் மழுங்கி விட்டதா, இவ்வறுமை வாய்ப்பட்டு?

பாமாசா :—ராணுஜீ! ஒரு விஷயம் தெரிவித்துக்கொள்ள வெகுகாலமாக விரும்பியதுண்டு. செழித்து விளங்கிய பொழுது என் முன்னோர்கள் தங்கள் முன்னோர்களிடம் ஏராளமாகச் சம்பளம் பெற்றுச் செலவின்றிக் குவித்து வைத்திருக்கிறார்கள். உத்தரவானால் அப்படியே திருவடியில் ஸமர்ப்பித்து விடுவேன் அவ்வளவையும்.

பிரதாப :—(ஆச்சரியமாக) என்ன......அப்படித்தான் எவ்வளவு இருக்கும்?

பாமாசா :—20,000 சைனிகர்களுக்கு நியதமாய் 15 வருஷங்களுக்கு தவறாது கொடுத்துவரப்போதும்.

(எல்லோரும் ஆச்சரியமுற்று ஸ்தம்பித்து நிற்கிறார்கள்).

பிரதாப :—மந்திரி சிரேஷ்டரே! உமது ராஜபக்தியை மனமார வாழ்த்துகிறேன், வாயாரப் புகழ்கிறேன். ஆயினும் உமக்கு அனுபவிக்கவே கொடுக்கப்பட்டது அது. அதைத் திருப்பிப் பெற நான் விரும்ப மாட்டேன். மேவார் குலத்து வழக்கமல்ல அது. ராஜதர்மத்துக்கு தக்கதல்ல அது. சாஸ்திர விரோதமுமாகும்.

பாமாசா :—ராணுஜீ, எனக்குத் தெரியாதா சாஸ்திரம்? ஆபத் தர்மமாக தேசத்தை மீட்க, சேவகன் செல்வத்தையும் அரசன் ஏற்றுக் கொள்வது அனுசிதமல்லவே. அவசியமுமாகும். என் செல்வத்தை நான் தங்களுக்கு தானம் செய்துவிட வில்லை. தங்கள் மூலமாக நம் நாட்டு குலஸ்த்ரீகளைக் காக்கவே அர்ப்பணம் செய்கிறேன். (அடிபணிந்து). மறுக்கலாகாது. ஏற்றுக்கொள்ள வேண்டும்.

சக்த :—(அடிபணிந்து) அண்ணு, தேசத்துக்காக ஏற்றுக்கொள்ளுங்கள்!

பிரதாப :—ஆனால் ஸரி! இவ்வளவு ஆர்வமும் தங்கலமும் அற்ற கோரிக்கையை ஈடேறச் செய்யாதவன் அரசனுகான். அப்படியே செய்வோம். ஓர் சைனிகன் விஞ்சி நிற்கும் வரையிலும் ஹிந்து ஸ்த்ரீகளின் கற்புக்கு கேடு நேர விடேன். அக்பர்! கருநாகப் புற்றதனில் கையை விட்டுக் கொண்டீர்!

(போகிறார்)

பிருத்வீ :—அப்பா! இனிப் பயமில்லை. மாரி மலைமுழைஞ்சில் மன்னிக்கிடந் துறங்கும், சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து, மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு விட்டது. இனிக் கவலையில்லை.

சக்த :—மந்திரி சிரேஷ்டரே, முன், தேவர்களுக்கு உதவ, தன் முதுகெலும்பைக் கொடுத்த ததீசி மஹர்ஷியும் தங்களுக் கிணையோ?

பாமாசா :—அப்படி என்ன பெரும் சேவையிது? சாதாரணக் கடமையே யன்றோ? நாம் அழிந்த பின் நம் செல்வம் நமக்கு எப்படி உதவும்?

சக்த :—ஆம்...நான் புறப்பட்டு விட்டேன். ஒரு மாதத்துக்குள் 20,000 வீரர்களை உங்கள் முன் நிறுத்துவேன்.

பிருத்வீ :—நானும் தங்களுடனே வருகிறேன். என் ஜோஷீ என்னை வேண்டிக் கொண்டாள். ஓர் தேசிய கானம் இயற்றமாட்டீர்களா?' என்று முட்டிக் கொண்டாள். இதோ இயற்றுகிறேன். கற்களையும் உருக்கும் கானம். தேசத்தைக் கொந்தளித்துக் கிளம்பும் கானம், வீரகர்ஜனை செய்யும் கானம் வாருங்கள்.

எல்லோரும் :—ஜேய், ராணு பிரதாப ஸிம்மஜீ ஜேய்.

காட்சி 5.

(மலைவழி. காலை. பிருத்வீராஜரும் இதரர்களும் தேசிய கானம் பாடிக்கொண்டு செல்கின்றனர். கேட்டு நிற்கும் கிராமவாஸிகளும் சிறிது சிறிதாகச் சேர்ந்து கொள்கிறார்கள் யாவரும் வீரா வேசமாகப் புறப்படுகின்றனர்).

ரக்ஷா கரனா ஹை பீடித பாரத மாதா
தம்ஸ படும் ஸமரமேம் சத்ரு ஸாம்னே ஆதா
ரக்ஷா கரனா ஹை பீடித பாரத மாதா!!
அப் கௌன் கரேகா நிஜ பிராணோம்கீ மாயா
ஆபத்தி பீச் ஹை ஜப் ஜனனீ ஔர் ஜாயா
லாக் சத்ரு ஸாம்னே பீட் நஹீம் பேரேங்கே
பய பீத நஹோங்கே ஜனனீப்ரதி ஹோரேங்கே
தலவார துபக யா தீரசலே கி புஸுண்டி
ஹம் சலே, கௌன் ஹை ஸாத் ஹமாரே ஆதா
ரக்ஷா கரனா ஹை பீடித பாரத மாதா.

(போகிறார்கள்.)

காட்சி 6.

மானஸிம்மரின் மஹல். ஸாயங்காலம். (மானஸிம்மரும் மஹாபத் கானும்).

மானஸிம்மர் :—மஹாபத்: சக்தஸிம்மன் என் ராஜ்யத்துக்குள்ளும் புகுந்து மால்புரத்தையும் சூறையாடி விட்டானாமே, உண்மை தானா?

மஹாபத் :—ஆம், மஹாராஜ்

மானஸிம் :—அவ்வளவு திமிரா ஏறிவிட்டது? என் வியாபார நகரத்தையே கொள்ளை இடுவதென்றால்.

மஹாபத் :—அத்துடன்? இழந்த நகரங்களையும் மீண்டும் ராணா பிரதாபஸிம்மர் கைப்பற்றிக் கொண்டது இவரால்தான். கும்பேல் மேவாரையும் வசப்படுத்திக் கொண்டார். கோட்டையையும் புதுப்பித்து விட்டார். நாளுக்கு நாள் பெருகுகிறது அவர் பலம்.

மானஸிம் :—பார்த்து விடுவோம். 10,000 ஸைனிகர்களுடன் உடனே சென்று பின்ஸஹாராக் கோட்டையை முற்றுகை இட்டுச் சக்தஸிம்மரைப் பணியச் செய். போதாவிடில் இன்னும் ஓர் 10,000 ஸைனிகர்களை அனுப்புகிறேன். பிரதாபஸிம்மரைப் பிரித்து எதிர்ப்போம்.

மஹாபத் :—அப்படியே. (நமஸ்கரித்து விட்டுச் செல்கிறார்.)

மானஸிம் :—ஆஹா! இத்தேவார் யுத்தமே யுத்தம்! பிரதாபஸிம்மரின் உறுதியும் தெளிவுமே நம்கடலெனும் சேனையைக் கலக்கியது. ஆடுபடைக் கஞ்சாத அவ்வாற்றலார், படைவலியும், துணைவலியும், தோள்வலியும் தெள்ளறிவும் இனித் தடுக்க வொண்ணாது வளரும்! முகலாய சேனையோ, சாஹ்பாஜியோ, பஞ்செனப் பறந்ததில் ஆச்சரியமென்ன? இனி சண்டமாருதமே இவர். எதிர்க்க எதிர்க்கப் பலம் அதிகரிக்கும். வீர பிரதாப்! நீரே தன்னியன்! பாரதத்தாயின் தவப் புதல்வர் நீர்! உமக்கு நிகரான வீரன் இப்புவியிலில்லை. உமக்குச் சமமான தியாகியை இத்தரணி கண்டதில்லை! உம்முடன் மட்டில் எனக்கு உறவு ஏற்படுமாயின்!.........போயிற்று. நான் இவ்வாறே அமிழ வேண்டியது தான். உமது தலை துண்டிக்கப்பட்டாலும் படுமே யன்றி வணங்காது. நானோ எவ்வளவுக் கெவ்வளவு இம் முகலாய உறவின்முறையை வெறுத்து விலகிக் கொள்ள விரும்புகிறேனோ அவ்வளவுக் கவ்வளவு ஆழமாகச் சிக்கிக் கொள்ளுகிறேன். மஹா தந்திரசாலி இவ்வக்பர்! என் எண்ணத்தைக் கண்டு கொண்டு உடனே முன் அணையாகவே ஏற்பாடுகள் செய்து கொள்கிறார். என் வருத்தத்தை விலக்கவே ஸலீமுக்கு என் தங்கை ரேவாவை மணம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். தலை முறை தலைமுறையாக நான் இவர்களுடனேயே இருக்க வேண்டியது தான். ஒழிக்க வொழியாத உறவு! ஐயோ,

(போகிறார்.)

காட்சி 7.

(பின்ஸஹாரக் கோட்டை, வெளிப் பாகம்; காலை. போர்க் கோலத்தில் சக்தஸிம்மர்.)

சக்த :—கொலை, கொலை, கொலை. அப்பா! இவ்வுலகமே கொலைக்களம் தானு? பூகம்பம் மஹாமாரி, வெள்ளச் சேதம், வியாதிச் சேதம், போதாதென்று நாம் வேறு ரத்த வெள்ளம் பெருக்க வேண்டுமோ? ஆசை, அது நிறைவேருததால், கோபம், அதை வெளியிட, யுத்தம் இதற்கு முடிவு? ஆம்: இது பாபமல்லவோ?.........ஈச்வரன் செய்வதும் பாபமே! கொலை சட்டவிரோதம்தான், யுத்தகளத்தில் அதுவே வீரம், அதுவே க்ஷத்திரிய தர்மம்! நல்ல கட்டுப்பாடு செய்து கொண்டோம்! (பீரங்கி கர்ஜிக்கிறது) ஆரம்பித்து விட்டது கொலைப்படலம்! (மறுபடியும் பீரங்கி சப்தம்) கூற்றத்தின் அறை கூவல் அது. (கோட்டைக் காவலாளி ஓடிவருகிருர்.)

சக்த :—என்ன என்ன?

கோட்டைக்காவலாளி :—கிழக்குச் சுவர் சளைத்துவிட்டது. உள்ளே புகுந்து விடுவார்கள். தடுக்க வழியில்லை.

சக்த :—ராணுவிடமிருந்து இன்னும் ஏன் தகவல் வரவில்லை?

கோட்டைக்காவ :—சென்றவரும் திரும்பி வரவில்லை.

சக்த :—ஸரி! ஸேனையைத் திரட்டும். கோட்டைக்குள் எதிரிகளை நுழைய விடுவதில்லை. எதிர் சென்று மடிவோம். உயிருடன் கோட்டையை அவர்களிடம் ஒப்புவிப்பவர் நாமல்ல. எல்லோரும் 'ஜௌஹரு'க்குத் தயார்தானே? பின் ஏன் கவலை? போம். (காவலாளி நமஸ்கரித்து விட்டுச் செல்கிருர்).

சக்த :—மஹாபத்கான் யுத்த வித்தையில் நிபுணன். கிழக்குச் சுவர் தன் பலவீனம் என்று எளிதில் கண்டறிந்தான். உடனே உடைத்தும் எறிந்தான். அதனுலென்ன? சாகப்பயப்படுபவர்களுக்கல்லவோ கவலை? மிருத்யுவின் பற்களைப் பிடித்து எண்ணுவேன் இதோ!

(கோட்டைக் காவலாளி மறுபடியும் வருகிருர்.)

காவலாளி :—படையைத் திரட்டித் தயாராக நிறுத்தி விட்டேன். நம்மிடம் இருப்பதே ஆயிரம் வீரர்கள் தான்.

சக்த :—முகலாயப்படையில் பதினுயிரம் வீரர்கள்! அவ்வளவுதானே! அதனுலென்ன? வெற்றி ஆசை யில்லை நமக்கு. வீணே, இப் பீஷண கர்ஜனையையும், மற்ற கோலாஹலத்தையும், கேட்டுக் கொண்டு நிற்பதைவிட (மறுபடியும் பீரங்கி சப்தம். அனேக பீரங்கிகள் ஏக காலத்தில்) சே! இனித் தாமதிக்கலாகாது. புறப்படுவோம் இதோ. வீரர்கள் நாம். நாம் ராஜபுத்திரர்கள் நாம்: ராணுவின் புண்ணிய நாமத்தை ஜபித்துக் கொண்டே மடிவோம். உயிருள்ளவரையில் கோட்டையும் நமதே.

(திரைக்குப்பின் "ராணு பிரதாபஸிம்ஹகீ ஜேய்" என்று சப்தம் நெருங்கிக் கொண்டே வருகிறது.)

கோட்டைக்காவ:—(ஆவலுடன்) நமது ராணுவா?

(மறுபடியும் குதூஹல கோஷம். "ராணு பிரதாபஸிம்ஹகீ ஜேய்")

சக்த :—ராணுவேதான்! கோட்டை நமதே!

(போகிருர்கள்.)

காட்சி 8.

கோட்டைக்கு எதிரில் யுத்தகளம். (பிரதாபஸிம்மரின கூடாரம். ஸாயங்காலம். போர்க் கோலத்தில் பிருத்வீராஜர், கோவிந்தஸிம்மர் பிரதாபஸிம்மர் முதலியோர் நிற்கின்றனர். அவர்களை நோக்கிச் சக்தஸிம்மர் வருகிருர்.)

பிரதாப :—சக்தா! சக்தா! வா, வா (எதிர் சென்று கட்டிக் கொள்கிருர்.)

சக்த :—அண்ணு! நல்ல சமயம் வந்தீர்கள். ஓர் நாழி தாழ்த்து வந்திருந்தால் உயிர் நீத்த உடலைத்தான் கண்டிருப்பீர்கள். 'ஜௌஹர்'க்குத் தயாரானேம்.

பிரதாப :—எல்லாம் பகவதியின் கிருபை!

எல்லோரும் :—தாயின் அருள்! (கை குவித்து வணங்குகின்றனர்.)

பிருத்வீ :—மஹாபத்கானை கைதியானாராமே!

கோவிந்த :—ஆம் அவர் 8000, வீரர்களும் வெட்டுண்டனர்.

பிரதாப :—கோவிந்தஸிம்மரே! மஹாபத்கானை அழைத்து வாருங்கள்.

(கோவிந்தஸிம்மர் போகிறார். விலங்கிடப்பட்ட மஹாபத்கானை காவலாளிகள் சூழ அழைத்து வருகிறார்.)

பிரதாப :—என்ன இது? கட்டைக் கழற்றுங்கள். (சைனிகர்கள் மஹாபத்கானை அவிழ்த்து விடுகின்றனர்.)

பிரதாப :—மஹாபத்! உனக்கு விடுதலை! ஆக்கிராவிற்குச் செல்லலாம். மானஸிம்மரைக் காணவே வந்தேன். ஹல்தீகாட்டுக்குப் பழி வாங்க எண்ணிவந்தேன். அவரைக் காணும் பேறு பெறவில்லை. ஸரி. நீ போகலாம். (மஹாபத்கான் பேசாமல் தலை குனிந்தவண்ணம் போகிறார்.)

பிருத்வீ :—உதயபுரமும் தங்கள் வசமாயிற்றல்லவா?

பிரதாப :—ஆம்.

பிருத்வீ :—எல்லாம் நாம் தாயின் அனுக்கிரகமே!

எல்லோரும் :—காளி மாதாகீ ஜேய்! ஜோஷீ பாயிகீ ஜேய்! ஜேய்! ராணா பிரதாபஸிம்ஹகீ ஜேய்!!!

சுபம்.

திருவல்லிக்கேணி

ஸ்ரீ வேதவல்லி மாலை

(தமிழ் வித்வான், கா. ப. வேங்கடகிருஷ்ணமாசாரியர்.)

காப்பு.

(நேரிசை வெண்பா)

திருவல்லிக் கேணி யுதித்தருளுந் தேவி
மருமல்கி மேவும் மலர்போற்—றிருவடிக்குச்
சூட்டுவன் சொன்மாலை சுரர்வேந்தன் மைந்தன்நேர்
ஓட்டுமேவன் வந்தான் உளம்.

நூல்

(கட்டளைக் கலித்துறை)

---

1 திருவே! தெளிந்தசெந் தேனே! வடிபிட்ட தெள்ளமுதின்
உருவே! மடப்பிள்ளை யோதிம மே!சொல்லு மொருகற்ப
தருவே!நின் றாமரைத் தாளே சரணஞ் சரணங்கண்டாய்!
மருவே மிகுசெம் மலரே யுறையொண் *மறைக்கொடியே!

2 செங்கம லக்கண்ணால் தண்ணருள் சேர்ந்த திருநோக்கமும்
தங்குமொர் பூவின் பொலிவுற்ற தாளுந் தமியேனுக்குப்
பொங்கிவ ரும்பிறப் பேகத் தயைசெய்வாய்; பொன்மகளே!
மங்குல் தவழ்மின் னிடையாய்! மயிலே! மறைக்கொடியே!

3 வடிவாய்த் திருமால் வலமார் புறையும் வனிதாய்! செம்பொன்
முடியாய்! முடிவில் புகழாய்! அளிகள் முரலுந்தாராய்!
அடியார் பிழைகள் கருதாய்! மலர்போ லடியாய்! பூவின்
வடிவார் விழியாய்! வரமே தருவாய்! மறைக்கொடியே!

4 பலகுற்றஞ் செய்தாலுந் தன்பிள்ளை தாயத னைப்பாராமல்
இலைகுற்ற மென்றே மொழிவ ளிதுநீ யறிந்ததன்றோ?
சிலையுற்ற நன்னுத லாயிவ் வுலகங்கட் கீன்றாயே!யென்
மலையுற்ற குற்ற மெலாம்பொறுத் தாள்வாய்; மறைக்கொடியே!

*மறை—வேதம்; கொடி—வல்லி.

5 அருசினத் தாலீன்ற தாய்வெறுத் தாலு மவளிடத்தாம்
அருணினைந் தேசே யழுந்தன் னமைந்தா மதுபோற்கார்
இருடலை நாணுங் குழன்மட வாயென் னிருவினையின்
மருளொழிப் பாயஃதில் லேலனுஞ் சரண்யான் மறைக்கொடியே!

6 உன்பெய ரோர்கா லுரையாத வாயு முவந்துள்ளாத
வன்மன முந்தொல் புகழ்கேளாக் காதும், வலந்தினம்வந்
துன்றிருக் கோயில் நுழையாத காலு முனக்குத்தொண்டு
மன்னிப் புரியாக் கரமும், வீண் பாழ்காண்! மறைக்கொடியே!

7 மட்டிட்ட கூந்தல் வனப்பும், மதியார் புருவமும்வார்
கட்டிட்ட மார்பும், சிவந்த கனிவாயுங், கத்தூரியாற்
பொட்டிட்ட நெற்றியும், பொன்மாலைக் கந்தரமும், பொற்றாசும்,
வட்டிட்ட சொல்லும், அருளு, முடையாய், மறைக்கொடியே!

8 முல்லைப் புறவின் முளரிக்கண் மாயவன் மோகந்தவிர்
முல்லைச் சிறுமொட் டனைய முகிழ்நகைக் கோமளமே!
கல்லைப் பதித்த கனக்குழை யோடெக்கா லங்கனிலும்
மல்லைத் தருகண் ணிணையாய்! மணியே! மறைக்கொடியே!

9 வேதக் கொழுந்தே! விரையார் துளவன் விரும்பவரும்
ஏதமில் கட்ட ழகீ! யின் கனிவா யிளங்குயிலே!
பாதகத் தேன், புன் பிறப்பேன் பழியேன், பணியறியேன்,
மாதரைத் தாயே! யடைந்தேன் அருள்செய்; மறைக்கொடியே!

10 நாரணன் மார்வத்தும் நாட்பூத்த பூமேலும் நான்காகுமவ
வாரணத் தின்முடி மேலு மடியாரு ளம்புயத்தும்
பேரணி யாய்விளங் கும்பெண் மயிலே! பிறவியிது
மாருங்கால் வந்தடி தந்தா ளெனக்கு மறைக்கொடியே!

11 மணியே! மணிக்கொம் பனையாய்! அடியேன் மனஞ்சேர்சிந்தா
மணியே! மணிமுத்தி ஞா முடையாய்! மடப்பிடியே!
பிணியே நிறைந்தவிம் மெய்யே பெயருங்கால் பேரருளால்
மணவா ளனுடன் வருவாய் அரிய மறைக்கொடியே!

12 பொன்னே! புதுமலர்த் தேனே! புவியளந் தான்முழுந்நூலாம
மின்னே தவழும் வரைபுரை மார்பின் விளங்கிடுவாய்!
கொன்னே யடியேன் குவலயத் துன்பத் தயராவண்ணம்
மன்னே யருள்செய் மரகதக் கிள்ளாய்! மறைக்கொடியே!

13 கிஞ்சுக வாய்மொழி யஞ்சுக மே! பொற் கிரியும்நாண
விஞ்சிடுஞ் செல்வ மளிப்பாய்; அடியார்க்கிம் மேதினிமேல்
துஞ்சவ ருங்காலந் தோன்றாத் துணையாத் துணைசெய்வாயே;
மஞ்சுநி கர்க்கூந்தல் மானே! மயிலே! மறைக்கொடியே!

14 வாசக் கமலப் பெரும்பதி வாழனம்; வார்செவியில்
ஊசற் குழையுடன் சென்று பிணங்கு மொளிர்கயற்கண்;
நாசத் துழன்று நமன்றமர் பற்றுது நானுய்யத்தன்
வாசக் கமலப் பதந்தந்தாள்; துங்க மறைக்கொடியே!

15 நீருண்டு செல்லு நெடுங்கொண் டலைப்புரை நீள்குழலாய்!
சீருண்ட செங்கண் மதிமுகத் தாய்! விண் செறிந்தபுகழ்ப்
பேருண்ட பெண்பாவாய்! வாசக் கமலப் பெரும்பதியாய்!
பாருண்ட மாயன் மணையாம்பெண் மானே! மறைக்கொடியே!

16 சிதையா முளரித் திருமா ளிகையிற் சிறந்ததென்றென்
னிதையா ரவிந்தத் தினிதிருப் பாய்! இவ் விருண்ஞாலத்துப்
புதையா வருந்திக் கிடந்தே னையுமோர் பொருளாக் கொண்டாய்,
மதுவார் குழலாய்! அருளார் கலியே! மறைக்கொடியே!

17 இளையோடு வண்டு குடிகொண்டு நாளுங் இளர்செந்தேனைத்
தளையூதி யுண்ணுந் திருமலர் வாழுந் தளிர்க்கொம்பன்னாய்!
இளையாவெங் காலன்கைப் பாசத் தகப்பட் டிறவாவண்ணம்
வளையாடுங் கையாய்! அருளாய்! எனக்கு மறைக்கொடியே!

18 அழலார் விழியர் நமன்றமர் பொல்லர் அறவேதுன்பம்
இழையா வரும்மந்நா ளுன்னை நினைப்பரி தாலீர்ங்கோதாய்!
குழலார் கரத்த னகலை முறைவாய்! குளிர்முகத்தாய்!
மழையார் குழலாய்! அடைந்தே னிதுநான் மறைக்கொடியே!

19 வினைக்கடல் வாய்ப்பட் டழுந்துகின் றேற்கோ விரையெடுத்த
நனைத்தெரி யல்சூடும் நங்கையர் தம்மின் நலமுறுவாய்!
சினைத்தரு விற்குயில் கூவுந் திருவல்லிக் கேணியல்வி
மனைக்கிழத் தீ! யுன் பதமரு ளாயோ? மறைக்கொடியே!

20 மேவுமோ ரூழெனும் வெங்கா வின்வாய் விழுந்திங்கென்றன்
ஆவியே போக வலமந்து நாளும் அரற்றிநிற்கும்
பாவியேன் கண்காண வாராய்கொல் சற்றே பரிவுகொண்டு?
மேவியே வேழமுன் காத்தவன் றேவீ மறைக்கொடியே!

21 உலகு முலகி லுயிருந் தாமுன் னொருமலர்மேல்
குலவுந் திசைமா முகனைப் படைத்தாய்; குறிக்கொளவுன்
மலரின் திருநோக் கருளை விடுத்தாய்; மறலியையும்,
மலரில் உறைவாய்! மடிக்க வளித்தாய்; மறைக்கொடியே!

22 ஆழிவாய்ப் பட்டுக் கரைதனைக் காணு தமைருமோர்
ஏழையாம் புள்ளின் இறகுமொ டிந்தா லெனப்பிறவி
யாழியின் வாயினில் ஞான மழிந்தே யழிவேனுக்கு
மாழையொண் நோக்கிநீ யேசரண் கண்டாய்! மறைக்கொடியே!

23 ஒருவல்லிக் கொம்பன்ன யுன்பெய ரோத வுலகிலென்வாய்
அருநல்லிக் குத்தின்ற லொத்துநீ ரூறும்; அரியமறை
தருநல்லப் பண்கேட்டா லொக்கும் புகழே தளர்செவிக்கு;
மருவல்லிக் கேணி வருவாய்! மயிலே! மறைக்கொடியே!

24 மன்னு மறைநான்கும் மாசறக் கற்ற மதியுடையான்,
துன்று புரிநூல் அகலத்தன் றூய்மை நிறைந்தநெஞ்சன்
முன்னு தவத்தன் பிருகு முனிவன் முதிர்தவத்தால்
மன்னு குழுத மடுவிற் பிறந்தாய், மறைக்கொடியே!

25 உத்திர நாள்வரு மொண்ணுதற் காரிகை! யொண்டுளபச்
சித்திர மாலை புனையுமன் னுதன திருத்துணைவி!
இத்தரை மீதினி லேது மறியா திருந்திடுமுன்
மத்தனை யாட்கொண்ட வாராருட் பாவை; மறைக்கொடியே!

26 உன்பெய ரோர்கால் மொழிவார்க்கிஞ் ஞாலத்தி லோதிடுங்கால்
மன்னு புகழுந் திருவும் பொருளும் மதிப்பும் வாழ்வும்
இன்ன முளயாவும் வீந்தபின் வீடு மியலுமெனின்
மன்னுமுன் னுமத்தின் சீர்மை பெரிதாம் மறைக்கொடியே!

27 என்னுள மேவி யுறைகின்ற வீரங்கோதாய்! இஞ்ஞாலத்தில்
உன்னரு ளால்யான் படைத்த விருகண்ணு முன்னைக்காணும்,
பன்னுமென் வாயுமுன் னுயிர நாமங்கள் பற்பொழுதும்,
மன்னிய வுன்புக ழுண்ணுஞ் செவியும், மறைக்கொடியே!

28 சீதப் புனலார் செழுமலர் மேலுறை செல்வி! கங்கை
பாதத் தொருநாள் பயந்தான் மகிழும் பசுங்கிளியே!
*போதத் திருவருள் செய்யுங் கருணைப் பொலங்கொடியே!
மாதர்க் காசி! மகவுக் களிப்பாய்; மறைக்கொடியே!

29 வலியுடைச் சீயம் பசித்துக் கனன்று வருகின்றவன்
மலைபுரை வேழ மடித்துப் புசித்து வளர்கானில்முன்
தலைவனு டன்சென்று ஞாலத் துயரைத் தணிவிக்குமுன்
மலர்புரை தாளென் தலைவைப்ப தெந்நாள்? மறைக்கொடியே!

30 வாழிய மேதினி, வாழிய செந்தமிழ், வாழியநூல்,
வாழிய மன்னவர், வாழிய வாநிரை, வாழியபால்
ஆழியன் பாதத் தடியவர், வாழிய அம்புயமே,
வாழிய நாளும், அறமே தழைக்க, மறைக்கொடியே.

சுபம். சுபம்.

*போதம்—ஞானம்.

ராமனும் ஸீதையும்.

(ஸ்ரீ. ராஜநாயகி)

ஸந்தி 7.

[இடம்: பிரஸ்ரவணகிரி]

தினம்: 1. காலம்: காலை.

(பிரவேசம்: ராமன்—ஒரு பாறையில் உட்கார்ந்து கோதண்டத்தில் கையூன்றிய வண்ணம் தலை குனிந்து ஆழ்ந்த யோசனையில் தோன்றுகிறார்.)

ராமன் :—(தனக்குள்)—துர்ப்பாக்கியனான என்னை நம்பி உன் பிதாவின் நந்தவனம் போல் நினைத்து இந்தக் காட்டுக்குள் பின் வந்தாயே, உன் குதூஹலத்தினால் வனவாஸமே ராஜ்யவாஸத்திலும் மேலென்றெண்ணச் செய்தாயே! பரதன் பாதுகையைத்தான் வைத்துக் காப்பாற்றட்டும், அல்லது தலையைச் சுற்றி எறிந்துவிட்டுத்தான் காரியத்தைப் பார்க்கட்டும், நாம் வானப்ரஸ்தர்களாகவே, ஆசிரம வாஸிகளாகவே காலங்கழிப்போமென்றெண்ணங்களையெல்லாம் உண்டாக்கினாயே!—நான் இங்கு படுகிற அவஸ்தைகளையெல்லாம் நீயும் எங்கேயோ பட்டுக்கொண்டிருப்பாய், ஸந்தேஹமில்லை. உன்னை நேரில் காண முடியாவிட்டாலும் ஒரு ஸமர்த்தனான தூதன் கிடைத்தாலும் ஆத்மா ஒருவாறு சாந்தியடையுமோவென்று நினைக்கிறது. நான் எந்த தூதனைத் தேடுவேன்? அவன்தான் உன்னை எங்கே தேடிப் பிடிப்பான்? வீரஸ்வர்க்கத்துக்கு மார்க்கம் போல் இதோ வானவில் தோன்றுகிறது. அங்கிருந்தபடியே சற்று எட்டிப் பார். என் நிலைமையைக் கண்டால் இந்நேரம் கீழே குதித்திருப்பாயே! இனி இந்த ஜன்மத்தில் உன்னை உயிருடன் காண்பேனோ! எது எப்படி நேர்ந்தாலும் உன்னை நான் ஸ்வர்க்கலோகத்தில் நிச்சயம் வந்து சந்திப்பேன், ஸத்யம்! மறவாதே, சற்றுப் பொறு. (நிச்சப்தமாய்க் கண்ணீர் உதிர்க்கிறார்.) (பாறையின் அடியில் மூலைத்துச் சிறிது தலையை நீட்டும் குவலய புஷ்பத்தைப் பார்த்து) உன்னைச் சிரஸில் ஏற்றிக் கொள்ளும் ஸீதை எங்கே என்று எட்டிப் பார்க்கிறாயா? அன்று இருவருக்கும் இன்பமளித்த நீ இன்று ஒருவனுக்குத் துன்பமளிப்பதேனோ! அவள் உன்னைக் கிள்ளுவாள், அது உனக்கு ஸந்தோஷமாகும்—நான் உன்னைக் கிள்ளமாட்டேன். (புஷ்பத்தைத் தடவிக் கொடுக்கிறான்.)

(தூரத்தில் லக்ஷ்மணன் கூடையில் பழங்களும் கமண்டலத்தில் ஜலமும் கொண்டு வருகிறான்.)

லக்ஷ்மணன் :—(அண்ணனைப் பார்த்து) தனக்குள் இரண்டு மாதத்துக்குள் எப்படி இருந்த உடம்பு எப்படி மாறிவிட்டது பார்த்தாயா! அனலிலிட்ட புஷ்பம் போல் காண்கிறதே! இந்த துக்கம் அனல் என்று தெரிந்தும் அதை நம் ஹிருதயத்தில் வைத்துப் பூட்டிப் போற்றி நாமே வளர்க்கிறோமே! என்ன அடி முட்டாள் தனம்! அதில் ஏதோ இனிமை தோன்றித்தான் அப்படிச் செய்கிறார்கள் போலும்! ஆயின் ஆளைக் கொன்றாலும் அவனுக்கு இன்பங் கொடுத்தே கொல்லுகிறதல்லவா! (ராமனை நெருங்கி) அண்ணா, கொஞ்சம் தாகந் தீர்த்துக் கொள்ளுங்கள்.

ரா :—(நிமிர்ந்து பார்த்து) லக்ஷ்மண, நீ வெகு நேரமாய் இங்கு நிற்கிறாயா? நான் கவனிக்கவில்லை. நீயும் இங்கில்லாவிட்டால் என் ஆவியும் உடலை விட்டுப் புறப்படுகிறது.

லக்ஷ :—இல்லை அண்ணா, இப்பொழுதுதான் வந்தேன். உங்களை நினைத்துத்தான் வேகமாய் வந்தேன். இருந்தாலும் இந்தக் குரங்குக் கூட்டங்களோடு மன்றாட முடியவில்லை. ஸுக்ரீவன் வானர ஸேனைகளைத் திரட்டி விட்டான். இன்னும் நான்கு தினங்களில் ஸந்தனாகாதவனை விசாரணையின்றி சிரச்சேதம் செய்து விடச் சொல்லி யூதபர் (கூட்டத் தலைவர்)களுக்கு ஆக்ஞை. எதிரே நிற்கும் குரங்குக்கு பதில் சொல்லி முடிக்கு முன் தலைமேல் கிளையில் தொங்கிக் கொண்டிருக்கும் குரங்கு

கேள்வி கேட்கத் தொடங்கி விடுகிறது. முதலில் எனக்கு ஸுக்ரீவன்மேல் இருந்த கோபத்தில் என் பாணத்துக்கு மட்டும் இரையில்லாமல் போக வேண்டாமென்று தாங்கள் அவனை மிச்சம் வைத்திருப்பதாகவே நினைத்து விட்டேன். பிறகு தங்களுடையப் பிரியப் பிரதிக்ஞைகளுக்குப் பாத்திரனாகி விட்டவனை நான் சிக்ஷிக்க எண்ணலாகாது என்று ஞாபகம் வந்தது. ஆனால் அந்த ராஜ்யத்தை நேரில் பார்த்த பிறகு, அது ஜாதிஸ்வபாவம், சபல சித்தமே யொழியத் துரோக சிந்தனை யல்லவென்று தெரிந்த பிறகே என் கோபம் தணிந்தது. நான் போகுமுன்னேயே மந்திரி ஹநுமான் யுவராஜாவான அங்கதனிடம் ராஜாவுக்குச் செய்தி சொல்லிக் கொண்டிருந்தார். நானும் கேட்டுக் கொண்டிருந்தேன். இத்தனை பேருக்குள் அவர்தான் ஸ்வயமான தீர்க்காலோசனை யுள்ளவர். பரஸ்பர ஸ்தைர்யத்தை நம்பியே இவ்வளவு அநந்தமான வஸ்துக்களுக்கும் லோகம் இடம் கொடுத்து வருகிறது; எந்த வஸ்துவினால் இந்த நம்பிக்கைக்கு ஹானி (குறைவு யுண்டாகிறதோ அந்த வஸ்து நிர்த்தாக்ஷிண்யமாய் அழிவுறும் என்பதை அங்கதனுக்கே விளங்கும்படி போதித்ததில், அவனே சென்று ராணியையும் ராஜாவையும் பயமுறுத்தி யிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவ்வளவு வேகமாக முதலில் ராணியும் அப்புறம் ராஜாவும் கிரீட புஷ்பமாலா தாரிகளாகவே என் பாதங்களில் வந்து விழுந்தார்கள். ஸஹகுடும்பபரிவாரங்களோடு ஒரு ராஜா என் பாதங்களில் ஸேவிக்கப்பெற்ற பாக்கியம் நான் தங்கள் பாதங்களை ஸேவிப்பதின் பலன் என்று தெரிந்து கொண்டதும் நம் தற்கால நிலைமையையும் மறந்து சற்றுப் புன் சிரிப்புக்கொண்டேன். அப்புறந்தான் ஸுக்ரீவனும் சற்று வியர்வையடங்கி ஆசுவாஸம் செய்து கொண்டு ஸீதான்வேஷணத்துக்குத்தான் முன்னரே செய்திருக்கும் ஏற்பாடுகளைத் தெரிவித்தான். எல்லாம் திருப்தியாகவே செய்திருக்கிறான். ஒரு வாரத்துக்குள் எல்லாத் தூதர்களும் திரும்பிவந்து விடுவார்கள். ஸேனையும் புறப்படுத்தலாம். பரிவாரங்களுடன் நானும் அவனும் சிவிகைகளில் தான் வந்தோம். சமீபத்தில் தான் நான் மட்டும் இறங்கி முன்னதாகத் தெரிவிக்க வந்தேன். அதோ அந்தப் பலாத்தோப்பில் காத்திருக்கிறான்.

ரா:—அவனைக் காத்திருக்கச் செய்யாமல் ராஜமரியாதையுடன் அழைத்துவா! (லக்ஷ்மணன் போகிறான்) (தனக்குள்) உன் மீதுள்ள பிரியம் என்னை எங்கெல்லாம் கட்டி யிழுக்கிறது பார்த்தாயா! யார் யாருடைய ஸ்நேகத்தை யெல்லாம் பாராட்டச் செய்கிறது பார்! (லக்ஷ்மணனும் ஸுக்ரீவனும் பிரவேசம்.)

(ஸுக்ரீவன் நிமிர்ந்து பாராமல் ராமனுடைய பாதங்களில் ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்கிறான்.—ராமன் அவனைத் தூக்கி எழுப்பி ஆசீர்வதிக்கிறான்) ஸுக்ரீவ, நீ கடமைகளை உணர்ந்தவன் என்று நினைத்தேன். பாமரஜனங்களைச் சீர்திருத்தவேண்டிய ராஜா பிரஜைகளுக்கு மார்க்கதர்சியாக இருக்கவேண்டும். வாலி தனக்குப் பல மிருந்ததால் இறுமாந்து தான் மட்டும் என்ன வேண்டுமானாலும் செய்யலாம் என்று நினைத்தது நீயறியாயோ? உன்னை அலக்ஷியம் செய்து விட்டு என் காரியத்தை நானே முடித்துக் கொள்ளப் புறப்படுவது அழகல்லவென்று இங்குக் காத்துக் கொண்டிருக்கிறேனே ஒழிய உன் உதவி அவசியமென்று நான் நினைத்து விட்டதாகத் தப்பெண்ணம் கொள்ளாதே!

சுகரீவன்:—(சிறிது நடுக்குற்றுக் கைக் கூப்பி)—பிரபோ நான் சிறியவன், அநுபவம் பெறாதவன், ஆனால் என்னை நானே திருத்திக் கொள்ள ஒரு நாளும் அஞ்சமாட்டேன். மந்திரி ஹநுமானுடைய ஸஹவாஸத்தினால் எவ்வளவோ திருந்தி வந்திருக்கிறேன்; அவரில்லாவிட்டால் ராஜ்யபாரம் எனக்கு சிரமமாகத் தானிருக்கும்.

ரா:—அவர் எங்கே?

சுக்ரீ:—சேனைகளைக் கக்ஷி பிரித்து அவரவர்க்கேற்ற வேலையைக் காட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார். (பக்கத்தில் நிற்கும் ததிமுகனை நோக்குகிறான்) ஸுஷேணனையும் நளனையும் ஸேதுபந்தனத்துக்கு வேண்டிய பாறைகளையும் மரங்களையும் சேகரிக்கச் சொல்லியிருக்கிறேன். இந்த வர்ஷாகாலம் தாண்டலாமென்றிருந்தேன். இன்னும் ஒரு பக்ஷத்துக்குள் ஸீதையை நாங்கள் யாவரும் காணவிடில்

ஸேனை புறப்படச் சித்தமா இருக்கிறது. தாங்கள் கிஞ்சித்தும் கவலைப்படவேண்டாம். தங்களுடைய நிலைமையை நேரிற்பாராமையாலும், ஊகித்துணர்ந்து கொள்ளமாட்டாத என்னுடைய மந்த புத்தியாலும் சிறிது காலதாமதம் கார்யதாமதம் ஏற்பட்டிருப்பதை க்ஷமிக்க வேண்டுகிறேன். எனக்குத் தாங்கள் ஸகா மட்டுமல்ல பிதாவும் மாதாவுங்கூடத்தான்.

(ஹநுமான் பிரவேசம்.)

ஹநுமான் :—(ராமனுடைய பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து) பிரபோ, ஆர்ய புத்திர, தம்பி லக்ஷ்மணனும் நானுமாக எள்ளளவும் அலக்ஷியம் செய்யாமல் எல்லாக்காரியங்களையும் ஸர்வ ஜாக்கிரதையாக முன் ஏற்பாடு செய்து வருகிறோம். இன்னும் பத்துத் தினங்களில் மேல் நடவடிக்கை என்னவென்று தெரிவிக்கிறேன். குழந்தை அங்கதன் இப்பொழுதே தான் மட்டும் தனியே பாதி ஸைந்யத்தை நடத்திக்கொண்டு முன்னதாகப் புறப்பட அநுமதி கேட்கிறான்.

ரா :—புலிக்குப் பிறந்தது பூனையாகுமா? ஏககாலத்தில் உங்களை எல்லோரையும் பார்த்ததில் என் பரமாநந்தத்தை உங்கள் ராஜா மூலமாக உங்கள் ராஜ்யத்துப் பிரஜைகளெல்லோருக்கும் தெரிவிக்கிறேன். (ஸுக்ரீவனைத் தோளில் தட்டிக் கொடுக்கிறான்.)

ஹநு :—அவசியம் நேர்ந்தால் ஸேதுபந்தனத்துக்கு வேண்டிய ஸாமான்களெல்லாம் ஸமுத்திரதீரத்தில் வந்து விழுந்து கிடக்கின்றன.

ஸுக்ரீ :—நளன் இன்னும் ஒரு வாரம் வேண்டுமென்றானே!

ஹநு :—இப்பொழுது சேகரமாயிருக்கிறதே போதுமானது; இன்னும் வந்து கொண்டிருக்கிறது.

ரா :—நீங்கள் விசிராந்தி செய்து கொள்ளப் போகலாம். (ராமலக்ஷ்மணர் தவிர மற்றெல்லோரும் நிஷ்க்ரமணம்)—(தனக்குள்) ஐந்து விரலில் ஒரு வாரத்தை எப்படி எண்ணிக் கழிப்பேன்!—லக்ஷ்மணா, நீ ஆகாரம் பார்த்துக் கொள்.

லக்ஷ் :—அண்ணா, நாம் இந்த வெயில் நேரத்தை இந்த லதாமண்டபத்தில் கழிப்போம்; தாங்கள் சற்று இந்த தர்ப்பசயனத்தில் படுங்கள். (ராமனுக்கு விசிறுகிறான்.)

ரா :—(அரைத் தூக்கத்தில் 'என் மேல் கோபமா?' தனக்குத்தானே) நான் உன்னை இத்தனை நாள் தேடாமலிருந்தேனென்று கோபமா! என் சத்துருவைக் கொன்று உன்னை அழைத்துச் செல்வதல்லவா யுத்தம்! உன்னை ஸ்வப்நத்தில் காணவேண்டிக் கண்ணை மூடினால் இந்தக் கல்நெஞ்சு படைத்தவனுடைய புஷ்பபாணங்கள் என் கண்களிலிருந்து நித்திரையைத் துரத்தி விடுகின்றனவே,—ஹா, ஸீதே! (எழுந்து உட்காருகிறான். எல்லோரும் நிஷ்க்ரமணம்.)

ஸந்தி 7.

[இடம்: பிரஸ்ரவணகிரி]

தினம்: 2. காலம்: காலை.

பிரவேசம்.

ராமன், லக்ஷ்மணன், அநுமான்.

ராமன்:—வாயுபுத்ர, எந்தத் திக்கில் உமக்கு உத்தரவு?

ஹநுமான் :—என்னையும் யுவராஜாவையும் தெற்குதிக்குக்கு வைவஸ்வத ராஜ்யம் உள்பட, நியமித்திருக்கிறார்.

ரா :—இந்த ஏற்பாடு உங்களுடைய இச்சையா, ராஜாவினுடைய ஆக்ஞையா?

ஹநு :—இரண்டுந்தான். ஜடாயுவினுடைய ஜ்யேஷ்டரான ஸம்பாதியைத் தெற்கு திக்கில் நாங்களிருவரும் அதிருஷ்டவசமாய் ஸந்திக்க நேர்ந்தது முதல், ராஜாவுக்கு எங்களையே அந்த திக்குக்கு அதிகாரிகளாக நியமிக்கப் பூர்ண அபிப்ராயம் உதித்து விட்டது. ஸம்பாதி மஹேந்திர சைலத்தின் சிகரத்திலிருந்தபடியே லங்காபுரி அரண்மனையில் ராவணனையும், உத்

யானத்தில் ராக்ஷஸிகளுக்கு மத்தியில் நடுங்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கும் ஸீதையையும் காண்கிறதாகச் சொன்னது முதல் எனக்கும் அதை நேரிற்பார்த்து வரவேண்டு மென்று குதூஹலம் தோன்றி விட்டது.

ரா :—அநேகமாய் நீர்தான் ஸீதையைக் கண்டு பிடிக்கலாமென்று நினைக்கிறீரா?

ஹநு :—என் மனதுக்கு நிச்சயமாகத்தான் படுகிறது.

ரா :—(சற்றுத் தழ தழத்த குரலில்) ஸீதைக்கு நீர் யார் என்று தெரிவிக்க இது உதவுமல்லவா? (தன் மோதிரத்தை ஹநுமான் கையில் கொடுக்கிறுன்.)

ஹநு :—(பெற்றுக்கொண்டு சிரஸில் வைத்து) நானும் ஏதாவது தங்களிடமிருந்து பெற்றுக் கொண்டுதான் புறப்பட உத்தேசித்தேன். தங்கள் கிரீடத்தைக் கைகேயீயும் பாதுகையைப் பரதனுமாக அபஹரித்துக் கொண்ட பிறகு நான் யாசிக்கக்கூடிய சின்னம் எது வென்று புலப்படவில்லை. இந்த மோதிரம் காரியஸித்திக்கு அவசியந்தான்.

ரா :—சற்று யோசித்து என் ஸீதையை நீர் பார்த்ததில்லையே!

ஹநு :—அதனுலென்ன, நினைத்துக் கொள்ள முடியும்.

ரா :—பூங்கொடி போலிருப்பாள்,

ஹநு :—இப்பொழுது இன்னுந்தான் இளைத்திருப்பாள்.

ரா :—கண்கள் நிர்மலமான தடாகத்தில் நீலோத்பலங்கள் போலிருக்கும்.

ஹநு :—இப்பொழுது கொஞ்சம் கலங்கித்தானிருக்கும்.

ரா :—தந்தங்கள் முத்து மாலை கோத்தது போலிருக்கும்.

ஹநு :—இப்பொழுது சிரத்தைக் குறைவினுல் சற்று விவர்ணமாயிருக்கலாம்.

ரா :—அதரங்கள் பக்குவ பிம்பங்களை ஜயிக்கும்.

ஹநு :—தத்கால சோகதாபம் அவைகளை உலர்த்தியிருக்கும்.

ரா :—கேசபாரம் கார்மேகம் போல் தழைந்து சுமந்து நிற்கும்.

ஹநு :—இப்பொழுது சண்டமாருதத்திலகப்பட்டதுபோல் அலங்கோலமாய் சற்றுச் சிதறித்தான் கிடக்கும்.

ரா :—அதிகமாய்ச் சிரிக்கமாட்டாள்.

ஹநு :—இப்பொழுது நிச்சயம் அழுது கொண்டுதானிருப்பாள்.

ரா :—விரல்கள் பவளக்குருத்துப் போலிருக்கும்.

ஹநு :—இப்பொழுது கரும்பவளமாகவைத்துக் கொள்ளலாம்.

ரா :—என் கருத்தைத் தெரிவிப்பீரா?

ஹநு :—உன்னைப்பிரிந்த ராமன் தூங்கவில்லை என்பேன்.

ரா :—உன்னைச் சீக்கிரம் விடுவிப்பதில் சிரத்தைக் குறைவாயிருக்கிறுன் என்றெண்ண வேண்டாம், இன்னும் இரண்டே மாதத்திற்குள் உன்னை மீட்டுக் கொள்வான். வேறொரு ஸ்திரீயை நினைவிலும் வைக்கமாட்டானென்றும், உன்னையும் ஒரு க்ஷணமும் மறவான் என்று சொல்லுவீரா?

ஹநு :—பிரபோ. அவ்வாறே, சொல்லித் திரும்பி வந்து நங்களுக்குச் செய்தி தெரிவிக்கும் பாக்யம் பெறுமாறு தங்கள் ஆசீர்வாதங்களைக் கோருகிறேன்.

ரா :—இனி நீர் ராஜாவினுடைய ஸேவைக்குச் செல்லலாம். (ஹநுமான் போகிறுன்) லக்ஷ்மண! நாளைக்கு நாம் மஹேந்திரகிரிக்கே சென்று விடுவோம்.

லக்ஷ் :—அப்படியே செய்து விடுகிறேன், அண்ணு!

(எல்லோரும் நிஷ்க்ரமணம்.)

ஸந்தி 8.

தினம்: 1. காலம்: மாலை.

[1. இடம்: லங்காபுரிக் கடற்கரை]

பிரவேசம்:—(அநுமான் மணற்குன்றில் இளைப்பாறி வீற்றிருக்கிறார்)

ஹநு:—ஏதோ ஸ்ரீராம கிருபையாலும் ராம கைங்கரியத்துக்குரிய செய்வாநுக்ரஹத்தாலும் ஸமுத்திரத்தில் முழுகிப் போகாமல் இக் கரை வந்து சேர்ந்து விட்டேன். இந்த லங்காபுரியின் அரண்களையும் உன்னத விமானங்களையும் விஸ்தாரமான பிராகாரங்களையும் பார்க்கையில் பாறையோடு பாறையாய்ப் புதைந்து கிடக்கும் நம்முடைய கிஷ்கிந்தையும் ஒரு ஊரா என்று தோன்றுகிறது. என்னே மயனுடைய வேலை? இந்த மஞ்சள் வெயிலில் பொன்னிறம் பெற்ற மேகங்கள் எவை திரிகூடபர்வதத்தின் சிகரங்கள் எவை, லங்காநகரத்தின் கோபுர கும்பங்கள் எவை வென்று சொல்லக்கூடவில்லை. நன்றாய் இருட்டுகிறவரையில் இங்குச் சற்றுக் காற்று வாங்கிக்கொண்டிருப்போம். (ஈரமணலினால் கோபுரங்கள் கட்டுகிறான்) இதுதான் நான் உண்டாக்கிய லங்கை. இதோ இதை உதைத்து வீழ்த்துகிறேன். (காலால்தான் கட்டிய மணற் குன்றுகளை இடித்துத் தள்ளி) இப்படித்தான் அதோ தெரிகிற லங்கையும் இடிந்து விழப் போகிறது. இந்தத் தென்னந் தோப்புக்களையும் கதலித்தோட்டங்களையும் நமது சேனைகள் கண்டால் கிஷ்கிந்தையை விட்டு இங்கேயே குடிவந்துவிட ஆசைப்படும். அதோ புறப்படுகிற சந்திரனுக்கு மட்டுந்தான் என் வருகை தெரியலாம். (கோட்டைச்சுவர்களில் தாவிக் குதிக்கிறான்.) என் ரூபத்தை வௌவால் குஞ்சுபோல் செய்து கொள்வேன். (சின்னஞ்சிறியவௌவாலாக மாறிக் கொண்டு பறந்து செல்கிறான்.)

தினம்: 1. காலம்: நடுநிசி.

[2. இடம்: ராவணனுடைய அந்தப்புரம்.]

பிரவேசம்:—(ராவணன் தேவகந்தர்வராக்ஷஸ ஸ்திரீகளுக்கு மத்தியில் ஆழ்ந்த நித்திரையிலிருக்கிறான்; ஹநுமான் வௌவால் ரூபத்துடன் மஞ்சத்தின் மேல் விமானத்தில் தொத்திக் கொள்ளுகிறார்.)

ஹநு:—(தனக்குள்) லங்காபுரி முழுவதும் சுற்றிவிட்டேன். ராக்ஷஸர்களுடைய கிருஹங்களெல்லாம் புகுந்து பார்த்து விட்டேன். தேவியைக் கண்டேனில்லை. எங்கும் ராக்ஷஸ ஸ்திரீகளே முட்டு முட்டாய் உருண்டு கிடக்கிறார்கள். நம் கிஷ்கிந்தா வாஸிகளே அதிரூபவதிகள் என்னலாம். இந்திரஜித்தினுடைய மாளிகையில் அவனது தன்து பத்தினியுடன் பேசிக்கொண்டிருந்ததெல்லாம் காதில் விழுந்தது. ராஜ்யத்தில் ராஜபக்தியும் குடும்பத்தில் பிதிருபக்தியும் ஆழ்ந்து வேரூன்றிக் கிடக்கிறது. தகப்பனார் செய்வது அகிருத்யம் என்று தெரிந்திருந்தும் தகப்பனாரைத் திருத்தப் பார்ப்பது நமக்கல்லவென்று சொல்லி விட்டான். அவனது பத்நீ ஸுலோசனை கணவனைக் கேட்டதிலிருந்து அசோகவனத்தில் யாரோ புதிய ஸ்திரீ ஒருத்தி அழுதுகொண்டு ராக்ஷஸிகளுக்கு மத்தியில் உட்கார்ந்து கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அசோகவனம் எங்கே என்று தேட வேண்டும். அநேகமாய் அவளே ஸீதாதேவி என்று தோன்றுகிறது. இதோ படுகுழியில் விழுந்த மதயானை போல் கிடக்கிறான் தசக்ரீவன். கைகளும் கால்களும் இரும்பு உலக்கைகளும் இரும்புத் தூண்களுந்தான். வௌவால் கெடி கூடத் தெரியாமல் தூங்குகிறான். ஹா, இதோ அடுத்ததொரு சயனத்தில் கிடக்கிறது யார்? இவளிடத்தில் மற்றவர்களைப்போல ராக்ஷஸ லக்ஷணத்தைக் காணோமே! மிருதுவாயும் நிர்மலமாயும் தீர்க்கமாயும் பூர்ணமாயும் அமைந்திருக்கிற இந்த ரூபம் தேவியாயிருக்கக்கூடுமோ? ராமன் சொன்ன லக்ஷணங்கள் இங்கே கிடைத்து விட்டன; ஜயம்! காரியத்தை ஸாதித்து விட்டேன். (துள்ளிக் குதிக்கிறான்.) இத்தனை ஸ்திரீகளை இந்த நிலை

மையில் உற்றுப்பார்க்க ஏற்பட்டாலும் என்னுடைய விரதம் கெடவில்லை, என் மனம் சிறிதும் கலங்கவில்லை; தன்னிலை கலையவில்லை. அதனாலென்ன? ஸ்ரீராம கைங்கரியம் பெரிது! (ஸ்ரீராமனை தியானித்து நமஸ்கரிக்கிறான்)—அடடா, என்ன அற்ப புத்தி! ஸீதை இப்படி வாடாதே மேனியுடன் தூங்குவாளா? அதுவும் இந்த இடத்திலா?—சை! இந்தப் பாபத்துக்குப் பிராயச்சித்தம் உடனே போய் இந்த நிசியில் ஸமுத்திர ஸ்நானம் செய்வேன்; பிறகு அசோகவனம் செல்வேன் (பறந்தோடுகிறான்.)

தினம் 1. காலம்: நிசி; கடைசி ஜாமம்.

[3. இடம்: அசோகவனம்]

(பிரவேசம்:—ஹநுமான் சோர்ந்து உட்கார்ந்திருக்கிறார்.)

அநு:—நானும் எவ்வளவோ நம்பிக்கையாய்த்தான் வந்தேன். இன்னும் இரவு நாலைந்து நாழிகைதான் மிகுதி; அதற்குள் தேவியைக்காண வேணுமே. காணாமல் ஸுக்ரீவன் முன் போவதிலும் இந்த ஸமுத்திரத்திலேயே விழலாம். அதோ அங்கு என்னவோ விளக்கு வெளிச்சம் தெரிகிறதே, யாரோ பேச்சுக் குரல் கூடக் கேட்கிறது. ராக்ஷஸிகள் குரல் தான் இவ்வளவு தூரம் கேட்கும். போய்த் தான் பார்ப்போம் (பறந்து செல்கிறான்) [பிரவேசம்: ஒரு மரத்தடியில் ராக்ஷஸிகளும் நடுவில் ஒடுங்கி ஒதுங்கி உட்கார்ந்திருக்கும் ஸீதையும் தோன்றுகிறார்கள்.] ராம, ராம! ஜயராம! கண்டேன், கண்டு கொண்டேன், கண்டு விட்டேன். கிருதகிருத்யனானேன்! (குட்டிக்கரணம் போட்டுத் துள்ளி எழுகிறான். வாலைச் சுழற்றி அடிக்கிறான்.) ராமன் சொன்ன அடையாளங்கள் எல்லாம் சரியாய்ப் பொருந்தி யிருக்கின்றன. (தன் மீது தழைகள் உதிர்ந்த காரணத்தைக் காண ஸீதை அண்ணாந்து பார்க்கிறாள். ஒன்றையுங் காணாமல் சிந்தை யிலாழ்ந்து விடுகிறாள்.)

அயோமுகீ (ராக்ஷஸீ)—அடி பெண்ணே! நீ இத்தனை நாள் பிடிவாதம் பிடித்தது போதும், இனிச் செய்வது அதிகம்.

பாண்டோதரீ:—இப்பேர்ப்பட்ட புருஷனை அடைய எத்தனை ஜன்மங்கள் தபசு செய்ய வேண்டும்! உனக்கு வலுவிலே கிடைக்கிறதினால் அருமை தெரியவில்லை!

அக்னிஜிஹ்வை:—இவளைப் பட்டமஹிஷியாக்குகிறாராமே, நாமெல்லாம் இங்கேயே பிறந்து வளர்ந்து காத்திருக்க எங்கேயோ கிடந்தவளுக்கு வந்த அதிர்ஷ்டத்தைப் பார்!

கஜகர்ணிகை:—நம்முடைய ராணி ஸாது, பாவம்! பர்த்தாவினுடைய இஷ்டத்துக்கு விரோதம் சொல்லாத பதிவிரதை!

ரக்தாக்ஷி:—அடி பெண்களா, அதற்கு ஏதாவது சோறு கொடுத்துத் தின்னச் சொல்லுங்கள்: இப்படி நாளுக்கு நாள் துரும்பாய்ப் போனால் மஹாராஜா நம்மை எல்லாரையும் தூக்கி அக்கினியில் போட்டு விடுவாரே!

அயோமுகீ:—(ஸீதையைப் பார்த்து) ஏ பெண்ணே, நீ இனி எங்கு ஓடமுடியும்! உன்னை யார் தேடி இங்கு வந்து அழைத்துப் போக முடியும்? ஏன் யௌவனத்தை வீணாக்குகிறாய்? யௌவனம் போனால் வராது நல்ல காலத்தைக் கைவிடாதே, சீக்கிரம் பதில் சொல்!

ஸீதை:—(ஹீனஸ்வரமாகத் தலை குனிந்தவண்ணம்) ஸஹோதரிகளே, மனுஷ்யஸ்திரீகள் ராக்ஷஸர்களை விரும்பமாட்டார்கள். விரும்புதலும் தகாதென்று உங்களுக்கெல்லாம் தெரியாதா? என்னை ஏன் இப்படி வீணாய்த் தொந்திரவு செய்கிறீர்கள்? போதும் நான் இப்படியே மடிந்து போகிறேன், என்னை விட்டு விடுங்கள்!

பாண்டோ:—அடியே, அதோ தீவட்டி வெளிச்சம் தெரிகிறது. மஹாராஜா வந்து விட்டார், தூங்காதேயுங்கள், எழுந்து நில்லுங்கள், கண்களைத் துடைத்துக் கொள்ளுங்கள். (ஸீதை மரத்தின் மறைவில் ஒளிகிறாள்.)

(தீபங்கள் தாங்கிய சேடிகளுடன் ராவணன், ஸர்வாலங்கார பூஷிதனாய்ப் பிரவேசம்.)

ராவணன் :—ஸீதே, சற்று இப்படி என்னெதிரில் வெளிச்சத்தில் வரமாட்டாயா? திக்பாலகர்களை ஜயித்த என்னை நீ உன் ரூபத்தினால் ஜயித்து விட்டாய்—என்று கர்வமா? அல்ல, அந்த அசரீரிப்பயல் அவன் சாம்பலாய்ப் போயும், அவனுடைய வில்லையும் பாணங்களையும் வைக்க இடமில்லாமல் உன்னிடம் கொடுத்துப் போயிருக்கிறான் ஆதலின் உனக்கு என்னை ஜயித்த பெருமை யில்லை. லங்கேசுவரன் என்று பிரதாபஞ் சொல்லிக் கொண்டு நான் இந்தப் புஷ்பபாணனிடம் படும் வேதனைகளைச் சொல்லிக் கொள்ள நாணமாயிருக்கிறதே! ஸீதே உன் தயவைத்தான் எதிர் பார்க்கிறேன். உன் மனம் என்றைக்கு இரங்குமோ தெரியவில்லை! இங்கே யாருமில்லை, நீ ஸங்கோசப்படாமல் பேசலாம். ராக்ஷஸிகளும் சேடிகளும் ஒதுங்கி விட்டார்கள். உன் குரலைக் கேட்க, உன் ஆக்ஞையை நடத்த, நீ காலாலிட்டதை இருபது கைகளாலும் பத்துத் தலையினாலும் நடத்தி வைக்கக் காத்திருக்கிறேன். உன் பாதபதுமங்களைத் தூக்கமில்லாமல் விழித்திருக்கும் என் கண்களில் ஒத்தி அனலைத் தணித்துக்கொள்வேன். சற்று நிமிர்ந்துகொள். உன் அதரங்களை மட்டும் பார்த்துச் சித்திரம் வரைந்து கொள்கிறேன். (சந்தனப்பலகையில் வர்ணக் கோலால் வரைகிறான்.)

உன்னை என் பட்டமஹிஷியாக்குவேன் என்பது ஸத்யம்; உன் மாதா பிதா வர்க்கத்துப் பந்துக்களெல்லோரும் இந்த ராஜ்யத்திலேயே ஸ்திரமாய்க் குடியேறி ஸந்தோஷமாய் சாசுவதமாய் வாழ்ந்து காலங் கழிக்கலாம். இன்றைக்கு உன் முடிவான பதில் தெரிந்து கொண்டுதான் போவேன். (ரௌத்திராகாரமாய் விழிகளை உருட்டுகிறான்.)

ஸீதை :—(ஒரு துரும்பைக் கிள்ளித் தரையில் போட்டு) ஏ துரும்பே, உன் இனத்தவரில் பெரியவர் சிறியவர் யாரேனும் உனக்கு நற்புத்தி சொல்லத் தைரிய முள்ளவர் அற்றுப் போய் விட்டனரா உன் ராஜ்யத்தில்? (பின்புறம் திரும்பிக் கொள்கிறாள்.) பிரியம் என்பது விலைக்கு வாங்குகிற பொருள் என்பதோடு நீ படித்த பாடம் முடிந்ததா? ஆனால் நீ உண்மையான பிரியத்தை உன் ஜன்மத்தில் கண்டிருந்தாலல்லவா உனக்குத் தெரியப்போகிறது! ஏகபத்னீ விரதத்தில் வேரூன்றினாலல்லவோ ஜந்துவின் உள்ளம் எவ்வளவு ஆழம் என்று உனக்குத் தெரியப் போகிறது! வண்ணாத்திப் பூச்சிபோல் வட்டமிடுகிற உனக்கு மேல் பூச்சுத்தான் கண்ணைப் பறிக்கும். உனக்கு நற்கதி வேண்டுமானால் என்னை இந்த க்ஷணமே ஸ்ரீராமனிடம் சேர்த்து விடு. ராமனுடைய ஸ்வபாவம் உனக்குத் தெரியாமல், வீணே ஸங்கோசமும், கர்வமும், பயமும் பிடிவாதமும் உன்னை நரகத்துக் கிழுக்க வேண்டாம். அவன் பரமதயாளு, சரணம் என்ற சத்துருவை வாரி எடுத்து மார் போடணைத்து முத்தமிடுவான். துரோக சிந்தனையுடன் ஸ்நேக வேஷம் பூண்டு வந்தவனையும் விசாரிக்காமல் ஏற்றுக் கொள்வான். நீ ராஜா என்று பதவி வகித்துப் பிரஜைகளுக்கு நல்வழி காட்ட வேண்டாமா? உன் வீட்டில் பெண், நாட்டுப் பெண்கள், யாரு மில்லையா? இருந்தால் அவர்கள் முகத்தில் விழிக்க உனக்கு வெட்கமா யிராதா?

ராவண :—ராக்ஷஸஜாதிக்கு ஏகபத்னீ விரதம் கிடையாது. எந்த ஸ்திரீயும் அபஹரித்து ஸ்வீகரிக்கத்தக்கவளே!

ஸீதை :—ஸ்ரீராமனுடைய ஸ்திரீயைத் தவிர என்பதை சீக்கிரத்தில் யுத்த களத்தில் ராமபாணம் உன் ஹிருதயத்து ரத்தத்தைப் பானம் செய்கையில் நீ உணரப்போகிறாய்! அப்பொழுது உன் தலைமேல் வட்டமிடும் கழுகுகள் சிறகை விரித்து உனக்குக் குடை பிடிக்கும். நானே உன்னை எரித்து விடுவேன். ஆனால், ராமபாணம் இரையில்லாமல் துடிக்கும்.

ராவண :—உன் ராமன் எவ்விதத்தில் என்னை விடச் சிறந்தவன்? திறமை யுள்ளவன் கிடைத்த ராஜ்யத்தை விட்டுக் காட்டுக்கு வருவானா? நான் திக்பாலர்களை ஜயித்திருக்கிறேன் எல்லா சுகங்களையும் அநுபவிப்பதென்று ஸங்

கல்பத்தை நிறைவேற்றுகிறேன். திராக்ஷை புளிக்கும் என்ற நரிபோல் அபாவவைராக்கியம் கொண்டாடமாட்டேன். உன் ராமன் எல்லாவற்றையும் பறிகொடுத்து விட்டு நிற்கிறான்! அவனுக்கு அழக்கூடத்தெரியுமோ வென்று ஸந்தேகிக்கிறேன். உன்மேல் உண்மையான பிரிய மிருந்தாலும் திறமை யிருந்தாலும் இத்தனை நாள் இங்கே வரமாட்டானா? இனி இந்த லங்கையில் அடிவைக்க அவனால் ஸ்வப்னத்திலும் இயலாது! நீ உலக ஒப்புக்கு உன் பதிபக்தியை இத்தனை நாள் அநுஷ்டித்ததே அதிகம்! இனி என்னைத்திரும்பிப் பார்க்கலாம்! தோஷமில்லை! யாத்திரை சென்ற புருஷன் இந்த ஜன்மத்தில் திரும்பி வர மாட்டானென்று நிச்சயப்பட்டு விட்டால் அவன் மரிக்காவிட்டாலும் ஸ்திரீக்குப் புனர் விவாஹம் மனுநீதியில் எடுத்திருப்பதை உன் பிதாவிடம் நீ கேட்டிருப்பாய்!

ஸீதை :—நீசப்பயலே! நீ வாழ்கிற வாழ்வுக்கு சாஸ்திரம் வேறேயா? அடபாவி! உன்னால் என்னைத் தொட்டு விட முடியுமென்று கனவிலும் நினையாதே! கழுதைக்குத் தெரியுமா கர்ப்பூர வாஸனை? ஸ்ரீராமனைப்பற்றி அபிப்பிராயம் கூற உனக்கென்ன அதிகாரம்? போதும்! உன் ஊத்தைவாயை மூடு, பதரே! (உதடு துடிக்கக் கண் சிவக்கப் பின் புறம் திரும்பிக் கொள்கிறாள்.) (தனக்குள்) அவன் சொல்வதும் சரிதான்; என்னுடைய துர்ப்பாக்கியம் தான் தீனதயாளுவான என் பிராண நாதருக்கே என்னிடம் மட்டும் கிருபை வரவில்லை போலும்!—(கண்ணீர் வடிக்கிறாள்.)

ராவண :—உன்னிஷ்டத்துக்கு விரோதமாக உன்னைத் தொடமாட்டேன் என்று தெரிந்து கொண்டு நீ என்னை ஏமாற்றி வருகிறாய். ராக்ஷஸர்களுக்கு நரமாம்ஸத்தை வேறு விதமாகவும் அனுபவிக்கத் தெரியும். இன்னும் இரண்டே மாதம் தவணை கொடுத்திருக்கிறேன். அதற்குள் நீ படிந்து வராவிட்டால் என் *மஹானஸத்து உத்யோகஸ்தர் உன் அழகிய உடலை என் உபயோகத்துக்குரியதாக்கி வைப்பர்! இனி உன் இஷ்டம் போல் நடந்து கொள்! இது தான் என் கடைசி வார்த்தை! (ராக்ஷஸிகளைப் பார்த்து) இவளைப் பார்த்துக் கொள்ளுங்கள்! (வேகமாய்ப் போய் விடுகிறான்.)

ஸந்தி 8.

தினம் 1. காலம்: இரவு கடைசி ஜாமம்.

[இடம் அசோகவனம்]

ஹநு :—(கிளைகளுக்கிடையில் தனக்குள்) என்னே ராமன் நெஞ்சம்! இந்த உத்தமியைப் பிரிந்தும் உயிர் தரித்திருக்கிறானே! (ராக்ஷஸிகள் ஒவ்வொருவராய் இருப்பிடத்திலேயே தூக்கத்தில் சாய்ந்து விழுகின்றனர்.)

ஸீதை :—(கைகால் நடுக்குற்றுத் தள்ளாடிச் சோர்ந்து விழுகிறாள்; பிறகு மெல்ல எழுந்து தன் வஸ்திரத்தின் ஓரத்தைப் பிரயாசையுடன் கிழிக்கிறாள்.) ராம, ராம! பிராண நாதா, இவ்வளவு ஊழலான பிறகு இந்த ஜன்மந்தான் தொலையட்டுமே! தாங்கள் என்னை ஒருநாளும் கைவிடமாட்டீர்கள். இந்தப் பருத்த உடலைத் தூக்கி இந்த மெலிந்த ஆவி பறந்து வந்து பாதாரவிந்தங்களை அடையக் கூடவில்லை போலும்! இதை இந்தச் சுமையிலிருந்து இதோ விட்டுவிடுகிறேன் (கழுத்தில் துணியைக் கட்டி.) ராம, ராம!

ஹநு :—(மேற் கிளையில்—உரக்க) ராம, ராம! ஜய, ஜய ராம்!

ஸீதை :—யாரங்கே! (தூக்கி வாரிப் போட்டவளாய் நிமிர்ந்து பார்த்து உற்றுக் கேட்கிறாள்.) சீ! ராக்ஷஸிகளுடைய குறட்டைதான் என் காதில் அப்படி விழுந்திருக்க வேண்டும்! (மறுபடியும் கழுத்துத் துணியை இழுக்கிறாள்.)

ஹநு :—(மாக்கிளையில் சிறு குரங்கு போல் தோன்றி) ராம, ராம, ஜய! ஜய ராம, ஜானகி ராம் ஸீதாராம்!

*சமையலறை.

ஸீதை :—(மயிர்க்கூச்சிட்டு உதடு துடிக்க, நாக்குழற) ஏ குரங்கே, நீ யார்? எங்கு வந்தாய்? உனக்கு அவனை எப்படித் தெரியும்? அந்தப் பெயரை நீ எங்கே கேள்விப்பட்டாய்? இங்கு என்னெதிரில் அதைச் சொல்லக் காரணமென்ன? நீ எப்போழுது வந்தாய்? எப்படி வந்தாய்?—பதில் சொல்லாயோ?—சற்று முன் வந்து போன அரக்கனை இந்த ரூபமாய் வந்து இந்தப் பெயரைச் சொல்லிப் பிழைக்கப் பார்க்கிறாயோ! நீ யாராயினும் என்னைத் தொந்திரவு செய்யாதே, தடை செய்யாதே, விட்டு விடு! நான் உனக்கு யாதொரு தீங்கும் செய்ய வில்லையே! ஸ்திரீக்குத் தன் ரூபமே சத்துரு! (அழுகிறாள்.)

ஹநு :—எதிரில் இறங்கி நின்று தேவி, அழ வேண்டாம், ராமன் வந்து கொண்டிருக்கிறார். நான் அதைத் தெரிவிக்க வந்த தூதன், ராம தாஸன் அஞ்ஜனை புத்திரன், ஹநுமான் என்றும் கூப்பிடலாம்.

ஸீதை :—(பிரமித்து விழிக்கிறாள்!) நிஜந் தானா, ஸ்வப்னமா? (தன்னைத்தானே கிள்ளிக் கொள்ளுகிறாள்.) வலிக்கக்காணோமே, ஸ்வப்னந்தான், குரங்கு ஸ்வப்னந்தானா வரவேண்டும்! நான் இந்த ஜந்துவை முன் பின் பார்த்ததில்லை. விழிப்பில் பார்த்திராததை ஸ்வப்னத்தில் பார்ப்பதுண்டோ? ஆம்—யாரோ ஒருத்தி— உஷை, உஷை!—பாக்கியவதி! ஆசைப்பட்டதைக் கனாக்கண்டாள், கனாக்கண்டதை விழித்துக் கட்டியணைத்தாள்! உலகத்திலேயே அவளொருத்திக்குத்தான் அந்த அதிர்ஷ்டம்!

ஹநு:—தேவி, தங்களை இழந்த ராமன் தூக்கத்தையும் பறிகொடுத்தான், இது ஸ்வப்னமல்ல; இந்த மோதிரத்தைத் தொட்டுப் பாருங்கள், அந்த அக்ஷரங்களைப் படியுங்கள்! இது அழுத்தமாயில்லையா? கடித்துப்பாருங்கள், ஸ்வப்ன மோதிரம் பல்லை உடைக்குமா? (ஸீதையின் கைகளில் மோதிரத்தைக் கொடுக்கிறார்.)

ஸீதை :—ஸீதை (கை நடுக்கத்தோடு வாங்கிப் பார்த்து முத்தமிட்டு ஹிருதயத்தில் அணைத்துக் கொள்கிறாள்—கண்ணீர் வடிக்கிறாள்.) என் ஹிருதயத்தில் பாலை வார்த்தாயப்பா! உலகில் நீ சிரஞ்சீவியாய்க் கீர்த்திமானாய் விளங்குவாய் அப்பா! உலக வழக்கும் பொய்யல்ல வென்று தெரிகிறது. 'ஆயுசு மட்டு மூண்டானால் என்றைக்காவது நல்ல காலம் பிறக்காமல் போகாது!' என்கிறார்களே அது சரிதான் போலிருக்கிறதே!—உன் வரலாற்றைச் செவ்வையாய்ச் சொல். எனக்கு இன்னும் ஸந்தேகந் தீரவில்லை.

ஹநு :—கிஷ்கிந்தையில் வானராஜன் வாலி அரசாட்சி செய்து வந்தான் அவனுக்குத் தம்பியும் யுவராஜாவுமாகிய ஸுக்ரீவனுக்கும் அண்ணனுக்கும் விரோதம் ஏற்பட்டு விட்டது. நான் தம்பியினுடைய மந்திரி என் பெயர் ஹநுமான். நாங்களிருவரும் கிஷ்கிந்தையை விட்டு ரிசியமூகபர்வதத்தில் வசிக்கிறோம். எங்களுக்கு ஸ்ரீராமனுடைய தரிசனமும் ஸ்நேகமும் கிடைத்த வரலாற்றைக் கேளீர்! ஒரு நாள் ஆகாய வீதியில் ஒரு ரதம் லங்கையை நோக்கிப் பறந்து கொண்டிருந்தது. அதில் ஒரு ஸ்திரீயின் உருவம் போல் ஏதோ தெரிந்தது மன்றியில் அதிலிருந்து ஒரு வஸ்திர முடிச்சும் கீழே விழுந்தது. நாங்கள் அதைப் பொறுக்கி வைத்தோம். உடையவரைத் தேடிச் செல்லுகையில் ஸ்ரீராம லக்ஷ்மணர்களைத் தற்செயலாய்க் கண்டோம். அந்த முட்டையை சாக்ஷாத் ஜ்யேஷ்டரான ராமனிடம் கொடுத்தோம். அவர் அதைப் பார்த்து 'ஹா ஸீதே' என்று கதறி விழுந்து மூர்ச்சித்தார். நாங்கள் அவருக்குச் சைத்யோபசாரங்கள் செய்த பிறகு தங்கள் வரலாற்றைத் தெரிந்து கொண்டோம். பிறகு வாலியின் அதிக்கிரமத்துக்காக அவனை வதம் செய்து, ஸுக்ரீவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து உடனே இந்த மோதிரத்தை என்னிடம் கொடுத்துத் தங்களிடம் என்னைத் தூதனாக அனுப்பினார் ஸ்ரீராமன்!

ஸீதை :—ஸமுத்திரத்தை எப்படித் தாண்டினீர்?

ஹநு :—எல்லாம் ராம நாமத்தின் மஹிமை தான். ஆகாய மார்க்கமாகப்பறந்து வந்தேன்.

ஸீதை :—அப்படியானால் நீர் ஸாமான்ய வானரமல்ல!

ஹநு :—நான் தான் எங்கள் கோஷ்டியில் சோடையானவன்!

ஸீதை—ஸ்ரீராமன் சொன்ன வார்த்தை யை அப்படியே சொல்லும்.

ஹநு :—இன்னும் இரண்டே மாதத்தினுள் ஸைநியங்களோடு வந்து சத்துருக்களை ஸம் ஹாரஞ் செய்து தங்களை அழைத்து கொண்டு போவதாகச் சொன்னார். அதுவரையில் அவ சரப்பட்டு ஏதாவது பிராணாபத்தான காரியத் தைச் செய்து விட வேண்டாமென்று சொல் லச் சொன்னார்.

ஸீதை :—நிஜந்தானா? நீர் எப்பொழுது புறப்படப்போகிறீர்? என்ன சொல்வீர்?

ஹநு :—தாங்கள் ஏதாவது அடையாளங் கொடுத்தால் இம் மோதிரத்தைத் தங்களிடம் கொண்டுவந்தது போல் அதையும் ஸ்ரீராம னிடம் சேர்ப்பேன்.

ஸீதை :—வசனம்?

ஹநு :—தங்கள் பிராணன் இன்னும் இர ண்டு மாதத்திற்கு மேல் தாங்குவது கஷ்டம் என்பதை எடுத்துணர்த்திப் படைகளைத் திர ட்டி உடனே இங்கு கொண்டுவந்து நிறுத்தச் சொல்வேன்.

ஸீதை :—போதும் அப்பனே!

ஹநு :—தங்களை இப்பொழுதே என் முது கில் ஏற்றி ஸ்ரீராமனிடம் கொண்டு போய்ச் சேர்க்கக்கூடும்.—

ஸீதை :—ஆம், அறிந்தேன், ஆனால் அது உசிதமல்ல. ராமனுடைய அம்புக்குரிய இரை யை நாம் தடை செய்தவராவோம். ஆனால் இரண்டு மாதத்துக்கு மறு நாள் சூரியோத மாகி விட்டால் என் சரீரத்தை மட்டுந்தான் காணலாம், அல்லது அதுவும் ஸந்தேஹந் தான் என்பதை நிஸ்ஸந்தேஹமாய்த் தெரி வித்து விடுவீர்.

ஹநு :—அப்படியே, தாயே! (நமஸ்கரிக் கிறான்) ராம, ராம!

ஸீதை :—போய் வாரும்; இன்று நீர்தான் என் பிராணனைக் காத்தீர்! உமது மார்க்க முழுவதும் அநுகூலக்காற்றும் சாந்தமான ஸமுத்திரமும் தேஜஸ்வியான பாலசூரியனும் துணைவராகக் கடவர்!

(ஹநுமான் புறப்பட்டுப் போகிறார்.) இருந் தாலும் பெண்ணாய்ப் பிறக்கலாகாது. ராம, ராம!—(களைத்துத் தியானத்திலாழ்கிறாள்.)

திரிஜடை :—(கண்களைத் துடைத்துக் கொண்டு) பொழுது விடிந்து விட்டாற்போலி ருக்கிறதே! விடியுமுன் தோன்றும் கனவு பலிக் கும் என்பார்களே! (மெதுவாய்) ஸீதே! விழி த்திருக்கிறாயா?

ஸீதை :—(கண் மூடினபடியே) என்னால் உங்களுக்கு ஆகவேண்டியதென்ன? உங்கள் ராஜாவின் உத்தரவுப்படி செய்யுங்கள், போங் கள்!

திரி :—இல்லை ஸீதே, நான் தான் திரிஜடை; சீக்கிரம் முடித்து விடுகிறேன் நல்ல செய்தி. கேள், அவர்கள் விழிப்பதற்குள் விடியற்காலக் கனவு பலிக்குமல்லவா? நான் இப்பொழுது தான் கனவிலிருந்து விழித்தேன்; எங்கள் லங் காதிபதியின் ரதத்திற் கழுதைகள் பூட்டிருந் தன! அவை இரண்டு படுத்தன, இரண்டு மண்டியிட்டன, ரதத்தின் கொடியை ஒரு குரங்கு தாவிப் பிடுங்கிக்கொண்டு ஓடி விட் டது. வேறு கொடி வைக்க வைக்க அது அறுந்து விழுந்தது! குடையைக் காற்றடித் துத் தலை கீழாய்ப் பிடித்தது! தலை மேல் கழு குகள் வட்டமிட்டன, ஆந்தைகள் அலறின. வௌவால்கள் சிறகுகளால் அரசனது இரு பது கண்களையும் மறைத்தன! இவையெல்லாம் உனக்கு ஏதோ நல்ல காலம் நெருங்குவதைத் தெரிவிப்பதாகத் தோன்றுகிறது! இனி நீ சற்று அதைரியத்தை விட்டுவிட வேண்டும், ஸீதே!

[கிழக்கு வெளுத்தது. எங்கும் புகை. தூரத்தில் லங்காபுரியில் கூக்குரல்

"ஐயோ, போனேனே! அப்பா நெருப்புச் சூடு தாங்க முடியவில்லையே! என் தூங்குகிற குழந்தைகளெல்லாம் எழுந்திருக்காமலே வெந்து கிடக்கின்றனவே! எங்கே, அண்ணு, இங்கே இருக்கிறேன், என்னைத் தூக்கிக் கொண்டு போகமாட்டீர்களா?" என்று காவல் ராக்ஷஸிகள் ஓடிப்போய் விடுகிறார்கள்.]

ஸீதை:—நீ என்ன சொன்னாய் திரிஜடே! இதென்ன கூக்குரல்?

திரி:—லங்காபுரி எரிகிறது. கண் குளிரப் பார். நான் என் பிதாவைப் பார்க்கிறேன்! (போய் விடுகிறாள்.)

ஸீதை:—அதோ அந்த வெளிச்சத்தில் இங்கே வந்த ஹநுமானல்லவா தாவிக் குதிக்கிறான்! அவன் வாலில் நெருப்புப் பந்தம் குபீர் குபீர் என்று கொழுந்து விட்டெரிகிறது! இருவருக்கும் போட்டி யார் அதிக உயரம் எழும்புகிறார் என்று! ஐயோ இந்த ஹநுமானும் இறந்து விட்டால் என் கதி என்னாகும்! அட அற்ப சந்தோஷமே, அற்ப பாக்கியமே! இனி நானும் சென்று இந்தத் தீயிலேயே விழுகிறேன். அக்கினி பகவானே, என் மனம் என் ராமனைத் தவிர யாரையும் நினையாதது உண்மையானால் என் ஹநுமானைக் காப்பாற்றும்! அவருக்குச் சந்தனாபிஷேகமாய் அமைந்து நில்லும்—குருடன் கண்பெற்றிழந்தானென்றாயிற்று. (தேம்பி உரக்க அழுகிறாள்.)

(ஹநுமான் பிரவேசம்)

ஹநு:—தாயே புனர் நமஸ்காரம். ராம, ராம! அதற்குள் ஒரு சிறு விளையாட்டு! அதற்குள் ஒரு திகில்; ஓட்ட ஓட்டமாய் ஓடி வந்தேன்; லங்கையின் நெருப்பு இந்த அசோக வனத்துக்கும் பாவி விட்டதோ வென்று பயந்து ஓடி வந்தேன். நல்ல வேளை தங்களை உயிருடன் இரண்டாந்தரமும் கண்டு விட்டேன். இன்னொன்று நினைத்துக் கொண்டேன். தங்களுடைய அடையாளம் எனக்கு வேண்டும். என் ஸந்தோஷத்தில் எல்லாம் தட்டுக்கெடுகிறது.

ஸீதை:—எனக்குந்தான்! பேசிக் கொண்டிருந்ததை அதற்குள் மறந்து விட்டேன் பார்த்தீரா! உமக்கு அக்கினிபாதையொன்றும் ஏற்படவில்லையே! நல்ல வேளை! நான் பிரார்த்தித்துக் கொண்டே இருந்தேன்.—இந்தச் சூடாமணியை நான் கொடுத்த பதில் அடையாளமாக என் பிராணநாதரிடம் சேர்ப்பியும்.

ஹநு:—(ஏற்றுக் கொண்டு நமஸ்கரித்து) அதோ ராக்ஷஸர்கள் என்னைத் தேடி வருகிறார்கள்! அக்ஷயகுமாரன் என்பவனை முஷ்டி யுத்தத்தில் கொன்று விட்டேன். இன்னும் ஒரு கூட்டம் வருகிறது! ஜய, ஜய ராம்! நான் போய் வருகிறேன் அம்மா! இந்த மசகங்கள் என்னை ஒன்றுஞ் செய்ய முடியாது. பயப்படாதீர்கள்! (தாவி எழும்புகிறான்; நிஷ்கிரமணம்.)

ஸீதை:—வீரனே, உன் யுத்த வெறி என் புண்பட்ட மனதுக்கு ஈரமண்ணில் குலை தாங்கி நிற்கும் வாழைக்குப் புயற்காற்றுப் போலாகிறதை நீர் அறியமாட்டீரா?—(நிஷ்கிரமணம்)

ஹநுமத்ஸந்தேசம் (ஸந்தி 8)—முற்றிற்று.

அனுஷ்டானப் பகுதி

பொன்னாச்சியார்

(கார்க்கியன்)

பொன்னிவளம் மன்னிப் பொலியுஞ் சோழ நாட்டில். ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகட்கு முன் பிள்ளையுறங்கா வில்லிதாசர் என்றவோர் பெரியார் இருந்தனர். அவர், உறையூர்ச் சோழவேந்தன் அரண்மனையைக் காவல்புரியும் மல்லர்களில் முதன்மையாம் பதவிபெற்று, நாளொன்றுக்கு ஆயிரம் பொன் ஊதியம் பெற்று, அதைத் தம் கரத்தாற் றொடாமல், உடைவாளாலேந்தி வந்து, திருவரங்கத்திலிருந்த உடையவர் திருவடிகளிற் சமர்ப்பித்துக் கொண்டு வந்தனர். உடையவரும் அதையுவப்புட னேற்றுப் பாகவத ததீயாராதன கைங்கரியத்துக்கு உபயோகப்படுத்துவது வழக்கம்.

உடையவர் தினந்தோறும் உதயகாலத்தி லெழுந்து, தமது சிஷ்ய கோஷ்டிகளில் முதன்மைபெற்ற முதலியாண்டான், கூரத்தாழ்வான் முதலியவர்களோடு, திருக்காவிரிக் கெழுந்தருளி, நீராடி, நித்திய கர்மானுஷ்டானங்களைச் செய்து முடித்துத் திரும்பும்போது முதலியாண்டான் ஒரு பக்கமும், கூரத்தாழ்வான் ஒரு பக்கமும் ஈர ஆடையையேந்திவர, அவ்வாடையின் மீது தம் திருக்கரங்களை வைத்து, அவர்கள் கைகளைப் பிடித்துக்கொண்டு வருவர். அவ்வமயம், பிள்ளையுறங்கா வில்லிதாசர் அதிகாலையிலே அரசாங்கத்திற்குச் சென்று, இரவு முழுவதுங் காவல் புரிந்த தமது சேவகம் ஒப்பித்துத் திரும்பும் போது, யதிராசரைக் கண்டு, அடிபணிந்து, அடக்கமாக நிற்பர். அவரும், இவர்பால் ஆராத அன்புகொண்டு, அருகழைத்து, இவர் கரங்களைப்பற்றி மடத்துக் கெழுந்தருளுவர்.

இவ்வண்ணம் நடந்து வருங்காலையில், எம்பெருமானார் சிஷ்ய கோஷ்டிகளினிடையே ஓர் கலவரம் உண்டாயிற்று. அவர்கள், "முதலியாண்டான், கூரத்தாழ்வான் முதலியோர் கரங்களை ஈரவஸ்திரத்தாற் பிடித்து வரும் எம்பெருமானார், பிள்ளையுறங்கா வில்லிதாசரின் கைகளை மட்டும் வெறுங் கைகளாற் பிடித்து வருகின்றனரே! ஈதென்ன புதுமை!"

என்று ஒருவர்க்கொருவர் உண்மை யறியாமல் ஆச்சரியமும் அருவருப்பும் தோன்ற அந்த ரங்கமாகப் பேசிவந்தனர்.

அவர்கள் இவ்வாறு மறைவிற் பேசி வந்ததை யறிந்தனர் யதிராசர். அவர், பிள்ளை யுறங்கா வில்லிதாசரின் தூய மனத்தையும், பாகவதாபிமானத்தையும் அவர்கட்கு விளக்க எண்ணினர்.

ஓர் நாள், சிஷ்ய கோஷ்டிகள் தங்கள் ஈர ஆடைகளை மடத்து வாசலிலே யுலரவிட்டு, உள்ளே அன்னமுண்டிருந்தபோது, உடையவர், ஓர் பிராம்மணரைக் கொண்டு, உலரும் ஆடைகள் ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் முழம் கிழித்து வரும்படி செய்தனர். உண்ட பின்பு சிஷ்யர்கள் வாயிலில் வந்தபோது, தம் ஆடைகள் கிழிப்புண்டிருந்ததைக் கண்டு, சினம் பொங்க, அவ்வாறு கிழித்தவரைக் குறித்து வசை மொழிகள் பல வழங்கினர் அது கண்ட உடையவர், அவர்களை நோக்கி, 'இங்கு ஸ்ரீவைஷ்ணவர் தவிர மற்றையோர் வாரா ரன்றோ! ஆதலால், உமது ஆடைகளைக் கிழித்தவரும் யாராவது ஓர் வைஷ்ணவராகத்தான் இருத்தல் வேண்டும்; நீங்கள் ஏன் அவரை வையவேண்டும்? உமது ஆடைகளில் ஒவ்வோர் முழம் பாகவத கைங்கரியமாக இருக்கட்டுமே!' என்று சமாதானங் கூறியும், அவர்கள் வசை மொழி வழங்குவதை விடவில்லை.

இஃது இங்ஙனமாக, மற்றொரு நாள் உடையவர் இரண்டு சிஷ்யர்களை யழைத்து, 'நீவிர் இருவரும் பிள்ளையுறங்கா வில்லிதாசரின் திருமாளிகைக்குச் சென்று, அவர் இல்லாத போது, அவர் தேவியாரான பொன்னாச்சியார் உறங்குஞ் சமயத்தில், அவரணிந்திருக்கும் ஆபரணங்களை யெல்லாம் அபகரித்து வருவீராக' என்றனர். அவ்வண்ணமே அவ்விருவரும் அன்றிரவு சென்று தாசரின் திருமாளிகைக் கருகிற் பதுங்கி யிருந்தனர்.

அன்றும் வழக்கம்போல் தாசர் அரண்மனைக் காவலுக்குச் சென்ற பின்னர், அவர் மனைவியார் வாயிற் கதவை மூடி நன்றாகத் தாழிட்டு, ஓர் அறையில் மஞ்சத்தின்மீது படுத்துக் கண்ணுறங்கினர். அப்போது, பதுங்கியிருந்த இரு வைணவரும் பக்குவமாகத் தாசரின் திருமாளிகைக்குட் சென்று, மஞ்சத்தின் மேல் ஒருபக்கமாக ஒஞ்சரித்துக் கண்ணுறங்கி யிருந்த பொன்னாச்சியாரைக் கண்டு, மெதுவாக அவரருகிற் சென்று, அவரணிந்திருந்த ஆபரணங்களில் அவ்வொருபக்கத் திருவாபரணத்தை மட்டும் கழற்றிக்கொண்ட வளவிலே, பொன்னாச்சியார் இது தெரிந்து, மற்றொரு பக்கத்து ஆபரணங்களையும் பாகவதர் கழற்றிக் கொள்ளும்படித் தூக்கும் பாவனையாகவே மற்றொருபுறம் ஒஞ்சரித்துக் கொண்டனர். அதைக் கண்ட இருவரும், 'இவர் விழித்துக் கொண்டனர்' என்று எண்ணி, அங்கிருந்து விரைவில் வெளியேறி, வேகமாக மடத்துக்கு ஓடி வந்து, அங்குத் தம் வரவு நோக்கி யிருந்த உடையவரிடம் ஆபரணங்களைக் கொடுத்து, நடந்தவைகளை நவின்றனர். உடையவரும், அவ்வாபரணங்களை வாங்கியோர் புறத்தே வைத்து விட்டு, அவர்கட்குப் போக உத்தரவளித்தனர்.

மறுநாட் காலையில், தாசர் அரண்மனையி லிருந்து திருமாளிகைக்கெழுந்தருளியபோது, பொன்னாச்சியார் வழக்கம்போல் அவர் பாதங்களில் வணங்கி, அவரை வரவேற்று நின்றனர். அப்போது தாசர், தன் மனையாள் ஒருபக்கத்து ஆபரணங்களின்றியே நின்றமை கண்டு, 'பெண்ணே! உன் ஒருபக்கத்து நகைகள் எங்கே?' என்றனர். அதற்கு நாச்சியார், 'சுவாமி! அடியேன் நேற்று இரவு நித்திரை செய்திருந்தபோது, இரண்டு வைஷ்ணவர்கள் இங்கெழுந்தருளி, அடியேன் அணிந்திருந்த ஆபரணங்களில் ஒருபக்கத் திருந்தவைகளைக் கழற்றினராக, அடியேன் மற்றொரு பக்கத்து நகையும் பாகவத விநியோகமாகட்டுமே யென்று, இன்னொரு பக்கமாகத் திரும்ப, அவர்கள், அடியேன் விழித்துக்கொண்டதாக நினைத்துப் போய்விட்டார்கள். ஆதலால், அடியேன் இவ்வோர் பக்கத்து ஆபரணங்களுக்கு உரிமையுடையவ ளானேன்.' என்று பதில் பகர்ந்தனர். அதுகேட்ட தாசர், மிகவுங் கோபித்து, 'உரிமைபெற்ற உன்னுறவு எமக்கு வேண்டுவதில்லை' என்று, அன்று உணவின்றிப் பட்டினி யிருந்தனர். இவ்வாறு

நாட்கள் மூன்று கழிந்தன. தாசருஞ் சீற்றந் தீர்ந்து உணவு உட்கொண்டபாடில்லை.

இவ்விஷயங்களை எம்பெருமானார் அறிந்து, தம் சீடர்களில் ஒருவரை, அத்தம்பதிகளை யழைத்து வருமாறு ஏவ, தாசரும், பொன்னாச்சியாரும் மடத்துக்கு வந்து, யதிராசர் இணையடிகளில் வணங்கி நின்றனர். அப்போது யதிராசர், தாசரை நோக்கிப் பட்டினியிருக்குங் காரணங் கேட்க, அவர், 'சுவாமி! உரிமை பெற்ற பெண் இடும் ஆகாரத்தைக் கடவுளுக்குக் கண்டருளச் செய்வதும், ஏற்றுண்பதும் தகுமோ'? என்று கூற, உடையவர் பொன்னாச்சியாரைப் பார்த்து 'நீ உரிமையடைந்தமை யெவ்விதம்?' என்ன, அவரும், நடந்தவைகளை யுரைத்து வணங்கி நின்றனர்.

பின்னர், உடையவர் தாசரை நோக்கி, 'உரிமை பெற்ற இவளை நீர் என்ன செய்ய விரும்புகின்றீர்?' என்று கேட்க, தாசரும், 'தேவரீர் திருவுள்ளம்போல் செய்து கொள்ளலாம்' என்ன, உடையவரும், 'ஆயின், இந் நாச்சியாரை யெமக்கிஷ்டரான வொருவருக்கு அளித்துவிடலாமோ?' என்ன, அவரும் அவ்வண்ணமே செய்யச் சம்மதித்த வளவிலே, இராமாநுசர், 'தாசரே! இப்பொன்னாச்சியாரை யெமக்கிஷ்டரான உமக்கே கொடுத்தருளினோம்' என்றனர். ஆசாரியரின் ஆணையைக் கடவாத பிள்ளையுறங்கா வில்லிதாசரும், மறுவார்த்தையின்றி மீண்டும் தம் மனைவியை மனைவியாக வேற்றுக்கொண்டனர்.

அப்பால், உடையவர் தமது சிஷ்ய கோஷ்டிகளை நோக்கி, 'நீங்கள் உங்கள் ஆடையைக் கிழித்தவர் வைஷ்ணவர் என்று அறிந்தும், அவரைப் பழித்தீர்களே! பிள்ளையுறங்கா வில்லிதாசரின் திருவுள்ளத்தைக் கண்டீர்களோ? நாம் திருக்காவிரியில் நீராடி வரும்போது, தாசரின் திருக் கரங்களைப் பற்றி வருவதற்கு நீங்கள் அருவருப்பு கொண்டீர்களே! இப்போது அவர் ஒழுக்கம் தெரிந்தீர்களோ?' என்று கூறி, தாசரை யருகழைத்து, அவர் தேகத்தைத் தடவிக் கொடுத்து, 'உமது பரிசத்தால் எம்மைப் பரிசுத்தமாக்கும் பரிசவேதி நீர் எமக்கு' என்று சகலரும் அறியக் கூறி, அவர்க்கு மிகவுங் கிருபை செய்தருளினர்.

இதனால், உதிக்கும் குலத்தாலன்று உயர்வும் தாழ்வும் ஒருவர்க்கு உண்டாவது; ஆண்டவனிடமும், அவனடியார்களிடமும் ஒருவர் கொண்டுள்ள பக்தியும், அவரது அகத்தூய்மையும் ஆகிய இவைகளே அவரை உயர்விக்கின்றன என்பது நன்கு விளங்குகின்ற தன்றோ?

அந்நாள் முதல் பொன்னாச்சியாரும், பிள்ளையுறங்கா வில்லிதாசரும் உடையவர் திருவடிகளே தம்மை யுய்விக்கும் உயர்பொருளென்று மதித்து, அவர் மடத்தை விட்டு அகலாராய் அங்கேயே அனவரதமுங் கைங்கரியத்தி லீடுபட்டிருந்தனர். பிள்ளையுறங்கா வில்லிதாசரும் உடையவர் பரிசத்தாலே சரீர சுத்தமடைந்தனர்.

இவ்வண்ணம் தாசரும், அவர் கற்பிற் சிறந்த தேவியாரும் எம்பெருமானார் இணையடிகளிற் பக்தி பூண்டு பணிவிடை செய்து வருங் காலையில், தாசருக்கு அந்திம தசை வந்தடைந்தது. அஃது துணர்ந்த தாசர், பாகவதர்களை வரவழைத்து, அவர் திருவடிகளை விளக்கி ஸ்ரீபாத தீர்த்தத்தைக் கிரகித்து, 'அடியேன் செய்த அபராதம் பொறுத் தருள்க' என்று அவரடிகளை வணங்கினர். பின்னர், பொன்னாச்சியாரை யருகழைத்து, 'பெண்ணே! நம்முடைய பிரிவைக் குறித்து நீ சிறிதும் வருந்த வேண்டாம்' என்று பணித்து, உடையவர் உபயோகித்த குறடுகளையும் தம் சிரமீதணிந்து, உடலை நீத்து, உயர்பத மடைந்தனர்.

உயிர்க்காதலர் உயிர் நீங்கியது கண்ட பொன்னாச்சியார், அவர் ஆணைப்படி அவலங் கொள்ளாது, திருமாளிகையின் வாசலைத் திருவலகிட்டு, நீர் தெளித்துக் கோலமிட்டு, பந்தல் போடுவித்துப் பாகவதர்களின் வரவைப் பார்த்திருந்தனர். அப்பால், திருமாலடியார்கள் திரள் திரளாக ஆங்கெழுந்தருளித் திருக்காவிரிக்குச் சென்று, திவ்யநீர் கொணர்ந்து, மந்திரமோதித் தாசரின் பூதவுடம்பிற்கு மஞ்சனமாட்டி, பன்னிரு திருமண்ணும் பாங்காகச்

சாத்தி, அழகிய மணவாளனிடமிருந்து வந்த திருப்பரிவட்டம், திருத்துழாய்மாலை முதலியவற்றால் அலங்காரஞ் செய்தனர். அப்போது பொன்னாச்சியாரும் தம்மை யாடை யாபரணங்களால் அலங்கரித்துக் கொண்டு, ஆண்டுக் குழுமியிருந்த அடியார் கூட்டங்களுக்கெல்லாம், ஆடையும், அணிகலனும், அம்பொனும், வெற்றிலை பாக்கும் வழங்கி நின்றனர். பின்னர், அடியார்கள், கரும்புகளெடுத்து, இராமானுச நூற்றந்தாதி சேவித்துத் திருச்சூர்ணமிடித்து, எண்ணெய் சுண்ணங் கொண்டாடி, பிள்ளை யுறங்காவில்லிதாசரின் திருமேனியைப் பிரம்மரதத்தில் எழுந்தருளுவித்துக் காவிரிக் கரைக்கு எழுந்தருளப் பண்ணிக் கொண்டு சென்றனர்.

பிரம்மரதம் மறையும் வரையில் பொன்னாச்சியார் அதையே நோக்கிக் கொண்டிருந்து, அது மறைந்தவளவிலே, பதியை யிழந்த சோகம் தலைக்கேறத் தரிக்க முடியாத் துயரடைந்து,

*மாரி மாக்கடல் வளைவணற்கு இளையவன்
வரை புரை திருமார்பில்
தாரினாசையில் போயின நெஞ்சமுந் தாழ்ந்த
தோர் துணை காணேன்;
ஊருந் துஞ்சிற்று உலகமுந் துயின்றது
ஒளியவன் விசும்பியங்கும்
தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன
செய்வ தொன்றறியேனே.

என்று திருமங்கைமன்னன் திருவாய்மலர்ந்தருளிய பாசுரத்தை யநுசந்தித்துக் கையெடுத்துக் கும்பிட்டு, நிலைகொள்ளாமற் கீழ்வீழ்ந்து, ஆவி நீத்துத் தம் ஆருயிர்த் துணைவரைப் பின்தொடர்ந்தனர். அடியார்கள் அப் பெண்ணீர்மை குன்றாப் பெருந்திருவின் திவ்விய சரீரத்தையும், பிள்ளை யுறங்காவில்லிதாசர் பிருந்தாவனத்தின் பக்கத்திலேயே பள்ளிப்படுத்தினர்.

பொன்னாச்சியார், பாகவதர்கள் தம் நகைகளைக் களவாடும்படிக் கண்ணுறங்கி யிருந்தமையால், பாகவத கைங்கரியத்தி லீடுபட்டிருந்த தம் பர்த்தாவுக்கேற்ற பதிவிரதை யென்பதும், அவர், அப் பாகவதர்களிடத்துக் கொண்டிருந்த எல்லையில்லாத பக்தியும்,—கணவர் உயிர் நீத்தபோது அவர் கட்டளைப்படிக் கண் கலக்கங் கொள்ளாது தரித்திருந்தமையால், அவர், கணவர் சொற்கடவாத ஒழுக்கமுடையவரென்பதும்,—கணவரது பிரம்மரதம் மறைந்ததும், திருமங்கைமன்னன் பாசுரத்தை யநுசந்தித்ததிலிருந்து, அவர், ஆன்றோர் அருளிச் செயல்களில் பெற்றிருந்த பயிற்சியும்,—பிரம்மரதம் மறைந்த வக்கணத்திலேயே ஆவி நீத்தமையால், உத்தம பத்தினிப் பெண்டிர் என்பதும்,—மேற் கூறிய வரலாற்றிலிருந்து நன்கு அறியக்கிடக்கின்றன.

மேலும், அந் நாச்சியார் தம் கணவரின் பெரும் பிரிவாலேற்பட்ட துன்பம் ஆறும் பொருட்டு ஆழ்வார் பாசுரத்தை யநுசந்தித்ததைப் போல் அந் நாளில், வாழ்க்கையில் நேரிடும் இன்பம், துன்பம் இரண்டிலும் நம் பெரியோர்கள் ஆன்றோர் அருளிச் செயல் மொழிகளையே யநுசந்தித்து, அளவில் மகிழ்ச்சியும், ஆறுதலும் முறையே அடைந்திருந்தனர் என்பதும் அறியத்தக்க தொன்றாகும்.

* இதன் உரை 'மேகம் போலும், கருங்கடல் போலும் நிறமுடையவனும், சங்த போன்ற வெளுத்த உருவுடைய பலராமனுக்குத் தம்பியும் ஆன கிருஷ்ணனது மலைபோல் விசாலமான அழகிய திருமார்பில் பொருந்தியுள்ள திருத்துளவமாலையில் ஆசையோடு சென்ற எனது நெஞ்சமும் விரைவில் வாராமல் தாமதித்து விட்டது; இனி, எனக்குத் துணையாவார் ஒருவரையுங் காணேன்; ஊரும் உறங்கிவிட்டது; உலகமும் உறங்கிவிட்டது; ஆகாய வீதியிற் செல்லும் சூரியனது தேரும் போய் விட்டது; திசைகளெல்லாம் இருண்டு மறைந்து விட்டன; இனி யான் செய்வதொன்றையும் அறியாதவளானேன்' என்பதாம்.

சித்திரப் பகுதி

நிழல் சித்திர ராமாயணம்

(ஸி. சிவராமமூர்த்தி M. A.)

அமுதப் பங்கீடு

தாடகை

அஹல்யா சாப விமோசனம்



பரசுராமர்



கூனியும் கைகேயியும்

சூர்ப்பணகா பங்கம்

மாய மான்

மாரீச வதம்

ராவணனும் ஜடாயுவும்



ஜடாயு மோக்ஷம்

ஸாகர தரிசனம்

கணையாழி

லங்கா தஹனம்



கும்பகர்ணன் துயில்

ம்பகர்ணன்

கும்பகர்ணன் போர்

நாகபாச விமோசனம்

ராம பட்டாபிஷேகம்